கல்கி



KALKI 16.9.1962

30 காசு



டெட் கொண்டு சலவை செய்த ஆடைகளிலுள்ள நம்பிக்கை



இதோ இந்த இணைபிரியாத விளையாட்டுத் தோழர்களின் கம்பீரத் தோற்றத்திற்கும், தன்னம்பிக்கைக்கும் காரணம் அவர்கள் அணிந்திருக்கும் ஆடைகள் பூப்போன்ற புதுமையுடன் பளிச்சென்று டெட் கொண்டு சலவை செய்யப்பட்டதால்தான்.

டெட் ஒரு செயற்கை சலவைப் பொருள். கண்ணுக்குப் பளிச்சிடும் பொருள் கலந்துள்ள டெட் ஒரு பூர்ண சலவைப் பவுடராகும். கடின மற்றும் லேசான நீரிலும் டெட் ஏராளமாக நுரைக்கிறது. பவித்திரமான ஆடைகளையும்—பருத்தி, சில்க், ரேயான், கம்பளி—வெள்ளை அல்லது பல வண்ணங்களிலுள்ள ஆடைகளையும்—எவ்வித அபாயமுமின்றி திறமையுடன் டெட் சலவை செய்கிறது.

டெட்டின் சலவை உங்களுக்கும் பெருமை

டெட்டினால் சலவை செய்தால் அதிக வெண்மை கிடைக்கும்

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்-1.

சுபகிருது, ஆவணி 31உ

கல்கி

செப்டம்பர் 16, 1962

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே ; சம்பவங்களும் கற்பனையே.



சிகரெட் உற்பத்திக்கான ஆள்பலம், நிதி, பொருள் நிறைவு ஆகிய எவ்வளவோ வசதிகள் நம் நாட்டுக்கு உள்ளன. எனினும் பாரதத்திலே, சிகரெட்டுத் தொழில் தனக்குரிய உயர் நிலையை இன்னும் எய்த முடியவில்லையென்றால், அது இந்திய மூலதனம் சுணங்கிப்போயிருக்கிறது என்பதனாலோ, அல்லது தேர்ச்சிவாய்ந்த தொழிலினம் இல்லாமையாலோ அல்ல. ஆனால் இந்தியாவில் வாணிபக் கூட்டுறவு அமைத்த அந்நியர்களின் ஏகபோக உரிமையாட்சியினால்தான்.

இந்திய சிகரெட் தொழிலுக்கென்ன இடர்?



பனமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT. 709-A.T.M Greens' Advtg.



மலர் 22 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 7

விளையாட்டு வினையாயிற்று

ஆசிய விளையாட்டுக் கழகத்தின் உதவித் தலைவர் ஸ்ரீ ஸோண்டி அவர்கள் தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று இந்தோனீசியாவின் தலைநகரிலிருந்து இந்தியாவுக்குப் பறந்து வரும்படி நேர்ந்து விட்டது. ஆம்! விளையாட்டு வினையானதுதான் காரணம்.

இந்தோனீசியாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில், பார்மோஸாவும், இஸ்ரேலும் கலந்து கொள்ள இந்தோனீசிய ஜனாதிபதி டாக்டர் சுகர்னோ அனுமதிக்கவில்லை.

இந்தோனீசியா சுதந்திர நாடாயினும் கம்யூனிஸ்ட் சீனாவுக்கு அருவருப்புத் தரத்தக்க காரியங்கள் செய்யக் கூடாது என்ற நோக்கத்தோடு, கம்யூனிஸ்ட் சீனாவின் விரோத நாடான பார்மோஸா விளையாட்டு வீரர்களைக் கலந்து கொள்ள அனுமதிக்கவில்லை.

இஸ்ரேல் யூத நாடு. முஸ்லீம் நாடான எகிப்துக்கு விரோத பாவமுள்ள நாடு. எகிப்தின் தலைவர் நாஸரும் டாக்டர் சுகர்னோவும் நண்பர்கள். இந்தோனீசியாவும் முஸ்லீம்கள் பெருவாரியாக உள்ள நாடு. ஆகவே, எகிப்துக்கு விரோதி தனக்கும் விரோதி என்ற பாவனையில் இஸ்ரேலும் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப் படவில்லை.

இவ்வளவுக்கும் எகிப்து ஆசிய நாடுகளில் ஒன்றாகவே கருதப்படுவதில்லை!

ஆசியாவின் இருநாடுகள் பங்கெடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படாதது பங்கெடுத்துக் கொண்ட நாடுகளுக்கு மனத்தாங்கலை விளைவித்திருக்கிறது. மேலும், இஸ்ரேலும் பார்மோஸாவும் இந்த விஷயத்தை ஆசிய விளையாட்டுக் கழகத்தின் உபதலைவரும் இந்தியருமான ஸ்ரீ ஸோண்டி அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்தன. இந்தோனீசிய சர்க்காருடன் எவ்வளவோ முயன்றும் அவரால் சௌஜன்யம் காண முடியவில்லை. எனவே முக்கியமான இரு ஆசிய நாடுகள் இடம் பெறாத இதனை ஆசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டி என்று குறிப்பிடாமல் வெறுமனே, "விளையாட்டுப் போட்டி" என்று குறிப்பிட்டால் போதும் என்றார்.

அதற்கு இந்தோனீசிய மக்கள் தெரிவித்த கண்டனம், இந்தோனீசியா உண்மையில் நாகரிகமடைந்த நாடுதானா என்ற சந்தேகத்தையே விளைவித்து விட்டது!

இவ்வளவு எதிர்ப்பும் ஆர்ப்பாட்டமும் இந்தோனீசிய சர்க்காரே இந்தியாவுக்கு எதிராகத் தூண்டிவிட்டவை என்று சொல்லப்படுகிறது. ஆர்ப்பாட்டக்காரர்கள் டாக்டர் சுகர்னோவின் அரண்மனையிலிருந்துதான் கிளம்பினார்களாம். இந்தோனீசியப் போலீஸார், ஆர்ப்பாட்டக்காரர்களைத் தடுத்து நிறுத்துவதற்குப் பதிலாக இந்திய தூதுவர்களை நோக்கிச் செல்லப் பாதையை ஒழுங்குபடுத்திக் கொடுத்தார்களாம். இந்திய தேசிய கீதம் பாடப்பட்டபோது, பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் உள்படக் கூடியிருந்தோரில் பலர் கூக்குரலிட்டுக் கேலி செய்து ரகளை கட்டினார்களாம்!

இவையெல்லாம் இந்திய சர்க்காரிடம் இந்தோனீசிய சர்க்கார் புதிதாக வளர்த்துக் கொண்டுள்ள விரோத பாவத்தைக் காட்டுகிறது. நேற்றுவரை அன்னியோன்னியமாக இருந்த சர்க்காரில் இந்தியாவின் செல்வாக்கு குறைந்து கம்யூனிஸ்ட் சீனாவின் செல்வாக்கு வளர்ந்து வருகிறது என்பதுதான் இதற்குப் பொருள்.

1947-ம் ஆண்டு, தில்லியில் ஆசிய நாடுகளின் மகாநாடு நடைபெற்றது. அப்போது எல்லா நாடுகளும் இந்தியாவையே தலைமைக்கு எதிர் நோக்கி நின்றன!

அந்தப் பதவியை இழந்து விட்டோம் என்பதை மேற்கண்ட சம்பவங்கள் கூறுகின்றன! இழந்து வரும் செல்வாக்கை நிலை நிறுத்திக் கொள்ள உடனடியாக முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய பிரதமர் ஸ்ரீ ஸோண்டிக்கு ஆதரவு தருவதற்குப் பதில் அவருடைய நடவடிக்கைகளில் குற்றம் கண்டுபிடிக்க முயன்றார். இந்தியாவின் கௌரவத்தைக் காப்பாற்ற யாதொரு முயற்சியும் செய்யவில்லை. பரிதாபம்!

என்ன சேதி?

செக் மொழியில் தமிழ் நூல்கள்

செக்கோஸ்லோவேகியாவில் உள்ள சார்லஸ் சர்வ கலாசாலையின் திராவிட மொழித் துறைத் தலைவர் டாக்டர் ஜ்வெலிபில் கமில், சிலப்பதிகாரத்தைத் தமது மொழியில் செய்திருக்கிறாராம். தற்போது பேராசிரியர் கல்கி அவர்களின் 'அலை ஓசை'யையும் 'சிவகாமியின் சபதத்'தையும் மொழிபெயர்த்து வருவதாகவும் டாக்டர் மு.வ. அவர்களின் 'கரித் துண்டு' என்ற நவீனத்தையும் செக் மொழியில் எழுதி வருவதாகவும் தெரிவித்திருக்கிறார். ''திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்' என்ற கவியின் வாக்குப் பலித்து வருகிறது.


டாக்டர் கமில், தமிழகத்துக்குப் புதியவரல்லர். நீண்ட நாட்களாகத் தமிழ் ஆராய்ச்சித் துறையில் பணியாற்றித் தமிழ் மொழிக்குத் தொண்டு புரிந்திருக்கிறார்.

பிரிவினைக்கு உரமூட்டியது யார்?

சென்ற வாரம் சென்னைக்கு வந்திருந்த பாரத ஒருமைப்பாடு கமிட்டியின் முன்னர் கருத்துக்களைத் தெரிவித்தவர்கள் தி. மு. க.வைப் பற்றியே பேசித் தீர்த்தார்கள். ஆனால் அவர்களில் யாரும் இந்த நாட்டில் பிரிவினை மனப்பான்மைக்கும் வேற்றுமை வெறுப்புக்களுக்கும் மூலகாரணமாக இருந்து வருபவரான திரு ஈ. வெ. ரா.வைப் பற்றியாவது அவரது தி. க. வைப் பற்றியாவது பேசவில்லை. இதற்குக் காரணம் யாருக்கும் புரியாத ரகசியமல்ல!

தி. மு. க.வினர், திரு ஈ. வெ. ரா.வுடன் கருத்து மாறுபாடு கொண்டு வெளியே வந்தவர்கள். வெளியே போனவர்களை வசைபாடுவதற்காகக் காங்கிரஸ்காரர்கள், திரு ஈ. வெ.ரா.வுக்கு மேடை அமைத்துக் கொடுக்கத் தொடங்கியதிலிருந்து தமிழ் நாட்டில் சற்றுச் சிந்திக்கும் திறம் படைத்தவர் யாரும் காங்கிரஸைப் பழைய காங்கிரஸாக நினைப்பதில்லை. திராவிடக் கழகத்துக்கு வோட்டா, தி. மு. க.வுக்கு வோட்டா என்றே யோசனை செய்கின்றனர். தமிழ் நாடு பாரதத்தை விட்டுப் பிரிய வேண்டும் என்று சொல்கிற கட்சியை ஆதரிப்பதா; தமிழகம், கேரளம், கன்னடம், ஆந்திரம் ஆகிய நான்கு மொழிப் பிரதேசத்தைக் கொண்ட ராஜ்யத்தைக் கோரும் கட்சிக்கு வோட்டுப் போடுவதா என்றே யோசிக்கின்றனர். இப்படி யோசிக்கும் போது, காங்கிரஸைவிட தி. மு.க.வே மேல் என்று தமிழ் நாட்டு வாக்காளர்கள் நினைத்தால் அதில் என்ன வியப்பிருக்கிறது!

எதைக் கொல்ல எந்த ஆயுதம்?




வருமுன் காத்தனர்

ஜோலார்ப் பேட்டை — சென்னை ரயில்வே பாதையில் விரிஞ்சிபுரம் என்ற ஸ்டேஷனுக்கும் லத்தேரி என்ற ஸ்டேஷனுக்கும் இடையில், சென்ற செப்டம்பர் 3-ம் தேதி இரவு பெய்த பெருத்த மழை காரணமாக ரயில் தண்டவாளத்தின் அடியிலிருந்த மண் அரித்துக் கொண்டு போய், தண்டவாளங்களும் கழன்று ரயில் பாதை உடைந்து கிடந்ததாம். அந்த வேளையில் செல்லவிருந்த பெங்களூர் மெயில், நீலகிரி எக்ஸ்பிரஸ், கொச்சின் எக்ஸ்பிரஸ் ஆகிய மெயில் வண்டிகளைக் கிராம மக்கள் கூடி நின்று விளக்குகளைக் காட்டி நிறுத்தி விபத்தைத் தவிர்த்திருக்கிறார்கள். இப்படி அரும் உதவி செய்த கிராம மக்களைப் பாராட்டுகிறோம்!

நேப்பாளத்தைப் பாராட்டுகிறோம்

சின்னஞ் சிறு நாடான நேப்பாளம், சீனாவின் கெடுபிடிக்குப் பணியாமல்



தைரியமாகத் தனது கொள்கையில் உறுதியாக நின்றிருக்கிறது.

நேபப்பாள வீரர்கள் இந்தியப் படையில் சேருவதை நேப்பாள சர்க்கார் தடுக்க வேண்டும் என்ற சீனாவின் கோரிக்கையை நேப்பாளம் மறுத்து விட்டது. நேப்பாள வீரர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலிருந்தே, ஏன் அதற்கு முன்பிருந்தே, இந்தியப் படையில் இந்திய மண்ணின் உரிமைக்குப் போராடி வந்திருக்கிறார்கள். நேப்பாள மக்கள் மதத்தாலும், பூகோள ரீதியாகவும் பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தியர்களோடு ஒன்றிப் பிணைந்தவர்கள். அவர்களிடையே மித்ர பேதத்தைக் கிளறிவிடச் சீன சர்க்கார் எடுத்துக் கொண்ட முயற்சியை நேப்பாள அரசாங்கம் முளையிலேயே கிள்ளி விட்டதைக் கண்டு எந்த இந்தியன்தான் மகிழ மாட்டான்? அது மட்டுமின்றி நேப்பாள வெளிவிவகார மந்திரி, இந்தியாவின் நட்பைத் தியாகம் செய்து, சீன உறவை வளர்த்துக் கொள்ள நேப்பாளம் தயாராக இல்லை என்று சந்தேகத்துக்கு இடமின்றிக் கூறியிருப்பது பாரத மக்களுக்குப் பெரும் திருப்தியை அளித்திருக்கிறது!

திட்ட போதையும், தங்க வேட்டையும்



சில கமிட்டிகள் கூடச் செயலாற்றி மறைந்தும் விட்டன. ஆனால் நிலைமையில் மட்டும் கணிசமான மாறுதல் காணவில்லை. இதற்குக் காரணம் முக்கியமாக, அரசியல் கட்சியின் தலையீடு. லஞ்ச ஊழல் என்பது நிர்வாக சம்பந்தமான பிரச்னை மட்டுமல்ல; அரசியல் பிரச்னை என்பதை மறக்கக் கூடாது. கட்சி உறுப்பினர்கள் நிர்வாகத்தில் தலையிட்டு அவரவர்களுக்குத் தேவைப்படும் சலுகைகளை அமைச்சர்கள் வழியாகவே பெற்றுக் கொள்ளும் முறை மாறினால் தான் விமோசனம் ஏற்படும். அந்த நிலைமை மாறுவதாகத் தோன்றவில்லை. ஸ்ரீ மித்ராவின் எச்சரிக்கை மட்டும் ஒலித்துக் கொண்டே யிருக்கும்.

ராணுவ பலம் பொருந்திய கம்யூனிஸ்ட் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் அகப்பட்டுள்ள ஒரு நாடு, தனது பண்பாட்டுக்கும் பரம்பரை வழக்கத்துக்கும் விரோதமில்லாமல், துணிச்சலோடு பேசுவது என்பது எளிதான காரியம் அல்லவே!

மந்திரியின் எச்சரிக்கை

அதிகார வர்க்கத்தினரிடையே—மலிந்து விட்ட லஞ்ச ஊழல்களை ஒழிக்காவிட்டால் நாட்டில் வெகு சீக்கிரத்தில் கலகங்கள் ஏற்படக் கூடும் என்று மனம் நொந்து ஒரிஸ்ஸாவின் துணை முதல் அமைச்சர் ஸ்ரீ பிரேன் மித்ரா எச்சரிக்கை விடுத்திருக்கிறார். தாம் மந்திரியாக இருந்தும் ஒன்றும் செய்ய முடியாத நிலைமையில் இருப்பதைவிட, விலகிக் கொள்ளுவதே மேல் என்று எண்ணுவதாகச் சொல்லுகிறார். அவருடைய தைரியத்தை மெச்ச வேண்டும். ஒரிஸ்ஸா சர்க்கார் ஒரு கல்வி நிலையத்துக்கு அளித்த ரூ. 1000/- நன்கொடையைப் பெற ரூ. 250/- லஞ்சம் கொடுக்க வேண்டியிருந்த நிலையைக் கூறியிருக்கிறார். ஸ்ரீ மித்ரா கூறியது ஒரிஸ்ஸாவில் மட்டுமல்ல, எல்லா ராஜ்யங்களுக்கும் பொருந்தும். எல்லாப் பொருள்களும் விலை உயர்ந்து விட்டது போல் லஞ்சங்களுக்கும் விலை உயர்ந்து விட்டது. இதைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் பல விவாதங்கள் நடைபெறுகின்றன; ஆலோசனைகள் சொல்லப்படுகின்றன.

எழும்பூருக்குப் பரிசு

சென்னை எழும்பூர் ஸ்டேஷன் 'மிகவும் சுத்தமான ஸ்டேஷன்' என்று ஆயிர ரூபாய்ப் பரிசு பெற்றிருக்கிறது. இதைக் கேட்டுத் தமிழ்மக்கள் பெருமிதம் அடைவார்கள். ஏனெனில் எழும்பூர் ரயில் நிலையத்தை அதிகமாகப் பயன்படுத்துபவர்கள் தமிழ் மக்களே அல்லவா? ரயில் நிலையத்தார் எவ்வளவு முயன்றாலும், அதை உபயோகப் படுத்தும் மக்கள் துப்புரவு உணர்ச்சி யற்றவர்களாக இருந்தால், அந்த ஸ்டேஷன் அசுத்தமாகத்தான் இருக்கும். எழும்பூருக்குக் கிடைத்த பரிசு, தமிழர்களின் துப்புரவு உணர்ச்சிக்கு அளித்த பரிசு என்றே கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள், இதிலேயே திருப்தி அடைவதற்கில்லை. தெருவில் போய்க் கொண்டிருக்கும்போதே நடுத் தெருவில் புகையிலைக் காவியைத் துப்புவது, கண்ட இடத்தில் காகிதக் குப்பைகளைப் போடுவது போன்ற வழக்கங்களை விடவேண்டும். மேனாடுகளைப் பார்த்து வந்தவர்கள் அங்கு நிலவும் சுத்தத்தைப் பற்றிக் கூறும்போது நாமும் அப்படிப் பெயரெடுக்க வேணுமென்று ஆசையாக இல்லையா?

கடல் கடந்த கலைச்செல்வம்





தமிழகத்திலிருந்து பல்லாயிரம் காதங்களுக் கப்பால் உள்ள, அமெரிக்க நாட்டில், மாஸ்ஸாசூஸெட்ஸ் ராஜ்யத்தில், ஒரு கிராமத்தில் நமது பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெறுகிறது. பரத நாட்டியம் என்றாலும் இதர கலப்புகள் ஏது மற்ற தூய கர்நாடக பரதநாட்டியம். பாரதப் பண்பு எவ்வளவு தொன்மை வாய்ந்ததோ அந்தத் தொன்மைச் சிறப்பு குறைவுபடாத பரதம் நடைபெறுகிறது. உலகின் பற்பல பகுதிகளைச் சேர்ந்த அறுநூறு கலைஞர்கள் அந்த மண்டபத்தில் நிறைந்திருக்கின்றனர்.

அவ்வளவுக்குத்தான் அங்கே இடவசதி. எல்லோரும் தேர்ந்த ரசிகர்கள்; ஆசிரியர்கள், மாணவர்கள், நிருபர்கள், 'கிரிடிக்குகள்'. இப்படியாக நடன நுட்பங்களையும் சிறப்புக்களையும் ஆராயும் திறன் படைத்தவர்களே அனைவரும்.

அலாரிப்பு, ஜதிஸ்வரம், 'மதுரா நகரிலோ' பதம், தில்லானா என்று சென்னை ரசிகர்கள் முன்னணியில் நிகழ்வது போலவே தான் சற்றும் சம்பிரதாயம் வழுவாது அமெரிக்காவிலும் நிகழ்ச்சி நடக்கிறது. இந்தச் சுத்த பரதநாட்டியத்தை அந்த அயல் நாட்டு வல்லுநர்கள் எப்படி ரசித்தனர்? அவர்களுக்கு என்ன புரிந்தது? அதை அமெரிக்கப் பத்திரிகைகள் வாயிலாகவே அறிய வேண்டும். இதோ விமரிசகப் பிரமுகர் வால்டர் டெர்ரி என்ன சொல்கிறார் கேளுங்கள்:

''இந்த நடனத்தின் ஆச்சரியம்தான் என்னே! ஒரு விரல் நுனி என்ன பேச்சுக்கள் பேசுகின்றன! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பழகிப் பழகிப் பண்பட்டுச் சம்பிரதாயமாக வந்துள்ள இக்கலையில் அந்த ஒரு விரல் வாவென்று அழைக்கும், அல்லது போ என்று விரட்டும்; அன்புடன் வரவேற்கும்; எச்சரிக்கவும் செய்யும்; உறுதியளித்து ஆறுதல் சொல்லும்; அல்லது நையாண்டியும் செய்யும்; அலட்சியமாகப் புறக்கணிக்கும், அல்லது அதிகாரத்துடன் ஆணையிடும்.''

இப்படி விரல் மூலம் பரதக் கலைச் சிறப்பை மலர்விக்கும் விறலி யார் என்று ஊகிக்க முடிகிறதல்லவா? தூய நடனக் கலைஞர்களை விரல் விட்டு எண்ணத் தொடங்கினால் முதலில் நிற்கும் ஸ்ரீமதி பாலசரஸ்வதி அவர்கள்தான் என ஊகிக்கிறீர்கள் அல்லவா?

''இப்படிப்பட்ட அதிசய விரல்களை உடையவர் ஸ்ரீமதி பாலசரஸ்வதி'' என்று கூறி ஊகத்தை உறுதிப் படுத்தும் விமரிசகர் மேலும் கூறுகிறார்: ''அவரது முக பாவங்கள் வார்த்தைகளையும் வெட்கச் செய்யும் ஆற்றல் படைத்தவை. அவருடைய நடனங்களில் உடல் அசைவுகளைவிட, கருத்துக்களின் மாற்றங்களும், ஓட்டங்களும், சிதைவுகளும், நுட்பங்களும் பிரதானமானவை. உதடு அசைப்பிலும், கண்ணிமைக் கொட்டிலும் அவர் வெளிக் காட்டும் அபூர்வ பாவங்களை நுணுக்கமாகப் பருக வேண்டுமானால், மேடைக்கு மிக அருகிலே இருக்க வேண்டும்.''

இதிலிருந்து ஸ்ரீமதி பாலாவின் கலை தேசத்தையும் காலத்தையும் கடந்தது என்று நிதரிசனமாகிறதல்லவா? இதை அப்படியே ஒப்புக் கொள்ளும் ரிச்சர்ட் வி. ஹாப்பல் என்ற விமரிசகர், ''கலப்படமே இல்லாத அப்பட்டமான பரதநாட்டியத்தைக் காண வேண்டுமானால் 'ஜாகப்ஸ் பில்லோ' விழாவில் பாலசரஸ்வதியின் நடனத்தில் காணலாம்'' என 'பெர்க்ஷயர் ஈகிள்' என்ற பத்திரிகையில் பாராட்டியிருக்கிறார். அந்த ஜாகப்ஸ் பில்லோ விழா என்ன என்பதைத் தெரிந்து கொள்வோமா?

நமது சென்னையில் ஆண்டுதோறும் இசை விழாக்களும், நடன நாடக விழாக்களும் நடைபெறுகின்றன அல்லவா? அதே போல் அமெரிக்காவின் ஒரு பகுதியான மாஸ்ஸாசூஸெட்ஸ் ராஜ்யத்தில் ஜாகப்ஸ் பில்லோ என்ற ஒரு கிராமத்தில் ஆண்டுதோறும் ஒரு நடன விழா நடத்தப்படுகிறது. சென்ற முப்பது ஆண்டுகளாக நடைபெற்று வரும் இவ்விழாவில் உலகப் பிரசித்தி பெற்ற நடனக் கலைஞர்கள் பங்குகொண்டுள்ளனர். இங்கே நடனக் கலையைப் பயிலுவிக்கும் ஆசிரியர்கள் உலகத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் வந்திருப்பவர்கள். இவர்களில் முதன்மையானவர் டெட் ஷான் என்பவர். இவரே இந்த விழாவுக்கு நிர்வாகஸ்தர். ஜாகப்ஸ் பில்லோ விழா நடைபெறும் ஷான் அரங்கம் நடனக் கலை சம்பந்தப்பட்ட வரையில் ஒரு புண்ணிய ஸ்தலம் என்றே சொல்ல வேண்டும்.

இங்கேதான் அமெரிக்கா சென்றுள்ள ஸ்ரீமதி பாலசரஸ்வதியின் முதலாவது பரத



திருக்குறளை வடமொழியில் ஆக்கித் தந்த ஸ்ரீ எஸ். என். ஸ்ரீராமதேசிகன் அவர்கள், 'பிறநாட்டு நல்லறிஞர்கள் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்ற பாரதியின் ஆணைக்கிணங்க இப்போது ஆந்திர மகாகவி வேமனாவின் பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். அதோடு இப்பாடல்களை வடமொழியிலும் செய்திருக்கிறார். வேமன பத்யங்களின் இந்தத் தமிழ், சம்ஸ்கிருதப் பெயர்ப்புக்களைச் சென்ற மாதம் கல்வி மந்திரி ஸ்ரீ எம். பக்தவத்ஸலம் அவர்கள் வெளியிட்டார். இவ்விழாவுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்த கேரள ராஜ்ய கவர்னர் ஸ்ரீ வி. வி. கிரி அவர்களும், மற்றும் பல அறிஞர்களும் ஸ்ரீ ராமதேசிகனது நூல்களுடைய சிறப்பைப் பாராட்டிப் பேசினார்கள்.

நாட்டிய நிகழ்ச்சி ஆகஸ்டு மாதம் 26-ந் தேதி நடைபெற்றது. அதைப் பற்றிய வர்ணனை, விமரிசனம் இவற்றைத்தான் மேலே கண்டீர்கள்.

தமிழ் மக்களுடைய கலைச் செல்வங்களில் தலைசிறந்தது என்று கொண்டாடப்படும் பரத நாட்டியத்தைக் கண்டு மோகிக்காத அயல்நாட்டினர்கள் இல்லை. ஸ்ரீமதி பாலசரஸ்வதியின் பரத நாட்டியத்தை நமது நாட்டிலே கண்டு களித்த பல அமெரிக்க நடன ஆசிரியர்கள் இவரை அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்று அமெரிக்க மக்களுக்குப் பரதநாட்டியத்தின் பெருமையையும் அழகையும் காண்பிக்க வேண்டும் என்று ஆவல் கொண்டனர். அதற்கு உகந்த வாய்ப்பும், ஏற்ற சூழ்நிலையையும் ஏற்படுத்திக் கொடுத்தது ''ஜாகப்ஸ் பில்லோ'' நடன விழா.

பாலசரஸ்வதியை இவ்விழாவில் அறிமுகப்படுத்திப் பேசுகையில், விழாவின் நிர்வாகஸ்தர் டெட் ஷான் ''இன்றைய நிகழ்ச்சி சரித்திரப் பிரசித்தி வாய்ந்தது'' என்றும், ''இவர் புகழ்பெற்ற நடனமணிகளுடைய வரிசையின் தொடர்ச்சியோ அல்லது அதன் மணிமகுடமோ என்று வியக்கத்தக்க தகுதி பெற்றவர்'' என்றும் உணர்ச்சியுடன் சொன்னார். மெய்யாகவே அப்படி அமெரிக்கர்களை வியக்கச் செய்தார் ஸ்ரீமதி பாலா என்பதற்கு, நியூயார்க் ஹெரால்ட் ட்ரிப்யூன் உள்ளிட்ட பல ஏடுகள் சான்று கூறுகின்றன.

''இங்கே இந்துக்களுடைய சாஸ்திரீய நடனத்தின் பரிசுத்த வடிவத்தைப் பார்க்க முடிகிறது.'' இது ஸ்பிரிங் ஃபீல்ட் (மாஸ்ஸாசூஸெட்ஸ்) யூனியன் பத்திரிகையில் விமரிசகர் லெவின் வி. ஸ்மித் கூறுவது.

''நாங்கள் பயிலும் நடனக் கலை, இத்தகைய மாபெரும் நடன விதுஷியின் அற்புதமான, நுட்பமான நடனங்களை நேரில் காண்பதனால் அபிவிருத்தி யடைகிறது.'' இது நடனம் பயிலும் மாணவிகள் தங்களுடைய நடன ஆசிரியரிடம் கூறியது.

இந்தப் புகழ் மாலைகளுக் கெல்லாம் சிகரமாக அமைந்தது நடன விழா நிகழ்ச்சி முடிவில் பாலசரஸ்வதிக்கு மாலை அணிவித்த, டெட்ஷான், ரசிகர்களை நோக்கி, ''பரத நாட்டியக் கலையின் மகோன்னதம் உங்கள் முன் நிற்கிறது'' என்று கூறியது.

ஸ்ரீமதி பாலசரஸ்வதிக்குப் பின்னணி இசை வழங்க அவரது புதல்வி குமாரி தனலட்சுமி (தம்பூரா) சகோதரர் 'ரங்கா' (மிருதங்கம்) திரு எஸ். நரசிம்மலு (வாய்ப்பாட்டு) நட்டுவனார் திரு கே. கணேசன் ஆகியோர் சென்றுள்ளனர். இசையை இழைத்தும், குழைத்தும் ஊட்டி நடனத்தை நிறைவு செய்வதே பாலாவுடைய நிகழ்ச்சி நிரலின் தனிப் பெருமை அல்லவா? இந்த அம்சத்தில் அவருடைய குழுவைப் பூரணமாகச் செய்ய அவரது மற்றொரு சகோதரரான வேணுகான விசுவநாதன் அவர்களும் விரைவில் அமெரிக்கா செல்லுவார்.

ஜாகப்ஸ் பில்லோ நடன விழாவில் ஸ்ரீமதி பாலசரஸ்வதியின் நடனம் ஏழு முறை நடைபெற்றது. ஒவ்வொன்றும் வெவ்வேறு நிரல்களைக் கொண்டது. இவ்விழா முடிந்ததும் அமெரிக்காவில் பல பகுதிகளிலுமுள்ள பலப்பல சர்வகலாசாலைகளிலும் நடனப் பள்ளிகளிலும் ஸ்ரீமதி பாலாவின் நாட்டியமும், நாட்டிய போதனையும் நடைபெற விருக்கின்றன. அவரும் அவரது குழுவினரும் டிசம்பர் முடிவுக்குள் சென்னை திரும்புவார்கள். நமது கலையின் வெற்றிக்கொடியை மேலை நாடுகளில் நாட்டி வரும் அவர்களுக்கு நம் மனமார்ந்த வாழ்த்துக்களை அளிக்கிறோம்.

ஜம்மியின்

லிவர்க்யூர்



குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டி கோளாறுகளுக்கு

வழக்கமான மாதாந்திர விஜயம்

எமது வாடிக்கையாளர்களின் நலனையும் சௌகரியத்தையும் முன்னிட்டு எமது டாக்டர்கள் கீழ்க்கண்ட இடங்களில் ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தேதிகளில் விஜயம் செய்கிறார்கள். அப்பொழுது அவர்களைக் கலந்து ஆலோசிக்கலாம்.

இடம்	தேதி	நேரம்	விலாஸம்
திருவனந்தபுரம்	13	9 to 12 பகல் 3 to 5 மாலை	எம். வி. கணபதி அய்யர் & சன்ஸ் ஆட்டங்குளங்கரை
அய்யம்பேட்டை	16	3 to 5 மாலை	டாக்டர் என்.கே. முத்தாலிப் [என்.கே.ஏ. ஹாஸ்பிடல்
தஞ்சாவூர்	17	9 to 11 காலை 3 to 5 மாலை	ராஜா சத்திரம்
பட்டுக்கோட்டை	18	9 to 11 காலை	சத்திரம் ஆபீஸ்
திருத்துறைப்பூண்டி	18	3 to 5 மாலை	டி.வி. சந்திரசேகரம் பிள்ளை, மெடிகல் ஷாப்
மன்னார்குடி	19	9 to 11 காலை	மீனு கிளினிக், காந்தி ரோடு
திருவாரூர்	19	3 to 5 மாலை	அபுபக்கர் பில்டிங்ஸ்
நாகப்பட்டினம்	20	9 to 11 காலை	எஸ். டி. சௌந்தரராஜ பிள்ளை & சன் கெமிஸ்ட்ஸ்
நன்னிலம்	20	3 to 5 மாலை	ஜி. எஸ். ராஜன் & ஆர். ஆர். சுவாமி ஜெனரல் மெர்ச்சண்ட்ஸ்
மாயூரம் டவுன்	21	9 to 11 காலை 3 to 5 மாலை	ராமகிருஷ்ண வைத்திய சாலை 1, கிருஷ்ணராயர் சந்து
சீர்காழி	22	9 to 11 காலை	எஸ். நடராஜன், வாய்க்கால்கரைத் தெரு
விருத்தாசலம்	22	3 to 5 மாலை	ஸ்ரீ நடராஜா மெடிகல் ஹால்
சிதம்பரம்	23	9 to 11 காலை 3 to 5 மாலை	ஸ்ரீ நடராஜா டிஸ்பென்ஸரி, கெமிஸ்ட்ஸ்
கடலூர் என். டி.	24	9 to 11 காலை 3 to 5 மாலை	கமலா & கம்பெனி, கெமிஸ்ட்ஸ் புதுப்பாளையம்
பாண்டிச்சேரி	25	9 to 11 காலை	ஆனந்தா எம்போரியம், டூப்ளே தெரு
திண்டிவனம்	25	3 to 5 மாலை	விஜயா மெடிகல் ஸ்டோர்ஸ்
விழுப்புரம்	26	9 to 11 காலை 3 to 5 மாலை	திரு வாசவி விஹார் ஹோட்டல் பாண்டி ரோடு
திருக்கோயிலூர்	27	9 to 11 காலை	கிருஷ்ண மெடிகல் ஹால் பெருமாள் கோயில் சன்னதித் தெரு
காஞ்சிபுரம்	28	9 to 11 காலை 3 to 5 மாலை	86, சாலைத் தெரு, பெரிய காஞ்சிபுரம்
வேலூர்	29	9 to 11 காலை 3 to 5 மாலை	வி. பி. சிவம் & கோ., கெமிஸ்ட்ஸ் லாங் பஜார்
சித்தூர்	30	9 to 11 காலை	ஓரியண்டல் வாட்ச், ஹைரோடு

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்

திருச்சிராப்பள்ளி — கிளை : கும்பகோணம்

பாவம்

ஆர். சூடாமணி



ஒரு விதமாய்க் கடைசியாக விழிப்பு வந்தது. கண்களைத் திறந்தவுடன் சிறிது நேரம் எதுவுமே தெளிவாயில்லை. தம் மீது கவலை தோய்ந்த முகங்கள் கவிந்திருந்தவை மட்டுமே நிழல் தோற்றமாய் உணர்விலாடின.

கையைப் பிரித்துப் பார்த்தார். சாவி.

சட்டென்று முகமெல்லாம் சூடேறிச் சிவந்தது. தம்மை நோக்கும் முகங்களின் முன் உணர்ச்சியில் ஒரு சுருக்கம். குளித்துக்கொண்டிருக்கையில் யாரோ கதவைத் திறந்துவிட்ட மாதிரியாக.

சாவியைக் கீழே நழுவ விட்டார்.

''இப்போ எப்படி சார் இருக்கு?''

அனகேசன் மெல்ல எழுந்து உட்கார முயன்றார். அவர் உதவிக்கு உடலைச் சுற்றிப் பல கரங்கள் நீண்ட போது இனந் தெரியாத எரிச்சலுடன் மறுபடியும் தலையைக் கீழே சாய்த்தார்.

''பாவம், இன்னும் ரொம்பப் பலவீனமாய் இருக்கார்.''

''மூணு மணி நேரமாய் நினைவே இல்லையே.''

''இப்படி அடிக்கடி உங்களுக்கு வர்றது உண்டா ஸார்?''

''ஷ்....!'' ''ச்!'' ஸ்!''

கேள்வி கேட்ட அப்பாவியைப் பல குரல்கள் மெதுவான கண்டிப்புடன் அடக்கிய ரீங்காரத்தில் அவருக்கு நல்ல வேளையாய்ப் பதில் சொல்ல அவசியமில்லாமற் போயிற்று.

பல்லை இன்னும் கூடக் கிட்டியிருப்பதாக ஓர் உணர்வு. ஆனால் உண்மையில் பற்கள் விடுபட்டுத்தான் இருந்தன. அவைகளை அசைக்க முடிந்தது. கைகால்களில் இழுப்பு இல்லை. நோயின் தாக்கல் அடித்து ஓய்ந்து விட்டிருந்தது. அலை மீண்டபின் வண்டல் மணலைப் போல் உடலில் ஓர் உயர்வுதான் இப்போது.

ரயில் ஓடிக் கொண்டிருப்பது உணர்வாயிற்று. காலையில் பிரயாணம் தொடங்கியது இல்லையா? எல்லாம் நினைவுக்கு வந்து விட்டது. மயக்கத்திலிருந்து நினைவு மாறுமல் கழன்று தனிப்பட்டு விட்டது. நாளை மறுநாள் டெல்லி போய்ச் சேர்ந்து விடலாம். ஸ்டேஷனில் சுப்பிரமணியம் வந்திருப்பாரு? அவர் குடும்பத் தலைவர். எத்தனையோ அலுவல்கள் இருக்கும். ஊர் தெரியாத அவரைச் சந்தித்து அழைத்துப் போக வேறு தகுந்த மனிதர்கள் யாரையாவதுதான் அனுப்பியிருப்பார். அது போதுமே.

''ஏன் ஸார், இன்னும்கூட மயக்கமாக இருக்கா?''

''என்கிட்டே கொஞ்சம் ஆரஞ்சு எஸென்ஸ் இருக்கு, கலந்து தரட்டுமா?''

அனகேசன் கண்களை மூடிக் கொண்டு, தலையை 'வேண்டாம்' என்ற தோரணையில் அசைத்தார்.

''பாவம், ரொம்பக் களைச்சிருக்கார்.''

''ராத்திரி பெஜவாடாவிலே சாப்பாடு கிடைக்கும் ஸார்.''

''விசிறியை இன்னும் நல்லா அவர் பக்கமாகத் திருப்பி விடப்பா.''


கரிசனமுடன் கைகள் பறந்தன. தம் முகத்தில் விசிறிக் காற்று நேராகப் பாய்வதை உணர்ந்து அனகேசன் கண்களைத் திறந்தார்.

''இப்போ சௌகரியமா இருக்கா ஸார்?''

ஆவலும் அனுதாபமும் நட்பும் கலந்த முகம். அதற்கேற்ற மெல்லிய குரல். அடிபட்ட குழந்தையை அரவணைக்கும் பரிவு அந்த நான்கு முகங்களிலும் வீசியது. அவர் தாங்க முடியாமல் தலையைத் திருப்பிக் கொண்டார்.

''பேசக் கூட முடியாமல் களைப்பு ஜாஸ்தியாய் இருக்காப் போலத் தோணுது.''

''இன்னொரு 'அட்டாக்' வந்துடாம இருக்கணுமே'' என்று கவலைப்பட்டார் ஒருவர்



"பாவம், உடம்பை என்ன செய்யுதோ?"

அனகேசன். "எனக்கு ஒன்னும் செய்யலே. உடம்பு இப்போ நல்லாத்தான் இருக்கு" என்றார். ஆத்திரமாய்ப் பேச எண்ணியவர்தான். ஆனால் உடலின் ஆயாசம் குரலை அமுக்கியது. அவர் கோபிக்க முடியுமென்றே அவர்களுக்குத் தோன்றாததால் அந்தப் பொருமலைப் பலவீனமாக மட்டுமே எண்ணி அவரைத் தேற்றலானார்கள்.

"உடம்பு நல்லாயிருக்கா சார்? ரொம்ப சந்தோஷம். நாங்க பயந்தே போயிட்டோம்...."

"ரொம்பக் கஷ்டப்பட்டுட்டீங்க சார்... நாங்க மட்டும் இல்லேன்னா....."

"உடம்பை எப்படி இழுத்தது தெரியுமா?"

அவருக்கு ஆத்திரம் பொங்கியது. மௌனத்தில் அதைப் புதைத்தார்.

இழுக்க ஆரம்பித்த போதே தரிந்து விட்டது. மற்றவர்கள் அவர் உதவிக்கு விரைந்து வந்ததும் சாவி கையில் திணிக்கப்பட்டதும் எல்லாம் மங்கலாய்த் தெரியும். நோய் வடிந்தபோது மயக்கம் போட்டு விட்டது.

இவ்வளவு மாதங்களுக்குப் பிறகு இன்று தானா மறுபடியும் இது வரவேண்டும்? ஊரை விட்டுக் கிளம்பும்போது கூட உடம்பு தெம்பாய்த்தானே இருந்தது? கொஞ்ச நாட்களாய் மயக்கமோ தலைச் சுற்றலோ ஏதும் இல்லை. அதனால்தானே அவர் தங்கை சரசுவும் அவள் கணவர் சுப்பிரமணியமும் தில்லியில் நடைபெறும் தமது மகளின் திருமணத்துக்கு, அவரை வற்புறுத்தி அழைத்தபோது அரை மனத்துடனாவது ஒப்புக் கொள்ள நேர்ந்தது. ஒரே சகோதரி. அவளது ஒரே குழந்தை. தட்ட முடியவில்லை. இல்லாவிட்டால் 'மரகதச் சுடர்' பாதியில் இருக்கும் போது வேலையை நிறுத்தி வைக்க மனம் வருமா? 'புனிதா', 'போட்ச வழி' இவை போன்ற இலக்கியப் பொக்கிஷங்களுக்குப் பின் அவர் தரும் மாபெரும் மகுடமணியாய்ப் பொலிய வேண்டாமா 'மரகதச் சுடர்'?

"உடம்பு கொஞ்சம் தேவலையா சார்?"

மறுபடியும் அந்தக் குரல்கள்! ஹூம். அவர் தலையில் இப்படியா விதித்திருக்கவேண்டும்? நோயின் பிடிப்பு வந்த போது அவர் தனியாகவேனும் இருந்திருக்கலாகாதா?... உதவி செய்ய யாரும் இல்லாவிட்டாலும் இந்த இதமற்ற இரக்கம் இல்லாது போயிருக்குமே.

"ஏன், ஸார் தேவலையா?"

"இன்னும் கூடப் பேச முடியவில்லையா, பாவம்?"

"இப்போது வேணும்னு ஏதாவது கொஞ்சம் சாப்பிடுங்களேன்."

"கைகாலை நல்லா அசைக்க முடியுதோ?"

"உடம்பிலே வலி எங்கேனும் இருக்கா, ஸார்?"

இரு காதுகளையும் இறுகப் பொத்திக் கொண்டு, 'எழுந்து போங்கள், என்னைத் தனியாய் விடுங்கள்' என்று கத்த வேண்டும் போல் இருந்தது அவருக்கு: ஆனால் முதலில், குரலின் அதற்குத் தேவையான பலம் இல்லை. அடுத்தபடியாக அவர்களுக்கு அவர் பொருள் எங்கே புரியப் போகிறது? நன்றி கெட்டவர் என்றுதான் நினைப்பார்கள்.

"என்ன ஸார், பேசாமல் இருக்கீங்களே? மறுபடியும் மயக்கம் வரும் போல இருக்கா?"

அவர் மீது இரண்டு முகங்கள் குனிந்தன: தூக்கி வாரிப் போட்ட பதை பதைப்பில் தேகத்தின் அசதிகூட அடங்கி விட்டது... துள்ளி எழுந்து உட்கார்ந்தார். முகத்து வியர்வையைத் துடைத்தெறிந்தார்.

"இல்லே, இல்லே. எனக்கு உடம்பு ஒன்னுமில்லே. சரியாய்ப் போச்சு."

"பாவம், ரொம்ப நேரம் கட்டையாய் விறைச்சுப் போயிட்டீங்க."

"ஓஹோ!" குரலின் நிதானம் அவர்களை நெருங்கவிடாதிருக்க எழுந்த சுவர். அவர்கள் அதை அறியவில்லை. இரக்கம் அவர்களின் அறிவுக்குத் திரையிட்டது.

"கையும் காலும் எப்படி இழுத்தது உங்களுக்கு? பாவம்! ஏன் சார், இந்த மாதிரி பேஷண்ட் நீங்க தனியாகப் பிரயாணம் செய்யலாமா?"

"உங்களைப் போலப் புண்ணியவான்கள் உதவி செய்ய இருக்கும் போது எனக்கென்ன கவலை?" என்றார் அனகேசன். பேச்சின் சவுக்கு அவர்களைத் தீண்டவில்லை.

"அப்பாடா, முதன் முதலாகக் கொஞ்சம் நிறையப் பேசியிருக்காரு!" என்று ஆறுதலுடன் சொன்னான் ஒருவன்.

"எதுவரைக்கும் போறீங்க?"

"தனியாவேயா போகணும்?"

"இப்படி அடிக்கடி வருமா? ஏன் சார்?"

மௌனத்தால் அவர்களிடமும் மௌனத்தின் பிரதிபிம்பம் எழச் செய்ய முயன்றார் அவர். அவர்கள் அந்த ஒதுக்கத்தை உணரவில்லை. மௌனத்தைத் தேக பலவீனத்தின் சின்னமாய் எண்ணிய அந்த உள்ளங்களில் இரக்கம் இன்னும் ஆழ ஊறியது.


"ஐயோ, பாவம்! பேசக்கூடத் திராணி இல்லே."

"மறுபடியும் வேணுமானால் கொஞ்சநேரம் படுத்துக்கிறீங்களா ஸார்?"

"இந்த நோய்க்கு வைத்தியமே பார்க்கலேயா சார், நீங்க?"

"எனக்குத் தெரிஞ்ச டாக்டர் ஒருத்தர் இருக்கார். இப்படித்தான் ஒரு 'பிட்ஸ்' நோயாளி அவர்கிட்டே போனான். இப்போ

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் பயண உண்டியல்களுடன் பத்திரமாயும், கவலையின்றியும் பிரயாணம் செய்யுங்கள்



ரூ. 100 மற்றும்
ரூ. 50 இனங்களில் கிடைக்கும்.




அவர் வியாபாரமும், உல்லாசமும் கலந்த பிரயாணம் ஒன்றுக்குக் கிளம்பத் தயாராயிருக்கிறார். எச்சமயத்திலும், எவ்விடத்திலும் ரொக்கப் பணமாக மாற்றிக்கொள்ளக்கூடிய ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் பயண உண்டியல்களை அவர் தன்னுடன் எடுத்துச் செல்லுகிறபடியால் கவலையின்றி இருக்கிறார்.

நீங்கள் வியாபாரத்திற்காகவோ அல்லது உல்லாசத்திற்காகவோ அடுத்த தடவை பிரயாணம் செய்யும்பொழுது, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் பயண உண்டியல்களை உங்களுடன் எடுத்துச் செல்ல நினைவு வைத்துக்கொள்ளுங்கள்.

அவற்றை பாங்கின் 990 க்கு மேற்பட்ட அலுவலகங்கள் எந்த ஒன்றிலோ, அதன் துணை பாங்குகளின் 500 க்கு மேற்பட்ட அலுவலகங்கள் எந்த ஒன்றிலோ, மற்றும் உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும், தேசமெங்கிலுமுள்ள தலைசிறந்த ஹோட்டல்களிலும் இருக்கும் பாங்கினுடைய பிரதிநிதிகள் மூலமாகவோ ரொக்கப் பணமாக மாற்றிக்கொள்ளலாம்.

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா



இந்தியாவின் தலைசிறந்த பாங்க்.

உங்கள் தந்தி

எந்த இந்திய
மொழியிலும்
உங்கள்
செய்தியை
அனுப்பலாம்



ஆனல் செய்தி
தேவநாகரி
எழுத்தில்
எழுதியிருக்க
வேண்டும்

தபால் தந்தி இலாகா DA

தெல்லாம் அவனுக்கு அப்படி வராதே இல்லேன்னு கேள்வி.''

''அதெல்லாம் சும்மா. இதுக்கு வைத்திய மாவது! என் மாமா ஒருவர் இருக்கார். அம்பத்தஞ்சு வயசாகுது. இன்னும் இப் படியேதான் இந்த நோயில் அவதிப்பட்டுக் கிட்டிருக்கார்.''

''இது இருக்கிறவங்களுக்குப் பாவம், ரொம்பக் கஷ்டம்.''

''ஆமாம். எப்ப வேணும்னாலும் வந் துடலாமில்லே....!''

''இந்த மாதிரி வரவங்களுக்கு எந்த ஆப ரேஷனும் செய்ய மாட்டாங்களாமே?''

''ஆமாம். டேபிள்ளே வலிப்பு வந்திடிச் சுன்னு அன்னிக்கு ஒருத்தன் செத்தே போனான்.''

''பாவம், என்ன கஷ்டம்!''

''நீங்க அவஸ்தைப்பட்டப்போ பார்க் கவே மனசு வேதனைப்பட்டுது சார்!''

''இப்போத் தேவலேதானே?''

''எழுந்திருக்கிறீங்களா, பிடிச்சுக்கவா?''

''பிடிங்கடா, பாவம்!''

பாவம்! பாவம்! பாவம்! சீச்சீ! வேறு உணர்ச்சியே இல்லையா?

''பிடிக்க வேணும். ரொம்ப நன்றி. என் உடம்பு இப்போ நல்லாத்தான் இருக்கு.''

குளியல் அறையில் சிறிது நேரம் தனித் திருந்து தம்மைச் சமாளித்துக் கொண்டார் அளகேசன். அவர்கள் பார்வையிலிருந்து தப்பி அங்கேயே இருந்துவிடலாம் போல் இருந்தது அவருக்கு.

''சீக்கிரமா வெளியே வந்துடுங்க ஸார்!''

''என்ன, இன்னும் வரல்லேயே!''

''மறுபடியும் விழுந்திருப்பாரோ?''


''ஸார், ஸார்!''

அவர்கள் கதவை உடைப்பதற்கு முன் பதறிக் கொண்டு வெளியில் வந்து விட்டார். சே, அந்த நிம்மதிகூட இல்லே.

''மயக்கம் வராப்பிலே இருந்துதா, சார்?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே.''

இம்முறை குரலில் அவர் நெஞ்சின் கொந் தளிப்பு சற்றுத் தெரிந்து விட்டது. வியப் புடன் அவர்கள் ஒருவரை யொருவர் பார்த் துக் கொண்டார்கள். உடல் நிலை சரியில்லாத தால் அப்படி எரிந்து விழுகிறார் என்ற முடி வுக்கு வந்து, ''சரி, சார். நாங்க ஒண்ணும் சொல்லலே, உட்கார்ந்துக்குங்க'' என்று குழந்தையை ஆசுவாசப்படுத்தும் தோரணை யில் சொன்னார்கள்.



'' நிக்கற விசிறி நூத்திருபது ரூபாயுங்க !''

'' நிக்கற விசிறியா ? வேண்டாங்க. ஓடற விசிறியாக் கொடுங்க !''

அளகேசன் பல்லைக் கடித்துக் கொண்டு தம் ஆசனத்தில் சென்று அமர்ந்தார். அவ்வப் போது அவர்களது கவலை நிறைந்த பார்வை அவர் மேல் பதிந்து கட்டது. அந்தப் பார்வை யில்தான் எத்தகைய பரிதாபம்!

பரிதாபம்! மனிதனாய்ப் பிறந்தவனுக்குக் கிடைக்கக் கூடிய மிகப் பெரிய அவமானம் இன்னொருவரின் பரிதாபத்துக்குப் பாத்திர மாவதுதான். அவர்கள் இரக்கத்தைக் கொடுத்து அவரை வெறிதாக்கி விட்டார்கள். தம் மனிதத் தன்மை யெல்லாம் வெறுமை யில் கரைந்து போகும் விஷமாக அந்த இரக் கத்தைத் தந்த அவர்களிடம் அவருக்கு வெறுப் புப் பொங்கியது. வலிப்பிலேயே உயிராவது போயிருக்கலாம். இவர்களால் உதவி செய் யப்பட்டு இந்தப் பரிதாபத்தால் சிறுமையை ஏன் அடைந்திருக்க வேண்டும்?

கண்களை மூடியவாறு அசையாது சாய்ந்து கொண்டார் அனகேசன். மற்றவர்கள் அவர் தூங்குவதாய் எண்ணிப் பேச்சுக் கொடுக்கா திருப்பார்கள் என்று அவர் எண்ணியது. வீணுகவில்லை. 'பாவம், உடம்பு சரியில்லாதவர். அயர்ந்து தூங்கட்டும்' என்ற அவர்களது எண்ணத்தின் பரிதாபத்தைக் கண்ணுல் காணுத நிம்மதியில் ஆழ்ந்திருந்தார். அவர்கள் பேச்சிலிருந்து நான்கு வாலிபர்களும் நண்பர்களென்றும் வட இந்தியாவில் ஒரே காரியாலயத்தில் வேலை பார்ப்பவர்களென்றும் அறிந்து கொண்டார். நாளை மத்தியானம் இடார்ஸியிலேயே அவர்கள் இறங்க வேண்டியவர்கள் என்பதை அறிந்த போது அவருக்கு அளவுகடந்த திருப்தி ஏற்பட்டது. அப்பாடா! கடைசியிலாவது சிறிது நேரம் அந்த இரக்கத்துக்கு இலக்காகாமல் இருக்கலாம்.

ரயிலின் ஆட்டத்தில் அருகில் இருந்த பேச்சுக் குரல்களின் ஒலி சிறிது சிறிதாய் லயம் பெற்றுக் குழைந்து மங்கியது. சரீரத்தின் அசதி ஒரு புறம். பொய்த் தூக்கம் நிஜத் தூக்கமாய் மாறிய கணம் வந்த சுவடே தெரியவில்லை. சந்திகால மயக்கைப் போல மாறுதலின்றி மாறி வந்தது அது.

நேரம் போனது தெரியவில்லை. அயர்ந்த தூக்கம்..

அவர்களது பேச்சு நோயாளியைக் குறித்த பரிதாபத்தில் தொடங்கிப் பற்பல துறைகளில் படிந்து சென்று கொண்டிருந்தது.

மெல்ல மெல்ல நினைவு மறுபடியும் விழிப்பின் காலடியில் வந்து தொடர முற்பட்ட வேளையில்....!

இன்னிசையின் இழைகள் அவர் உயிருள் ஒலித்தன. கண் திறக்கு முன்பே அன்பான கையொன்றின் ஸ்பரிசம் தரும் போதை. இதயத்தினுள் சிலிர்ப்பு காட்டும் யாழின் தந்திகள் இன்னும் முழுதும் படியாத சுதி மீட்டலினிடையே விம்மி அளிக்கும் கானத் துடிப்பின் வக்கற்ற இனிமை. தொலைவிலிருந்து வந்தது அந்த இனிமை. சுற்றிலும் வந்தது. சூழ்ந்து கொண்டது. காதின் ஓரங்களை நனைத்துத் தண்ணென்று பாய்ந்து வந்த அருவியின் சிரிப்பு அது....

"புனிதா ரொம்ப ரொம்ப அருமையான பாத்திரம். கதை முடிஞ்சப்புறமும் மனசை விட்டுப் போகலேப்பா! நிஜத்திலேயே கூடப் பழகின யாரோ மாதிரி இருந்தது......"

"ஏன், 'மோட்ச வழி'யிலே வரும் சுமதி பாத்திரம் மட்டும் என்ன குறைஞ்சா போச்சு?"

"மோட்ச வழி கதாநாயகன் இருக்கானே, சந்திரன், மறக்கவே முடியாதப்பா! மனுஷனுடைய பலம், பலவீனம், எல்லாம் ஒரே உருவில் அமைஞ்ச சாகாத பாத்திரம் அது."

" 'ஈசன் எழுத்தே உசத்திதான். அவருடைய முதல் நாவல்களாம் கூட ஒவ்வொண்ணும் ஒரு மணி."

"இப்போ எழுதறவங்கள்ளே அவர்தான் 'பெஸ்ட்'னு நான் நினைக்கிறேன்."

"நீ மட்டும் என்ன! எல்லாருடைய விமரிசனமும் அதுதான். தமிழ் இலக்கியம்னு ஒண்ணு இருக்கும் வரையில் அவருக்கு ஓர் உயர்ந்த இடம் அதில் உண்டு."

''ஆமாம். வேறே யார் இருக்காங்க இப்போ, அவருக்கு இணையாச் சொல்லும்படி? கருத்து இருந்தால் நடை இல்லே. நடை இருந்தால் ஆழம் இல்லே. இப்படி ஏதாவது ஒரு குறை மத்த எல்லாரிடமும் இருக்கு.''

''உண்மைதான். கருத்து, அமைப்பு, நடை, பாத்திரப் படைப்பு, மெருகு எல்லாம் சேர்ந்து அமைஞ்சிருக்கிறது 'ஈசன்' எழுத்து ஒண்ணுலேதான்.''

கண்களை மூடியபடியே காதுகளால் அமுதை மாந்திக் கொண்டு கிடந்தார் அவகேசன். நினைவு மேலுக்கு வர வர, அந்த இன்னிசை இனிய தென்றலாகி உணர்வின் விழிப்பு, நிலையை வருடி மெள்ள மெள்ள இன்ப மணம் வீசியது. உள்ளிருந்து வெடித்த பரிமளம் இதழ் இதழாக விரிந்து கொண்டு மேல் வந்து மலரின் முகத்தில் நிறைந்து நின்று வானெங்கும் சிரிப்புத் தூவிப் பரவியது போலிருந்தது.

''இப்போ கொஞ்ச நாளா புதுசா ஏதோ எழுதிக்கிட்டிருக்கார்னு கேள்வி.''

''ஆமாம். அது முந்தைய எல்லாவற்றையும் தூக்கியடிக்கிறாப்பலே அமையப் போகுதுன்னு இலக்கிய வட்டாரங்களிலேயெல்லாம் அடிபடுதாமே?''

''இருக்கலாம். அதிலென்ன ஆச்சரியம்? அவர் கை வெச்சா அப்புறம் கேக்கணுமா?''

''அவர் கதைகளுக்கு இணையாய் இன்னொரு சிருஷ்டி வரணும்னா அதை அவரேதான் படைக்கணும்!''

உடல் முழுவதும் பூரிப்பில் பொடித்தது. இது சுவர்க்கம். இது சாகாமை. இதற்கு மேல் மனிதன் அடைக்கும் பொருள் உண்டா? மூச்சு இன்ப மிகுதியில் அடங்கி எழுந்தது. அந்த அசைவில் பன்னீர் தெளித்தது போல ஒரு குளுமை.

அவர் மெள்ளக் கண்களைத் திறந்தார். அவரைக் கவனிக்காது தமக்குள் பேசிக்கொண்டிருந்த நான்கு நண்பர்களின் முகங்களிலும்... முகங்களா அவை? ஒவ்வொன்றும் ஓர் ஒளி விளக்கு. அவரது இலக்கிய ஆலயத்தில் ஏற்றி வைத்த அஞ்சலி மாலைதான். அம்முகத் தீபங்கள். குரல்களில் என்ன பரவசம்!

''அவருக்கு இணை அவரேதான்!''

''சாகாத படைப்புக்களைப் படைக்கிறதிலே மனிதன் பிரம்மாவைவிட உயர்ந்தவன்னு குமரகுருபரர் பாடினதுக்கு ஓர் எடுத்துக்காட்டுத்தான் 'ஈச'னுடைய எழுத்து.''

''சந்தேகமில்லாமல்.''

''அவர் புதுப் புத்தகம் எப்போ வரப் போறதுன்னு காத்துண்டிருக்கேன்.''


மரகதச் சுடர்! ஆம், நீ சுடர்தான்! உள்ளத்திலிருக்கும் போதே ரசிகர்களின் கற்பனையில் சுடர்கிறாய். வெளிவந்த பின் — கோபுர உச்சியில் நிற்கும் போது — உன் ஒளியில் உலகமே பொலியாதோ?

குரல்களில் பரவசம். அவர்கள் முகங்களில் ஒளி. கண்களில் அவர் எழுத்தின் மேதைக்குத் தலை வணங்கும் மதிப்பு.

அவர் மெள்ள அசைந்தார். மேலே மேலே அவர்கள் பேச்சைக் கேட்க வேண்டும் என்ற தாபத்தில் ஐம்புலன்களையும் நீட்ட வேண்டித் திறந்த கண்களை அவர்கள் பக்கம் திருப்பினார்.

பரவசம் எங்கே? ஒளி எங்கே அணைந்தது?

அவரை அவர்கள் கவனித்து விட்டார்கள்.



திருட்டுக் குற்றத்துக்காகக் குற்றவாளி கூண்டில் ஏற்றப்பட்டு விசாரிக்கப்பட்டான். குற்றவாளி தான் திருடவில்லை என்றும் திருட்டு நடந்த தினத்தில் தான் ஊரிலேயே இல்லை என்றும் நிரூபிக்க முயன்றான்.

''சரி! ஊரில் இல்லை என்றால் நீ எங்கு இருந்தாய்?'' என்றார் மாஜிஸ்டிரேட்.

''நான் அந்தச் சமயத்தில் வெளியூர் ஜெயிலில் இருந்தேன்'' என்றான் குற்றவாளி.

''ஸார், தூக்கம் முழிச்சுடுத்தா ஸார்?''

''பாவம், நல்லா அசந்து தூங்கிகிட்டிருந்தீங்க.''

''உடம்பு கொஞ்சம் தேவலாயிருக்கா?''

சுற்றிலும் அவர்கள். அவர்பால் கரங்கள் நீண்டன.

''பிடிச்சுக்கட்டுமா ஸார்? எழுந்திருக்கணுமா?''

''மெள்ள எழுந்திருங்க. விழுந்திடப் போறீங்க.''

''பாவம், உடம்பு சரியில்லாதவனுக்கு ஒத்தாசைக்கு யாரேனும் இருக்கணும் ஸார்.''

''இப்படித் தனியாப் பிரயாணம் செய்யலாமா?''

''மறுபடியும் 'அட்டாக்' வந்துட்டால்?''

''இப்படி இருக்கிறது ரொம்பக் கஷ்டம், பாவம்!''

''பாவம், என்ன செய்யறது?''

பாவம்! பாவம்! பாவம்! மறுபடியும் அவர்கள் பார்வையில் பரிதாபம்! சிறுமைப் படுத்தும் அந்த இரக்கம்!

ஆத்திரம் நெஞ்சு வரை பொங்கியது.

திடீரென்று அவர் கண்கள் விரிந்து கனன்றன. வாய் துடித்து முகம் ஆவேசத்தில்

சிவந்தது. அந்தப் பரிதாபத்தை அவர்கள் பார்வையிலிருந்து களைந்து எறியும் உத்வேகத்தில் சொற்கள் நெஞ்சின் விளிம்பில் கர்ஜித்து முழக்கமாய் மூண்டன.

'என்னைப் பார்த்து நீங்க ஒண்ணும் பரிதாபப்பட வேணும். நான் யார் தெரியுமா? நான்தான் 'சகன்'. நீங்கள் இத்தனை நேரம் புகழ்ந்து கொண்டிருந்தீர்களே, அந்த எழுத்தாளன். நீங்கள் பாராட்டின பாத்திரங்களைப் படைத்த இலக்கியகர்த்தா. எழுத்தின் உயிரிலே என்றும் சாகாமல் வாழப் போகிறவன். இப்போது புரியுதா? நான் பரிதாபத்துக்குப் பாத்திரமானவனில்லே.... உங்கள் மதிப்புக்குப் பாத்திரமானவன். உண்மை தெரிஞ்சதும் என்னை மதிச்சுப் பூஜை செய்ய ஆரம்பிச்சுடுவீங்க, இப்படி இரக்கத்திலே என்னைக் கொன்னுட்டு எதிரே நிக்க மாட்டீங்க.'

நெஞ்சிலே பொரிந்த நெருப்புப் பொறிகள். கண்கள் எரிந்தன. வாய் கட்டது. ஆனால்...? ஆனால் சொற்கள் நெஞ்சை விட்டு நீங்கவில்லை. திரண்டு வந்த முழுக்கட்டம் பொரியவில்லை.

விழித்த அவர் பார்வையின் முன் அவர்களது இரக்கம் தோய்ந்த விழிகள்.

''பாவம், ஏதோ பேசணும்னு பார்க்கறாரு. வாய் அசையுது, பேச்சு வரலே.''

''ரொம்பப் பலவீனம்.''

''ஸார், போன ஸ்டேஷன்லே காப்பி வாங்கினேன். ப்ளாஸ்கில் கொஞ்சம் இருக்கு. குடிக்கிறீங்களா?''

''கொண்டு வந்து அவருக்குக் கொடப்பா. பாவம், உடம்பு சரியில்லாதவர் எத்தனை நேரம் பட்டினி கிடப்பார்?''

கரிசனத்துடன் அவர் முன்னே ப்ளாஸ்கின் மூடியில் காப்பி நீட்டப்பட்டது.

அவருக்கு மூச்சுப் புகைந்தது. உதடுகள் பதறின. ஆனால் பேச்சு இன்னும் வெளிவரவில்லை. உள்ளத்திலேயே சிக்கிச் சிறைப்பட்ட அப்பேச்சின் எதிரொலியாக உள்ளத்துள்ளேயே முடிவற்ற கற்பனைத் தொடர்.

கற்பனையில் பூகம்பம், புயல், அழிவு.

''புனிதா நல்ல பாத்திரம்.''

''அதைச் சிருஷ்டிச்சவர்.... உனக்குத் தெரியுமா? பாவம்....''

''ஏன்? என்ன?''

''அப்பப்போது உடம்பிலே....''

''த்சொ, த்சொ, த்சொ!''

''அப்படியா! பரிதாபம்தான். 'மோட்ச வழி' கூட அவர்தான் எழுதினார் இல்லையா?''

''ஆமாம்.''

''பாவம். அந்த மட்டும் ஏதோ நோயாளியாய் இருந்தாலும் இப்படி ஒரு சிறந்த பணி.''

''அதைச் சொல்லுங்க.''

''புனிதா' அபூர்வமான கதை. பாவம், அதை எழுதியவர் இப்படியா....''

''கஷ்டப்பட்டு எழுதுவார் போலிருக்கு.''

''ஆமாம். ஏதோ ஒரு வேகம் அப்படி.''

'' 'மரகதச் சுடர்' அற்புதமான கதை.''

''அது யாரால் எழுதப்பட்டது தெரியுமா? அதன் ஆசிரியர் ஒரு....''

''அப்படியா? ஐயோ, பாவம்!''

பாவம்! பாவம்! பாவம்!

ஆனால் முன்பு மாதிரி அந்தப 'பாவம்' அவருக்காக இல்லை; இப்போது அது அவருடைய படைப்புக்களுக்காக!

அவர்கள் புகழ்ந்த கதாசிரியர்கள் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு அவரைப் பொறுத்தவரை மதிப்பைப் பெற்றுவிடலாம். ஆனால் பிறகு அவர் சிருஷ்டிகளின் கதி? உண்மை வெளிப்பட்ட பின் அவற்றை யார் திறந்த மனத்தோடு படிப்பார்கள்? இன்னார் எழுதியது என்ற நிழலின் தொடர்பு அவை மீது படிந்து விடுமே! அதன் பின்....!

அவர் எழுத்துக்கா பரிதாபம்? மதிப்பைப் பெற வேண்டிய பொருள் அழியும் அவரா, அழியாத அதுவா?

நெஞ்சின் சொற்கள் வாக்கில் விடுபட்டால் அவர் முன் காணப்படும் அந்த முகங்களின் பரவசம் நிற்காது. ஒளி நிலைக்காது.


அவர் உணர்ந்த கவர்க்கமும் சாகாத் தன்மையும் களைப்படுமா!

''ஏன், சார்! பேச முடியல்லியா?''

''காப்பியைக் குடியுங்க.''

''பாவம், பலவீனமாயிருக்கார் இன்னும்.''

இரக்கம் படர்ந்து வதைத்தது. ஒரு விநாடி பொங்கிய ஆவேசத்தை அவர் நெஞ்சோடு அடக்கிப் புதைத்தார். ஏதோ உயிரினும் உயரியதைக் காத்து விட்ட பூரிப்பு நெஞ்சை இலேசாக அணைத்தது. அதன் மீது படர்ந்திருந்த அடிமையைத் தாமே ஏற்றுக் கொண்டு அவர் வெறும் வலிப்புக்காரனாய், ''ஆமாம். பலவீனமாய்த்தான் இருக்கு'' என்றபடியே ப்ளாஸ்க் மூடியிலிருந்த காப்பியை வாங்கிக் கொண்டார்.



37. இருளும் ஒளியும்

செண்பக சுந்தரி நீண்ட நேரம் விம்மி விம்மி அழுது கொண்டே படுத்திருந்தாள். வீட்டுக்குள்ளே நுழைந்த விநாடியிலிருந்து இதயத்தில் பொங்கிப் பொங்கிப் பெருகிக் கொண்டிருந்த துயர வெள்ளம் அணைந்தும் கண்ணீராகக் கொட்டியது.

சுந்தரிக்குத் தனது நிலைமை நன்றாகப் புரிந்தது. தன்னைத் தனியாகக் கல் வீட்டிலே கொண்டு போய் அவ்வாறு சிறை வைப்பதற்கு முன்பு, என்னென்ன சூழ்ச்சிகள் நடந்திருக்க வேண்டும் என்பதை அவளால் ஊகிக்க முடிந்தது. இரண்டு நாட்கள் சேர்ந்தாற் போல் வில்வநாதன் தன்னைக் காணாத நிலையிலே, நிச்சயம் தனது வீட்டுக்கு வந்து தன்னைத் தேடியிருப்பான் என்று அவளுக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுது அவளுடைய கவலை வில்வநாதனைப் பற்றியும் அவனுடைய குழப்பங்களைப் பற்றியுமே சுழன்றது.

சுந்தரிக்குத் தன்னுடைய அன்னையின் விபரீதப் போக்கு மிக நன்றாகத் தெரியும். வல்லாளவேலரும் அவளும் செய்துள்ள இந்த விபரீதச் சூழ்ச்சியின் பயனாக, வில்வநாதனுக்கு என்ன இடையூறு நேர்ந்திருக்குமோ என்று எண்ண எண்ண, அவளுக்கு அந்தத் துயரத்தைத் தாங்க முடியவில்லை.

'வில்வநாதன் என்ன தவறு செய்தார்? இந்தத் துர்ப்பாக்கியவதியின் மீது அன்பு செலுத்தினார். அவ்வளவுதானே? அதில் என்ன தவறு? வாழ்வில் யாராவது ஒரு நல்ல இளைஞனுக்கு என்னை நான் அர்ப்பணம் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டேன். இந்தக் குடும்பத்தின் சூழலிலே இருந்த தீய நிலைகள் நமக்கு வேண்டாம் என்று கருதினேன். அறத்தோடு கூடிய நல்வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்று விரும்பினேன். இறைவன் அந்த விருப்பத்துக்குப் பொருத்தமான ஒரு நல்ல மனிதரின் சந்திப்பை எனக்கு அருளினான். அது பொறுக்கவில்லையா விதிக்கு? தெய்வமே! கெட்ட சூழ்நிலையும், கெட்டவர்களின் உறவும் வேண்டாம் என்றும், தர்மத்தோடு சேர்ந்த இல்லற வாழ்க்கையை நடத்த வேண்டும் என்றும் நான் விரும்பியது தவறா?'

இவ்வாறு மனசுக்குள் எண்ணி, எண்ணி மறுகினாள் செண்பக சுந்தரி.


'என் ஆசையும், என் விருப்பமும் நிறைவேறாதபடி, எனக்குச் சத்துருவாக என்னைப் பெற்ற தாயே இங்கு செய்கிறாள். அது என் தலையெழுத்து! இருக்கட்டும். என்னுடைய வாழ்வு இனி எப்படி முடிந்தாலும் சரிதான். ஆனால் வில்வநாதனுக்கு என்ன ஆகுமோ தெரியவில்லையே! இந்த உள்ளத்தை அவரிடம் பறி கொடுத்தேன். இந்த ஏழையின் இதயத்தில் அவர் வந்து அமர்ந்து கொண்டார். இனி இன்னொருவருக்கு இதில் இடமில்லை. வாழ்வில் இனி ஒரே ஒரு முடிவுதான் உண்டு. வாழ்ந்தால் அவருடைய வாழ்க்கைத் துணைவியாக வாழ்வது. இல்லையென்றால் இந்த உயிரை விட்டு விடுவது. இதைத் தவிர வேறு முடிவு ஏது? என் வரையில் இதுவே தீர்மானம். ஆனால் வில்வநாதனுக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்? என்னையே இத்தனை சூழ்ச்சிகள் செய்து எங்கோ கொண்டு போய்ப் பூட்டி வைத்த இந்த யமகாதகர்கள், அவரை இதற்குள் என்ன செய்திருக்கிறார்களோ தெரியவில்லையே!'

இப்படி எண்ணியதும் இதயமே வெடிக்கும்படி விம்மினாள் சுந்தரி. அடுத்த கணம் கார்மேகத்தில் மின்னல் மின்னுவது போல் அந்தத் துயரத்துக்கு மத்தியில் வேறொரு எண்ணம் பளிச்சிட்டது.

'தெய்வம் நிச்சயம் எங்கள் கட்சியில் இருக்கிறது. சந்தேகமே யில்லை. எத்தனை பெரிய அபாயத்துக்கு மத்தியில் வக்கீல் தோன்றி என்னைக் காப்பாற்றினார். அந்தத் தெய்வம் வில்வநாதனைக் கை விடாது. எவ்வளவு பெரிய சிக்கல்களுக்கு மத்தியிலும் எங்கள் இருவரிடமும் அன்பு கொண்டுள்ள மனிதர்கள் இருக்கத்தான்

நந்தவனம்





சோமு

செய்கிறார்கள். நிச்சயம் அவர்கள் ஒவ்வொரு விநாடியும் எங்கள் நிலைமையை நன்றாகக் கவனித்துக் கொண்டுதான் வருகிறார்கள். இல்லையென்றால் திடீரென்று வக்கீல் எப்படி அந்தக் கல்வீட்டுக்கு வர முடியும்? எப்படியோ உளவு தெரிந்து கொண்டுதான் அவர் அங்கே வந்திருக்கிறார். எத்தனை சாமர்த்தியமாக, அதிகப் பேச்சுக்கு இடம் வைக்காமல், என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்தார். அவருக்குத் தெரியாதா இந்த வீட்டு நிலைமை. இந்த வீட்டில் இருப்பதும் மிருகக் காட்டில் இருப்பதும் ஒன்றுதான் என்பது செந்தில்நாயகத்துக்குத் தெரியும். அப்படியிருந்தும் இங்கே கொண்டு வந்து என்னை விட்டுப் போனதில் வேறு ஏதாவது நோக்கம் இருக்க வேண்டும். தற்போதைக்கு நான் இங்கே இருக்க வேண்டும் என்று அவர் நினைக்கிறார். வேறு ஏதோ ஓர் ஏற்பாட்டை அவர் திட்டமிட்டு அதற்கு வேண்டிய முறையில் காரியம் செய்கிறார். அது முடிகிற வரை நான் இங்கே இருக்க வேண்டும் என்று அவர் முடிவு செய்திருக்கிறார். அப்படியிருக்கும் போது நான் ஏன் இவ்வளவு தூரம் மனம் குழம்ப வேண்டும்?'

சுந்தரியின் மனத்தில் இப்படி ஒரு சிந்தனை மின்னியதும் ஒரு கணம் உள்ளத்தில் பிரகாசம் ஏற்பட்டது. மறு கணம் வில்வநாதனின் நினைவு தோன்றியது. மீண்டும் இருள் கவிந்தது அந்த உள்ளத்தில்.

'வில்வநாதன் என்ன ஆனார் என்று ஒன்றுமே தெரியவில்லையே. அதைத் தெரிந்து கொள்ளுவது எப்படி? கல் வீட்டு அறையைவிட இனி இந்த வீட்டிலே கட்டுக் காவல் அதிகமாக இருக்குமே! வில்வநாதனை இனி எப்போது சந்திக்கப் போகிறேன்!'

மறுபடியும் விம்மல். 'குபு குபு' என்று கண்ணீர் பொங்கி வழிந்தது!

'என்ன பைத்தியக்காரத்தனம்! அத்தனை ஒதுக்குப்புறமான இனந்தெரியாத ஒரு கிராமத்தில் எங்கோ ஒரு கல் வீட்டில் நான் இருப்பதைத் தெரிந்து

கொண்டு வந்த வக்கீலுக்கு, வில்வநாதனைக் கண்டுபிடித்து நிலைமைகளைச் சொல்வது ஒரு பிரமாதமான காரியமா ?''

மறுபடியும் இதய இருளிலே ஒரு மின்னல் மின்னியது. உள்ளத்தில் வெளிச்சம் ஏற்பட்டது.

இப்படியாக இருளும் மின்னலுமாக எத்தனை நேரம் அப்படி யிருந்தாளோ, அவளுக்கே தெரியாது. தாயார் அவளைக் கூப்பிட வில்லை. வேறு யாரும் வந்து அவளை விசாரிக்க வரவில்லை. நீண்ட நேரம் கழித்து வேலைக்காரி மட்டும் வந்தாள். தாயாரின் கட்டளை என்ன என்பதைச் செண்பக சுந்தரிக்கு அறிவித்தாள் அவள்

குமுதவல்லியின் விசாலமான பெரிய வீட்டிலே பல அறைகளைத் தாண்டிக் கொண்டு பின்புறம் சென்றால், வெந்நீர்ப் பிறையைச் சுற்றி ஒரு நீண்ட திண்ணை இருந்தது. அந்தத் திண்ணைக்கு அப்பால் அறை விடு என்று அழைக்கப்படும் ஒதுக்கமான ஒரு சிறு அறை இருந்தது. இப்போது அங்கே சுந்தரிக்குச் சிறைவாசம் காத்திருந்தது என்று அறிவித்தாள் வேலைக்காரி.

''சொன்னதைக் கேட்கலேன்னு பெரிய அம்மா ரொம்பக் கோவமா இருக்காக. அங்கே இங்கே நீ போயிராதபடி பாத்துக்கச் சொல்லி எனக்கு உத்தரவு போட்டிருக்காக!'' என்று சொன்னாள் குப்பம்மை என்ற அந்த வேலைக்காரி.

''குப்பு! இந்த வீட்டில் என்றைக்குத் தான் நான் சுதந்திரமாக வாழ முடிந்தது! இந்தப் பெரிய அறையில் சிறைவாசம் இருப்பதற்குப் பதிலாக அந்தச் சிறிய அறையில் இருக்கப் போகிறேன். அவ்வளவுதான் வித்தியாசம்! பரவாயில்லை. இங்கேயிருந்து அழுவதை அங்கே வந்து அழுகிறேன். அவ்வளவு தானே? அந்த அறைக்கு வந்த பிறகாவது இந்த உயிர் போய் விட்டால் நல்லது. மற்றப்படி இனிமேல் இந்த உடம்பும் உள்ளமும் வேறு எந்தச் சூழ்ச்சிக்கும் இடம் கொடுக்காது. புறப்படு. இந்த விநாடியே அந்த அறை வீட்டுக்குப் போய் விடலாம். இப்படிப்பட்ட ஒரு அம்மாவையும் அவளுடைய சதியாளர்களையும் பார்க்காமல் எட்டி இருக்கலாவது முடிகிறதே. அதுவே ஒரு நல்ல காலத்துக்கு அறிகுறி!''

கட்டிலிலிருந்து எழுந்தாள் சுந்தரி. தாயாருடைய திசைப் பக்கமே திரும்ப வில்லை அவள். நேரே அந்த அறைவீட்டுக்கு நடந்தாள். அங்கே போய் மறுபடியும் விழுந்து புரண்டு துடிதுடித்தாள் சுந்தரி!

''அம்மா! நீ சாப்பிடலைன்னு அதுக்குத் தண்டனை எனக்குத்தானும்! இப்படி ஒரு உத்தரவு போட்டிருக்காக பெரிய அம்மா! அவுக மனசிலே என்ன நெனைப்புன்னு எனக்குத் தெரியலே. ஆனா —''

''குப்பு! எனக்குத் தெரியும் அந்த நினைப்பு! அத்தனை சூழ்ச்சியிலும் இடி விழப் போகிறது என்று இத்தனைக்குப் பிறகும் அவளுக்குத் தெரியாமல் போய் விட்டது. கல் வீட்டிலிருந்து என்னைக் காப்பாற்றிய தெய்வம் இனியும் என்னைக் காப்பாற்றும். அவளோ, உங்கள் சதிகாரக் கூட்டமோ என்ன செய்தாலும் பொறுத்துக் கொள்வேன்: எனக்கு உதவி செய்ய எண்ணுகிற மனிதர்கள் ஏதோ ஒரு திட்டத்தில் வேலை செய்கிறார்கள். அது நிறைவேறுகிற வரை நான் அவசரப்பட்டு எந்தக் காரியமும் செய்துவிட மாட்டேன். என் உயிரை அதுவரை காப்பாற்றிக் கொள்ளுவேன். அதைப்பற்றி உனக்கோ

அட்டைப் பட விளக்கம்

இயற்கையன்னை தன் பூரணப் பொலிவுடன் கொலுவிருக்குமிடம் எது என்றால் கிராமம் என்று கூசாமல் கூறுவோம். அதேபோல் இயற்கையன்பு கழித்தோடும் இடம் எது என்று கேட்டால் கள்ளங்கபடமறியாத கிராமக் காதலர்களின் உள்ளங்கள்தான் என்பதிலும் ஐயமில்லை. பெருமிதம் துள்ள விழிகளை யோட்டும் தன் காதலியைக் காதலன் அழைக்கும் அழகை இந்த நாடோடிப் பாடல் சித்திரிக்கும் விதத்தைப் பாருங்கள் !

சாயச் சீலே ரொம்பச் சிவப்பு — என்னைக்
கண்டாக்கக் குறுஞ் சிரிப்பு
குறுஞ்சிரிப்பும் கொண்டாட்டமும் —
கூடவந்தால் தெரியுமடி

அதேபோல், இந்த அழகிய நாடோடிப் பாடலுக்கு விளக்கமாகக் கிராமத்துக் காட்சியை ஓவியர் ரமணி நம் கண் முன்னே கொண்டு நிறுத்தும் காட்சியும் அற்புதமாயில்லையா ?



வருங்கால விடுமுறையைக் கழிக்க...
அற்புத நாடான காஷ்மீரில் உங்கள் விடுமுறையை ஆனந்தமாகக் கழிக்க வாரீர். வெள்ளிப்பனி மூடிய கம்பீரமான மலைகள், புன்னகை புரியும் வானங்கள், பனிநீர் ஓடும் நதிகளின் உள்ளத்தைத்தொடும் குளிர், பளிங்கு போன்ற தண்ணீருடன் கூடிய நீலநிற ஏரிகள் யாவும் ஒன்று சேர்ந்து இணங்காண முடியாத இன்பகரத்தை அளிக்கும்.
சாஷ்மா சாஹி, நிஷத், ஷாலிமார் என்ற பிரசித்தி பெற்ற மொகல் தோட்டங்களில் உலாவி ஆனந்தமடையுங்கள். எழில் மிகும் ஏரிகளில் படகு வீடுகளில் உல்லாச-சவாரி செய்யுங்கள். அழகு மிளிரும் இடங்களுக் கெல்லாம் படகுவீடு உங்களை அழைத்துச்செல்லும்.
ஏராளமாக ஆனந்தம், புதிய தெம்பு, வாழ்க்கையில் ருசி இவைகளுடன் திரும்பி வாருங்கள்.
மறக்க முடியாத விடுமுறை இன்பம்
காஷ்மீர்
அழகு கொஞ்சும் நாடு
செப்டம்பர் - அக்டோபரில் சீதோஷ்ண நிலை 7.22°c முதல் 21.11°c கனமான கம்பளி ஆடைகளும், படுக்கையும் எடுத்துச் செல்லுங்கள்.
இந்தியாவின் எல்லா பகுதிகளுடன் காஷ்மீருக்கு விமானம், ரயில், ரஸ்தா தொடர்புகள் உண்டு. ஏப்ரல் 1ம் முதல் அக்டோபர் 31வரை பதன்கோட் வழியாக ஸ்ரீநகருக்கு சலுகை ரயில்-ரஸ்தா டிக்கட்டுகள் உண்டு.
படகு வீடுகள், இந்திய மற்றும் மேற்கத்திய பாணி ஹோட்டல்கள், டாக் பங்களாக்கள், அரசாங்க உல்லாசப் பிரயாண விடுதிகளில் வசதியாகத் தங்கலாம்.
விவரங்களுக்கு அருகிலுள்ள டூரிஸ்ட் காரியாலயத்தை அணுகுங்கள்.
அல்லது கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள்
டைரக்டர் ஆப் டூரிஸம்
ஜம்மு—காஷ்மீர் அரசாங்கம்
DA 67/728

உன்னுடைய அம்மாவுக்கோ கவலை வேண்டாம்!''

இவ்வாறு சொல்லிவிட்டு அந்தக் கட்டிலிலே எழுந்து உட்கார்ந்து கொண்டாள் சுந்தரி.

அறை வீட்டுக்கு வெளியே படிக் கட்டிலே தலையை வைத்துப் படுத்துக் கொண்டாள் வேலைக்காரி. சுந்தரிக்குக் காவல் இருக்க வேண்டும் என்பது குழுத லைவியின் கட்டளை! அதே சமயம் வேறு சில அந்தரங்க எண்ணங்களும் அவளுடைய மனதில் வேலை செய்து கொண்டிருந்தன. அவற்றை வெளியிட்டுச் சொல்லவும் முடியாமல், மனதுக்குள்ளேயே வைத்து மெல்லவும் முடியாமல் குப்பம்மை என்ற அந்த வேலைக்காரி ஒருவிதக் குழப்பத்திலே யிருந்து தவித்தாள்!

இரவு நீண்ட நேரம் ஆயிற்று. குப்பம்மை உறங்கினாளோ இல்லையோ, சுந்தரி நிச்சயம் உறங்கவில்லை. அறை வீடு என்ற அந்தச் சிறிய சிறைக் கூடத்தின் புதிய சூழ்நிலையின் அவளுக்கு உறக்கம் வரவில்லையா? அல்லது, தன்னைத் தன் வீட்டிலேயே கட்டுக்காவல் செய்திருப்பதால் அவள் கலங்கினாளா? அல்லது அந்தக் கட்டுக் காவலைப் பெயர்த்துக் கொண்டு வெளியே எப்படித் தப்பித்து ஓடுவது என்று சிந்தனை செய்தாளா? இல்லை. அப்படி ஒன்றுமில்லை. துயரம் என்ற கார்மேகமும் அதற்கு மத்தியிலே நம்பிக்கை என்ற மின்னலுமாக, இரவு நீண்ட நேரம் அவள் தூங்க முடியாமல் கட்டிலிலே புரண்டு கொண்டிருந்தாள். இருள் சூழ்ந்த அந்த அறை வீட்டிலே இருந்த புழுக்கத்தை விட உணர்ச்சிகளின் குமைப்பு உள்ளத்திலே இன்னும் அதிகமாக இருந்தது. ஆனால் இதென்ன

இதென்ன! திடீரென்று தன்னுடைய உடம்பிலே நிலவு படுகிறது! கட்டிலிலே புரண்டு புரண்டு வேதனைப் பட்டுக் கொண்டிருந்த சுந்தரி திடுக்கிட்டாள். நீண்ட சதுர வடிவிலே, அளவு எடுத்துக் கத்திரித்துப் போட்ட மாதிரி ஒருநிலாத் துண்டு கட்டிலின் மீது வந்து விழுந்தது. திடுக்கிட்டுக் கூரையிலே பார்த்தாள் சுந்தரி! என்ன அதிசயம். அறை வீட்டின் மேல் கூரையிலே யிருந்த ஓடுகளிலே ஒன்றை யாரோ பிரித்திருக்கிறார்கள்! அப்போதுதான் பிரித்திருக்கிறார்கள். அதன் வழியாக நிலவு விழுந்தது!

கூச்சல் போடலாம் என்று கையை உயர்த்துவதற்குள், இருள் மயமான அறையிலே நிலவு வந்து விழுந்ததுபோல் சுந்தரியின் இருண்ட உள்ளத்தில் ஒரு விசித்திரமான வெளிச்சம் பளிச்சிட்டது.

''ஒரு வேளை நம்மைக் காப்பாற்றுகிற தெய்வம் நமக்கு இப்பொழுது உதவி செய்கிறதோ? கொடுக்கிற தெய்வம் கூரையைப் பெயர்த்துக் கொண்டு கொடுக்கிறதோ?''

கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டு, கூரை மோட்டையே பார்த்தாள் சுந்தரி! ஓர் ஓடு பிரித்ததற்கு மேல், அடுத்த ஓடு பிரிக்கப்படவில்லை! அந்தக் குறுகலான நெடுஞ் சதுரத் தொண்டின் வழியாக வானத்திலே நிலவு தவழ்வது தெரிந்தது!

அடுத்த ஓடு என்ன ஆகிறது என்று பார்த்துக் கொண்டிருந்த சுந்தரியின் கண்முன்பு, அந்த இடுவல் வழியாக ஒரு முரட்டுக் கை தெரிந்தது. பதறியவளாக மேலும் கூர்ந்து பார்த்தாள் சுந்தரி. தொண்டின் வழியாகக் கை மட்டும் நுழைந்தது. மறுவினாடி 'தொப்' என்று தரையிலே ஏதோ சத்தம் கேட்டது. தொண்டு வழியாக ஒரு பொட்டலம் கீழே விழுந்தது.


'இது என்ன விபரீதமான ஒரு நிகழ்ச்சி!' என்று வியப்பிலிருந்து சுந்தரி மீள்வதற்குள் ஆச்சரியம் இன்னும் அதிகரித்தது. தொண்டின் வழியாக உள்ளே நுழைந்த கை மறுபடி மேலே சென்றது. அடுத்த வினாடி நிலாத் துண்டும் மறைந்தது. அறையிலே இருள் சூழ்ந்தது. எந்த ஒரு மோட்டிலிருந்து பிரிக்கப் பட்டதோ அந்த ஓடு மறுபடியும் பழைய இடத்தில் பொருத்தப்பட்டது! உள்ளே நுழைந்த நிலவு மறுபடியும் வானத்திலே போய் மறைந்து கொண்டது!


ஓட்டைப் பிரித்து யாரோ இந்த அறைக்குள்ளே எதையோ போட்டு விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பது புரிந்தது சுந்தரிக்கு! கட்டிலிலிருந்து ஓசைப்படாமல் எழுந்து சுற்றுமுற்றும் பார்த்தாள். வேலைக்காரி அசையக் காணோம்!

சுந்தரி மெதுவாக அடிமேல் அடி வைத்து நடந்தாள். 'தொப்' என்று சத்தம் கேட்ட இடத்துக்குச் சென்று பார்த்தாள். ஒரு காகிதப் பொட்டலம் விழுந்து கிடந்தது. அப்படியே அதை எடுத்தாள். கூழாங்கல் ஒன்றைக் காகிதத்தினால் சுற்றி, அதில் ஒரு கடிதம் சிறு நூலினால் கட்டித் தொங்க விடப்பட்டிருந்தது! கீழே விழும்போது, அந்தக் கடிதம் பறந்து போய் விடக் கூடாது என்பதிலேதான் எத்தனை முன்யோசனை!

சுந்தரி அந்தக் கடிதத்தை எடுத்துக் கையிலே சுருட்டிக் கொண்டு, அடிமேல் அடி வைத்து நடந்து கட்டிலுக்கு வந்து சுற்றுமுற்றும் பார்த்தாள்! (தொடரும்)


பாண்ட்ஸ்
ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடரை
உபயோகித்து நாள் முழுவதும் குளுமையையும்
நறுமணத்தையும் அனுபவியுங்கள்
எந்தப் பருவகாலத்திலும் நீங்கள் நாள் முழுவதும்
இதமாக இருக்கலாம்—குளிர்ந்த நீரில் குளித்த
பிறகு பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம்
பவுடரை உடல் மீது தாராளமாகத் தூவினால்
நாள் முழுவதும் அயர்வில்லாமல்
புத்துணர்ச்சியுடன் இருக்கலாம்!
துல்லியமான நறுமணமுடைய இப்
பவுடர் வியர்வையை உறிஞ்சுவதில்
இணையற்றது...நீடிய புத்துணர்ச்சி
நாள் பூராவும் நீடித்து நிற்கச்
செய்யும் சிறந்த சுகந்த சாதனம்!
POND'S
DREAMFLOWER TALC
சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)
JWT-P 3233


ஓட்டப்பந்தயம் 7
கதை: ஏ.எஸ்.சுந்தரராஜன்
சித்திரம்: செல்வம்
பத்திரிகைச் செய்தியினால் குழம்பிப்போயிருந்த பஞ்சு, லாரி சென்னையை அடைந்ததும்...
என்ன சார், எலிப் பாஷாணம் தின்ன மாதிரி மிரண்டு மிரண்டு பாக்கறே?
ஒண்ணுமில்லே... இந்தா, பணம் நூறு ரூபாய்ச் சேர்.
வீட்டிற்குப் போனால் அந்தக் குண்டுப் பெருச்சாளி காமினியை என் கழுத்தில் கட்டப் பார்ப்பார்களே? வெளியில் சுற்றினாலும் ஆபத்து...
ஆறுமுகம், நீ எனக்கு டாக்டர் வேஷம் போட்டே, விதி எனக்குக் கொலை- -காரன் வேஷம் போட்டு வேடிக்கை பார்க்கிறதடா?
வீடு செல்ல விரும்பாத பஞ்சு... உருமாறி...
இந்த வேஷத்தில் போலீஸ்காரர்கள் என்ன, ஆண்டவன் கூட என்னை அடையாளம் கண்டு பிடிக்க முடியாது.
தேங்காய் மாங்காய் பட்டாணி சுண்டல்...
இந்தாப்பா... சுண்டல்
கடற்கரையில் ஒரு நாள்...
நீ சொல்வது நிஜம்தானா பாண்டித்துரை!
பொய்யா சொல்வேன்? என் பங்காளி செய்த மோசடியால் நொடித்துப் போனேன். என் நல்லகா- -லம் இப்போது பாதிச் சொத்தாவது கைக்கு வருகிறது. ஒரு லட்சத்துக்குத் தேறும்.
சுண்டல் வேணுமா? தேங்காய் மாங்காய் பட்டாணி கரம் சுண்டல்...
ஆ, நீங்களா?
ஹா....


பிடி...பிடி... விடாதே, கொலைகாரன்...
போலீஸ்... போலீஸ்...
ஐயோ! போலீஸ் அல்லவா?
ஓட முடியாத நிலையில் பஞ்சு, ஏதோ ஒரு பங்களாவுக்குள் புகுந்துவிடுகி-றன். ஜீப்பும் அந்த பங்களா வாச-லில் நிற்கிறது.
நர்ஸ், டாக்டர் நரஹரி இருக்கிறாரா? அந்தப் பேஷண்ட் எப்படி இருக்கிறார்?
டாக்டர் இப்பொழுது-தான் வெளியில் போனார். பேஷண்டி-டம் எந்த இம்ப்ருவ்-மெண்ட்டும் இல்லை.
சரி, டாக்டர் வந்ததும் போன் பண்ணச் சொல்-லுங்கள்.
அப்பாடா! நல்லவேளை போலீஸ் என்னைத் துரத்தி வரவில்லை.
அதே சமயம் அவன் பதுங்கி யிருந்த அறையின் சுவிட்ச் போடப்பட்டது.
ஆ...நீயா?


ஆம்... நானேதான்!
மாலதி என்னைத் தெரியவில்லையா?
ஏன் தெரியாமல்? நன்றாகத் தெரியுமே, நம்பினவர்களை நட்டாற்றில் விட்டு நழுவும் நண்டு மனம் படைத்தவர் என்று. கேவலம் பணத்துக்காக, ஒரு சிறந்த டாக்டரைக் கொலை செய்யத் துணிந்த கொடுமைக்-காரர் என்று...
ஐயோ, நீயுமா என்னைக் கொலைகாரன் என்கிறாய். அந்த டாக்டர் எப்படி இருப்பார் என்று-கூட நான் பார்த்த-தில்லை மாலதி.
ஓஹோ! பார்த்தா(ல்) கொலை செய்யத் தைரியம் வரா-தென்று கண்ணை மூடிக்கொண்டு காரியத்தை முடித்துவிட்டீர்களே
மாலதி, என்னைச் சித்திரவதை செய்யாதே.
ஏன் செய்யக்கூடாது? நீங்கள் செய்த காரியத்-தால் பணக்காரப் பசுபதி யிடம் நான் அவமானப்-பட்டிருக்கும் போது...
என்னை மன்னித்துவிடு...
மன்னிப்பா? உங்களைப் பழிவாங்காமலா? இதோ, உங்களைத் தேடிக்கொண்டி-ருக்கும், போலீசுக்கு இப்போதே போன் பண்ணி...
மாலதி நில்... என்னைக் காட்டிக் கொடுக்காதே...
ஹலோ... ஹலோ!

(தொடரும்)

கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டென்டல் கிரீம் துர் நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.


கால்கேட் உடனடியாக வாய் துர் நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிட்சைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டென்டல் கிரீமினால் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர் நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் சேர்த்திருக்கும் நூதன சுகமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ துர் நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது



நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். தகர டப்பி பல மாதங்களுக்கு வரும்.

பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெர
வும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையு
விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

சோமநாதபுரத்துக் கேசவன்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

வேங்கடம் முதல் குமரி வரை நாம் யாத்திரை செய்தபோது திருப்புன்கூரில் நந்தியும், திருக்குறுங்குடியில் துவஜஸ்தம்பமும் சந்நிதியை விட்டு விலகியிருப்பதைக் கண்டிருக்கிறோம். அந்த ஹரிஜன பக்தன் நந்தனுக்காக நந்தியை விலகச் சொல்லிச் சிவலோகநாதன் உத்தரவிட்டிருக்கிறார் திருப்புன்கூரில். திருக்குறுங்குடியிலும் அதே போல் நம்பாடுவான் என்ற பரம பாகவதனுக்குத் தரிசனம் தரவே அழகிய நம்பியும் துவஜஸ்தம்பத்தை ஒதுக்கியிருக்கிறார். இந்த வேங்கடத்துக்கு அப்பால் செல்லும் க்ஷேத்திராடனத்தில் ஒரு தலத்தில் கோயில் மதிலுக்கும் வெளியே உள்ள கருடகம்பமே சந்நிதியை விட்டு விலகி நிற்கிறது. இது எப்படி நேர்ந்தது? இங்கும் யாராவது ஹரிஜன பக்தன் வந்திருந்தானு என்று விசாரிக்கத் தோன்றும். அங்கும் ஒரு சுவையான கதை கிடைக்கும். கேசவனுக்கு ஒரு கோயில் கட்டுகிறார்கள், ஜக்கணச்சாரி என்ற சிற்பியின் மேற்பார்வையில். கோயில் கட்டும் திருப்பணி நடக்கிறது. கோயில் முழுதும் ஒரே சிற்ப வடிவங்கள், எல்லாம் அற்புத அற்புதமான வடிவங்களாக அமைகின்றன. குறை என்று சொல்ல, எடுத்துக்காட்ட ஒன்று கூட இல்லை. இவ்வளவு அழகாகக் குறையே இல்லாத கோயிலைத் தேவர்கள் பார்க்கின்றனர். அடடா! இத்தகையதொரு கோயில் இருக்க வேண்டியது தேவர் உலகத்திலே அல்லவா? இதனை எப்படியாவது எடுத்துச் சென்று தேவர் உலகத்தை அழகு செய்துவிட வேண்டும் என்று விரும்புகின்றனர் தேவர்கள். இதை அறிகிற போது தான் அன்று, வேலூர் ஜலகண்டேசுவரர் கோயில் கல்யாண மண்டபத்தை அப்படியே பெயர்த்து எடுத்துச் சென்று பிரைட்டன் என்ற ஊரில் கலைக் கூடம் ஒன்று அமைத்து விட வேண்டுமென்று எண்ணினான் ஓர் ஆங்கிலேய அதிகாரி என்ற கதை ஞாபகத்துக்கு வரும். அழகுணர்ச்சி நிறைந்த ஆங்கிலேயன் ஆசையில் தவறொன்றும் இல்லையே. ஆனால் அவன் எண்ணிய எண்ணம் ஈடேறவில்லை. காரணம் அவன் தேவர்கள் போன்ற அதிசய சக்தி உடையவனாக இல்லாதிருந்ததுதான். அழகிய கோயிலைத் தேவர் உலகுக்கு எடுத்துச் செல்ல விரும்புகிறார்கள் தேவர்கள். உடனே கோயிலுக்கே முளைக்கிறது இறக்கை இரண்டு. கோயில் அஸ்திவாரத்துடனேயே பெயர்கிறது; வான வீதியிலே மிதந்து செல்லப் புறப்பட்டிருக்கிறது. கோயில் உள்ளே வேலை செய்துகொண்டிருந்த சிற்பி ஜக்கணச்சாரி ஆபத்தை உணர்கிறான். குறையே இல்லாததினால் அல்லவா இந்தத் தேவர்கள் இக்கோயிலை வானுலகு எடுத்துச் செல்ல முனைந்து விட்டனர். ஒரு குறையை உண்டாக்கி விட்டால் அவர்களுக்கு இந்த ஆசை போய் விடும். குறையுள்ள கோயில் வான வீதியில் செல்ல இயலாது; பூமியிலேயே தங்கிவிடும் அல்லவா என்று எண்ணுகிறான். தன் சிற்றுளியால் மூல மூர்த்தியான கேசவனது வடிவிலேயே ஓர் ஊனத்தை உண்டாக்கி விடுகிறான். அது காரணமாக வான வீதியில் பறந்த கோயில் திரும்பவும் பூமிக்கு இறங்கி விடுகிறது. இறங்கும் போது முன்னிருந்த இடத்தில் இறங்காமல் கொஞ்சம் விலகியே இறங்குகிறது. அதனால் மதிலுக்கு வெளியே இருந்த கருட கம்பம் வாயிலுக்கு நேரே அமையவில்லை. இப்படிக் கருட கம்பம் விலகியிருக்கும் கோயில் தான் சோமநாதபுரத்துக் கேசவன் கோயில்.

சோமநாதபுரம் மைசூருக்குக் கிழக்கே இருபத்தைந்து மைல் தொலைவில் இருக்கிறது. கோவை மாவட்டத்திலிருந்து பிரிந்து மைசூர் ராஜ்யத்தோடு சேர்ந்திருக்கும் கொள்ளேகாலை நோக்கிச் செல்லும் பாதையில் டி. நரசப்பூர் வரை சென்று காவிரியைக் கடந்து அதன் வட கரை சென்றால் கோயிலுக்குச் செல்லலாம். சோமநாதபுரம் சேர்வதற்கு பஸ் வசதி உண்டு. சொந்தக் காரிலே சென்றால் வசதியாகச் சென்று அடையலாம்.




கேசவன்

கோயிலை அணுகும்போது முன்னரே குறிப்பிட்ட கருட கம்பம் தான் முதலில் நம் கண்ணுக்குத் தோன்றும். அதனை வலம் வந்து கோயில் வாயிலை நோக்கி நடக்கலாம். கோயிலின் வெளிப் புறப் பார்வை அவ்வளவு பிரமாதமாக இராது. நடுவிலே ஒரு பெரிய மாடத்திலே கோயிலை அமைத்து, அதைச் சுற்றியும் ஒரு வெளிப் பிராகாரமும் அமைத்து அந்தப் பிராகாரத்தையும் சுற்றி மண்டபங்கள் அமைக்கப்பட்டிருக்கும். நாம் முதலில் நுழைவது இந்த மண்டபத்தின் வாயில் வழியாகத் தான். இந்த மண்டபத்தில் சிற்ப வேலைப் பாடுகள் நிறைந்த தூண்கள் பல இருக்கும். இந்த மண்டபத்திலிருந்து பார்த்தால் நம் கண் முன் அற்புதமான சிற்ப வேலைகள் நிறைந்த அழகிய கோயில் ஒன்று இருப்பதைக் காண்போம். வெளி முற்றத்தில் இறங்கிக் கோயிலுள் நுழையுமுன் அந்த வெளி முற்றத்திலேயே நடந்து கோயிலை ஒரு சுற்றுச் சுற்றலாம் என்றும் தோன்றும். கோயில் பெரிய கோயில்தான். அதன் நீளம் 215 அடி, அகலம் 177 அடி என்றால் கோயிலின் அளவைக் கொஞ்சம் கற்பனை பண்ணிப் பார்க்கலாம்.

கோயில் கிழக்கே பார்த்த கோயில். கோயிலுள் மூன்று மூர்த்திகள் பிரதிஷ்டை ஆகியிருப்பதால் மூன்று கோண அமைப்பில் பிரதான கோயில் கட்டப்பட்டிருக்கிறது. அதனாலேயே அக்கோயிலைத் திரிகூடாசலம் என்றும் அழைக்கின்றனர். கோயிலைச் சுற்றி ஓர் உயர்ந்த பீடம் அமைக்கப்பட்டிருக்கிறது. கோயில் சுவர்களிலெல்லாம் ஓடும் யானைகள் குதிரைகள் வரிசை வரிசையாக இருக்கின்றன. மேலும் இதிகாசங்கள், புராணங்களில் உள்ள கதைகளை விளக்கும் சிற்ப வடிவங்களும் அடுக்கடுக்காய் இருக்கும். பிரகலாதனது கதை முழுவதுமே சிற்பவடிவில் அமைத்திருப்பதைக் காணலாம். தென் பகுதியில் ராமாயணச் சிற்பங்களும், வடக்குப் பகுதியில் மகா பாரதச் சிற்பங்களும், மேற்குப் பகுதியில் பாகவதச் சிற்பங்களும் நிறைந்திருக்கின்றன. இவை தவிர இன்னும் எண்ணற்ற தெய்வத் திரு உருவங்கள் எல்லாம் கோயில் சுவர் முழுதும் உருவாகியிருக்கின்றன. சுவரிலே வேற்று இடம் காண்பது அரிது. விஷ்ணுவின் பல அவதாரங்களான நரசிம்மர், வராகர், ஹயக்கிரீவர், வேணுகோபால், வாசுதேவர், இன்னும் பிரம்மா, சிவன், கணபதி, இந்திரன், மன்மதன், சூரியன், கருடன், லக்ஷ்மி, சரஸ்வதி, மஹிஷமர்த்தினி முதலிய வடிவங்கள் எல்லாவற்றையுமே காணலாம்.

இத்தனையும் பார்த்தபின் கோயிலுள் நுழைந்தால் அப்படியே அதிசயித்து நிற்க வேண்டியதுதான். ஒவ்வொரு தூணும் அத்தனை வேலைப்பாடு நிறைந்தது. விதானங்கள் அமைந்திருக்கும் அழகே தனி. அவைகளில் எல்லாம் பலவகையான சிற்ப வின்னியாசங்கள். பிரதான கோயிலில் நிற்பவன் கேசவன். அவரை அடுத்து வட பக்கத்துக் கோயில் தெற்கே பார்க்க நிற்பவன் ஜனார்த்தனன், தென் பக்கத்துக் கோயிலில் வடக்கே பார்க்க நிற்பவன் கோபாலன். கேசவன், ஜனார்த்தனன் எல்லாம் விஷ்ணுவின் வடிவங்களே. இவர்களில் குழல் ஊதும் கோபாலன் கிருஷ்ணாவதாரத்தில் நமக்கு அறிமுகமானவன். கேசவனும் ஜனார்த்தனனும் எந்த அவதாரத்தைச் சேர்ந்தவர்கள் என்றுகேட்கத் தோன்றும். நமக்குத் தெரியும், மகாவிஷ்ணு ஆயிரம் பேர்த் தேவன் என்று. மகாபாரதத்தில் அநுசாசன பர்வத்தில் விஷ்ணுவின் சஹஸ்ர நாமங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் இருபத்து நாலு அதிமுக்கியமானவை; அந்த இருபத்து நாலில் இரண்டு பெயர்கள்தான் கேசவன், ஜனார்த்தனன். இந்த மூர்த்திகளின் வடிவங்களை நாம் ஹொய்சலர் காலத்திய கோயில்களில் தான் காண்கிறோம். இவை இருபத்து நாலும் கிட்டத்தட்ட ஒன்று போலவே இருக்கும். எல்லாம் நின்ற திருக்கோலங்களே. திரிபங்க நிலைகளை யெல்லாம் காண இயலாது. எல்லா வடிவங்களுக்கும் நான்கு திருக்கரங்களும் தலையில் கிரீடமும் சாதாரணமாய் அணியும் அணிகளும் இருக்கும். சங்கு சக்கரம், கதை, பத்மம் வைத்திருக்கும் முறைகளிலேதான் கொஞ்சம் கொஞ்சம் வித்தியாசம் இருக்கும். இதன் விவரம் எல்லாம் ரூபமந்தனமும், பத்ம புரா

சோமநாதபுரத்துக் கோயில்




ணரும் விரிவாய்க் கூறும். நான் விளக்க விரும்பவில்லை.

இந்தச் சோமநாதபுரக் கோயிலிலுள்ள மூர்த்திகளில் ஜனார்த்தனனும் கோபாலனுமே அழகு வாய்ந்தவர்கள். கேசவன் என்று இன்று இருப்பவன் பின்னாலே செய்யப்பட்டவனாகத் தெரிகிறான். அவ்வளவு அழகுடையவனாகவும் காணோம். ஆம்! ஜக்கனாச்சாரி என்ற சிற்பி அன்று இக்கோயிலை வானுலகம் செல்லாது தடுப்பதற்கு முதலில் கேசவனது திரு உருவத்திலேதான் ஊனத்தை உண்டாக்கி யிருக்கிறான். ஊனம் உடைய உருவைப் பூஜையில் வைக்கக் கூடாது என்பதற்காக அதனை அகற்றி, பின்னர் புதிய கேசவனைச் செய்து வைத்திருக்கிறார்கள். இந்தக் கேசவனைச் செய்த சிற்பி அந்தப் பிரபல ஜக்கனாச்சாரியாக இருத்தல் முடியாது. இந்தக் கோயிலில் கோயில் கொண்டிருக்கும் ஒவ்வொரு மூர்த்தி முன்பும் ஒரு நவரங்க மண்டபம் இருக்கிறது. இந்தக் கோயிலின் பிரதான வாயிலின் முகப்பில் லக்ஷ்மிநாராயணனும் வேணுகோபாலனும் தனியே இருக்கிறார்கள். இக்கோயிலில் ஒரு விசேஷம். இன்னின்ன மூர்த்தியை இன்னின்ன சிற்பிகள் செய்து அமைத்தார்கள் என்ற விவரங்களும் ஒவ்வொரு மூர்த்தியின் அடிப்பீடத்தில் செதுக்கப்பட்டிருக்கிறது. சரித்திர ஆராய்ச்சிக்காரர்களுக்கு இது மிக்க உபகாரமாக இருக்கும். கோயிலையும் மூர்த்திகளையும் பார்த்த பின் வெளியே வர மனமிருக்காது. அத்தனை அழகு நிறைந்த கோயில் அது. அதனால் தானே ஹொய்சல மன்னர்கள் கட்டிய கோயில்களிலெல்லாம் சிறப்புடையது இதுவே என்று பெர்கூசன் குறிப்பிடுகிறார்.

இக்கோயில் 1269-ம் வருஷம் ஹொய்சல மன்னரான மூன்றும் நரசிம்மர் காலத்தில் அவரது உறவினரும் மந்திரி பிரதானிகளில் ஒருவராகவும் இருந்த சோமநாதர் என்பவரால் கட்டப்பட்டிருக்கிறது. கோயிலைச் சுற்றி ஒரு நகரும் நிர்மாணிக்கப்பட்டு அந்த ஊருக்கு அவர் பெயரையும் சேர்த்துச் சோமநாதபுரம் என்றும் பெயர் இடப்பட்டிருக்கிறது. கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிலே வைஷ்ணவ மதாச்சாரியரான இராமானுஜர் மைசூர் பிராந்தியத்தில் தங்கியிருந்து வைஷ்ணவத்தைப் பரப்பியதன் காரணமாக அங்கே எழுந்த கோயில்களில் இதுவும் ஒன்று. அது காரணமாக இந்தக் கோயில் கேசவன் கோயிலாகக் கட்டப்பட்டிருக்கிறது.

இங்குள்ள கல்வெட்டுக்கள், இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள மூர்த்திகளை யெல்லாம் பற்றி விவரமாகக் கூறுகின்றன. எல்லாவற்றையும் விட விஷ்ணுவின் வராக அவதாரமே சிறப்பாகக் கூறப்பட்டிருக்கிறது. மூன்றும் நரசிம்மன் வரை அந்தப் பிரதேசத்தை ஆண்ட ஹொய்சல மன்னர்களின் வம்சாவளியும் விளக்கமாகத் தரப்பட்டிருக்கிறது. ஒரு கல்வெட்டில். ஹளபேடு என்னும் துவார சமுத்திரத்தில் மந்திரி பிரதானிகளுடன் மூன்றும் நரசிம்மன் கொலுவிருந்த போது, சோமநாதன் அந்த மன்னனை வணங்கிச் சோமநாதபுரம் கேசவன் கோயிலுக்கு நிபந்தங்கள் ஏற்படுத்தும்படி வேண்டினான் என்று குறித்திருக்கிறது. 1497-ல் ஏற்பட்ட



ஒரு கல்வெட்டில் வசிட்ட முனிவர் இந்தப் பக்கத்திலே தம் பர்ணசாலையை அமைத்திருந்ததாகவும், அந்தப் பர்ணசாலையைச் சுற்றி ஓர் அக்கிரகாரம் இருந்ததாகவும் அந்த அக்கிரகாரம் காலகதியில் அழிந்து போக அதைத் திரும்பவும் உருவாக்கச் சாளுவ மன்னன் இம்மடி நரசிங்கன் உத்தர விட்டான் என்றும் கூறுகிறது. இந்த அக்கிரகாரத்தில் வேதம் ஓதுவதில் வல்லவர்களான அந்தணர்கள் இருந்ததாகவும், அங்குள்ள இளைஞரும், நாகணவாய்ப் புட்களும் மீமாம்சம், தர்க்கம், வியாகரணம் முதலிய சாஸ்திரங்களைக் கற்றிருந்தன என்றும் தெரிகிறது.

இக் கோயிலைக் கட்டிய சோமநாதன் சகல கலாவல்லவனாக இருந்திருக்கிறான். அவனைப் பற்றி அவன் புகழைப் பற்றி யெல்லாம் விரிவாகவே கல்வெட்டுக்கள் பேசுகின்றன. மந்திரிகளில் அவன் ஒரு மாணிக்கம் என்றும், அரசியலில் அவன் ஒரு சாணக்கியன் என்றும் வியாபாரத்தில் அவன் ஒரு புகாந்தரன் என்றும் புகழப்பட்டிருக்கிறான். இத்தனைக்கும் உரியவன் கேசவனுக்கு ஓர் ஆலயம் எடுப்பித்து இன்றும் தன் புகழைப் பெருக்கிக் கொண்டிருக்கிறான். இந்தக் கேசவன் ஆழ்வார்களால் மங்களா சாஸனம் செய்யப்பட்டவன் இல்லை. ஆழ்வார்கள் காலத்துக்கெல்லாம் பின்னால் உருவானவன் அல்லவா? என்றாலும் அழகிய மணவாள தாஸன் என்னும் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், திருவரங்கக் கலம்பகம் பாடும்போது, கேசவனை நினைந்திருக்கிறார்.

கேசவனையே செவிகள்
கேட்க; திரு அரங்கத்து
ஈசனையே சென்னி
இறைஞ்சிடுக; — நேசமுடன்
கண்ணனையே காண்க இரு
கண்; இணர்கொள் காயாம்பூ
வண்ணனையே வாழ்த்துக என்
வாய்.

என்று அருமையான பாடல் ஒன்றும் பாடியிருக்கிறார். ஆதலால் நாமும் கேசவன் புகழைக் கேட்டு அவன் வண்ணத்தை வாழ்த்திக் கொண்டே திரும்பலாம்.



பத்தினிக் கோட்டம்

அத்தியாயம் ஐந்து

பரவாதிமல்லர் இல்லம்

அந்த எளிய இல்லத்தின் வனப்பு மிக்க அமைப்பைச் சுற்றி வளைத்துப் பார்த்தபடி மௌனமாக உட்கார்ந்திருந்தார் வில்வேலி.

தன் எதிரே அமர்ந்திருக்கும் பெரியவரையே ஆவல் மீதூரப் பார்த்துக் கொண்டிருந்த ஆந்திர இளவரசி உத்தம சீலி, ''ஆமாம், ஐயா! அதை நினைக்க நினைக்க எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது!'' என்று நெஞ்சு சிலிர்த்த குரலில் கூறினாள்.

''நானும் அதை எண்ணித்தான் வியந்து கொண்டிருக்கிறேன் இளவரசி! இப்போதெல்லாம் இம்மாதிரி விடியற்கால நேரங்களில் நான் வெளியே எங்கும் உலாவப் போவதில்லை; காரணம், இன்றைய அரசியல் சூழ்நிலையே! என்னதான் பெரிய கலைஞனாயிருந்தாலும் நாட்டின் அன்றாட நடப்புக்களைப் புறக்கணித்து வாழ்ந்துவிட முடியாதல்லவா? ஆனால், இன்றைக்கென்று ஏனோ வெள்ளி முளைத்த வேளையில் உறக்கம் தெளிந்து எழுந்து தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தேன். பிறகு என்னையறியாமலே ஏதோ சிந்தனையில் சாலையிலே இறங்கி நடக்க ஆரம்பித்தேன். அப்போதுதான் சற்றும் எதிர்பாராத விதமாக நீங்கள் எதிர்ப்பட்டு, என்னிடமே அந்தச் சாலையின் போக்கு விவரத்தைக் கேட்டீர்கள். சந்தர்ப்பம் எப்படியெல்லாம் மனிதர்களைச் சந்திக்க வைத்து விடுகிறது, பார்த்தீர்களா?'' என்று மகிழ்ச்சி கலந்த மென்முறுவலுடன் சொன்னார் அந்தப் பெரியவர்.

''இதெல்லாம்கூட எனக்குப் பெரிய விஷயமாகத் தோன்றவில்லை ஐயா! முன்னதாகத் தகவல் ஏதும் அறியாமலே அந்த இடத்தில் — அந்த நேரத்தில் — திடீரென்று சந்திக்க நேர்ந்தும், என்னுடைய குரல் ஒன்றின் மூலமே என்னை அடையாளம் தெரிந்துகொண்டு என் பெயரைச் சொல்லி அழைத்தீர்களே, அதுதான் பெரிய ஆச்சரியம்!''

''எந்தக் கலைஞனும் தன் புத்திபூர்வமாக ஏதேனும் ஓர் உருவத்தையோ குரலையோ மனத்தில் பதித்துக்கொண்டானானால், அதை அவன் எளிதில் மறந்து விடுவதில்லை அம்மணி!''

''முற்றிலும் உண்மை! ஏனென்றால், *சேதியக் கலைஞர் பரவாதிமல்லர் நீங்கள்தாம் என்பதை உங்கள் வாயாலேயே சொன்ன பிறகும், அதை நான் உறுதிப்படுத்திக் கொள்ள உங்களிடம் ஏதேதோ கேள்விகளெல்லாம் கேட்டுவிட்டேன் அல்லவா? அந்த அசட்டுத்தனத்தை இப்போது நினைத்தாலும் மனம் மிகவும் வேதனையடைகிறது.''

''நல்ல வேடிக்கைதான்! இதற்கெல்லாம் வருத்தப்பட ஆரம்பித்து விட்டால் அப்புறம் மகிழ்ச்சியடைவதற்கென உலகில் ஒரு விஷயமும் கிடைக்காமற் போய்விடும்'' என்று மென்மையான கேலிக்குரலில் கூறிச் சிரித்த பெரியவர் மீண்டும் தொடர்ந்து சொன்னார்: ''அது உங்கள் தவறல்ல, இளவரசி! அப்போதிருந்த குழப்பமான பயந்த மன நிலையில், நான் என்ன — உங்கள் தந்தையாரையே பார்க்க நேர்ந்திருந்தாலும், அவரை நீங்கள் அடையாளம் தெரிந்து கொள்ளச் சிரமப்பட்டே இருப்பீர்கள்! பத்து ஆண்டுகளுக்கு முன்னால், என் சுற்றத்தாரைப் பார்க்க வேண்டி வேங்கி நகருக்கு வந்தபோது, உங்களை நான் அரண்மனையில் வைத்து ஓரிரு முறை சந்தித்ததுதானே? அப்போது நீங்கள் ஒன்பது வயதுச் சிறுமியாய் இருந்தீர்கள். அந்தச் சிறு வயதில் பார்த்த ஒருவரை இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னும் இந்த அளவுக்காவது நினைவில் வைத்திருக்க உங்களால் முடிந்திருக்கிறதே, இது வியப்புக்குரிய விஷயம் அல்லவா?''


''ஆம், கலைஞரே! உங்களைப் பற்றியும் உங்களிடமுள்ள சேதியக் கலைத் திறனைப் பற்றியும் என் தந்தையார் என்னிடம் அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பார். எனது பெரிய தந்தையார் விக்கிரமாதித்த வல்லபரின் சிற்றப்பாவான மங்களேசன் என்பவர் உங்களைக் கொண்டு, வாதாபியிலும், உண்டவல்லி—சித்தநகரம் முதலான இடங்களிலும் நிர்மாணித்த அற்புத சமணக் குகைக் கோயில்களை நான் நேரில் சென்று பார்த்தபோது தான், அவருடைய கூற்று எத்தனை உண்மையானது என்பதை என்னால் நன்கு உணர முடிந்தது. இவ்வளவு பெரிய கலா வித்தகரை வேற்று நாட்டொன்றிடம் பறிகொடுத்து விட்டோமே என்ற ஆறுத்

*சேதியக்கலை - கோயில் நிர்மாணக்கலை.

துயரம் என் தந்தையாருக்கு மட்டுமல்ல, எனது பெரிய தந்தையார் விக்கிரமாதித்த வல்லபருக்கும், அவரது சளுக்கியக் குடிமக்களுக்கும்கூட இன்னமும் இருந்தே வருகிறது.''

இதைக் கேட்டுப் புன்முறுவல் பூத்துக் கொண்ட பெரியவர் இதமான குரலில் சொன்னார்: ''என்னைப் பற்றித் துயரப்பட என்ன இருக்கிறது இளவரசி? நாடு, மொழி, இனம், மதம் ஆகிய அனைத்துக்கும் அப்பாற்பட்ட ஓர் எளிய கலைஞன்தானே நான்?''

''அப்படிச் சொல்லாதீர்கள், ஐயா! எங்கள் ஜன்மப் பகைவர்களான இந்தப் பல்லவர்கள் இதுவரை எங்களுக்கு எத்தனை யெத்தனையோ சிறுமைகளையும் கொடுமைகளையும் அவமானங்களையும் இழைத்திருக்கிறார்கள். எங்கள் நாட்டின் பல்வேறுபட்ட செல்வங்களையெல்லாம் கவர்ந்து வந்து எங்களை வறுமையிலும் துன்பத்திலும் ஆழ்த்தியிருக்கிறார்கள். ஆயினும், அவற்றுக்கெல்லாம் நாங்கள் எப்போதுமே கவலைப்பட்டதில்லை. ஏனென்றால், அவையெல்லாவற்றுக்குமாகச் சேர்த்து என்றைக்காவது ஒரு நாள் அவர்களைப் பழி வாங்கி விடுவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்தது. அதன்படி என் தந்தையார் விக்கிரமாதித்த வல்லபர் இன்று இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தையே கபளீகரம் செய்து, பழி தீர்க்கும் படலத்தில் இறங்கியிருக்கிறார். ஆனால், இதனையெல்லாம் ஈடு செய்ய முடியாத இன்னொரு பேரிழப்பை இப்பல்லவர்கள் ஏற்படுத்தி விட்டார்களே, அதை நினைக்கும்போதுதான் எங்கள் நெஞ்சம் குமுறிக் கொந்தளிக்கிறது. ஆம், ஐயா! இன்று சளுக்கிய மாமன்னரை எதிர்த்து நிற்க மாட்டாமல் புறங்காட்டி ஓடி ஒளிந்திருக்கும் பரமேசுவர வர்மனின் பாட்டனான நரசிம்ம பல்லவன், அன்று எங்கள் அழகிய நகரான வாதாபியைத் தீயிட்டுப் பொசுக்கிச் சாம்பலாக்கினான் அல்லவா? அத்தனை பெரிய நஷ்டத்தை உண்டாக்கிய அவன், அதோடு திரும்பவில்லை; எங்கள் செல்வத்திலெல்லாம் பெருஞ் செல்வமாய் வாதாபி நகரில் உங்களால் உருவாகி நிற்கும் அந்த ஒப்பற்ற எழிற்படைப்பான குகைக் கோயில்களைப் பார்த்து மயங்கிய அவன், அவற்றைப் பெயர்த்து எடுத்துச் செல்ல முடியாத காரணத்தால் அவைகளைச் சிருஷ்டித்த மூலகர்த்தரான உங்களையே கவர்ந்து சென்று விட்டான். இதனால் எங்கள் நாட்டுச் சேதியக் கலைச் செல்வமே பறிபோய் விட்டதுமல்லாமல், அன்று முதல் இன்று வரை அந்தக் கலை தலையெடுக்காமலே



மறைந்துவிட்டிருக்கிறது. இது எங்களுக்கு எவ்வளவு பெரிய நஷ்டம்! இதற்குக் காரணமான இப்பல்லவ நாட்டை நாங்கள் எத்தனை முறை பழி தீர்த்துக் கொண்டாலும் அந்த நஷ்டத்துக்கு ஈடாகுமா? எனவேதான் இதை எண்ணி யெண்ணி நாங்கள் ஆறாத் துயர் அடைகிறோம் ஐயா!'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் பதிலிறுத்தாள் உத்தமசீலி.

பரவாதிமல்லர் என்ற அந்தச் சேதியக் கலைஞர் தம் வெண்ணிறத் தாடியை நீவிக் கோதிக்கொண்டே அமைதியான குரலில் சொன்னார்: ''இளவரசியார் நான் சொன்னதை இன்னும் சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். காலத்தை எதிர்த்து நிற்கும் வல்லமை பெற்ற எந்தக் கலைச் சிருஷ்டியும் யாருக்கும் சொந்தமாவது இல்லை. அதைச் சிருஷ்டித்தவனேகூட அது சிருஷ்டியான பின் சொந்தம் பாராட்ட முடியாது. அப்படி அதைச் சொந்தமென எண்ணி மகிழ்ச்சியடைவதிலோ, சொந்தமில்லையென எண்ணித் துயரமடைவதிலோ, பொருள் இல்லை. ஏனென்றால், அத்தகைய சிருஷ்டி, எந்த ஒரு நாட்டின் எல்லைக்குள்ளோ எந்த ஒரு வீட்டின் எல்லைக்குள்ளோ தோன்றினாலும், இறுதியில் அது உலகின் பொதுச் சொத்தாகவே ஆகி விடுகிறது. பொதுச் சொத்து என்று ஆனபின் அதற்கு நாடு ஏது, மொழி ஏது, மதம் ஏது? எனவேதான் இத்தகையதொரு கலைச் சிருஷ்டித் தொழிலை மேற்கொண்டிருக்கும் என்னையே அந்தத் தொழிலின் தன்மைக்கேற்ப மாற்றிக்கொண்டு விட்டேன் என்கிறேன்!''


ஒரு கணம் ஏதோ யோசித்து விட்டுத் தொடர்ந்து சொன்னார் பெரியவர்: ''இன்னொரு விஷயத்தையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும், அம்மணி! மாமல்லர் நரசிம்ம வர்மர் என்னை வாதாபியிலிருந்து அழைத்து வந்த பின்னர்தான், பல்லவ நாட்டில் குடைவரைக் கோயில்கள் அமைக்கும் கலை தோற்றுவாயாகியது என்று நீங்கள் நினைப்பது தவறு. நான் இங்கு வருவதற்கு முன்னமே, மாமல்லரின் தந்தையான மகேந்திரவர்மர் அந்தக் கலையை ஓரளவு வளர்த்தே வைத்திருந்தார். எவ்வாறெனில், அவரே அக்கலையில் முழுத் தேர்ச்சி பெற்றுச் சேதகாரியாகவும் சித்திரக்காரப் புலியாகவும் விளங்கினார். அவர் தொடங்கிவைத்த அந்தக் கலைப் பணியைத்தான் நான் தொடர்ந்து செய்ய முயன்றேனே தவிர, அதன் மூலப் பெருமை அவரையே சாரும். ஆந்திர இளவரசியார் மற்றுமொரு விஷயத்தையும் இங்கு தெரிந்து கொள்ள வேண்டும்: நான் வாதாபியில் இருந்திருந்தால் இதுகாறும் இக்கலைத் துறையில் எந்த அளவுச் சாதனைகள் புரிந்திருப்பேனோ அதைவிட இரண்டு மடங்கு அதிகமாகச் சாதிக்க இங்கே எனக்கு ஆக்கமும் சந்தர்ப்பமும் சுதந்திரமும் அளிக்கப்பட்டன. குறுகிய குடிமைப்பற்றை விட்டு உலகப் பொது நோக்கில் நின்று இதைக் கவனித்தால், மெய்யாகவே நீங்கள் துயரப்படுவதற்கு மாறாக மகிழ்ச்சியே அடைவீர்கள்.''

இதுவரை இவர்கள் பேச்சில் கலந்து கொள்ளாமல் ஏதோ சிந்தனையிலிருந்த தளபதி வில்வேலி, பரவாதிமல்லரின் இந்தப் பக்குவ மொழிகளைக் கேட்டுச் செவி கசந்தவராய் முகத்தைச் சுளித்துக் கொண்டு, ''சேதியக் கலைஞர் சொல்வதைப் பார்த்தால், பல்லவநாடு எங்கள் வல்லபர் காலடியில் வீழ்ந்துபட்டதை விரும்பவில்லை என்றல்லவா தோன்றுகிறது?'' என்றார் அலட்சியமாக.

''நீங்கள் சொல்வதிலும் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது!'' என்று பூப்போன்ற மென்மைக் குரலில் புன்னகையுடன் சொன்னார் பரவாதிமல்லர்.

உத்தமசீலியும் வில்வேலியும் இதைக் கேட்டுத் துணுக்குற்றுத் தலைநிமிர்ந்தனர். ஆனால், சேதியக் கலைஞரோ அவர்களின் அந்தத் துடிப்பு நிலையைக் கவனியாதவர்போல் மேலும் சொன்னார்: ''ஆம், அன்பரே! மனிதனின் கற்பனை சிந்தனைக்கும், கலைமுயற்சிக்கும் ஒரு வெற்றிச் சின்னமாக இந்தப் பல்லவப் பெருநாட்டின் கடற்றுறைப் பட்டினமான மாமல்லபுரத்தில் உருவாகி வரும் சிரஞ்சீவிக் கோயில்களில் சிலவற்றைப் படைத்த பெருமை எனக்கு உண்டு. மகிடாசுர மண்டபம், வராக மண்டபம், திரிமூர்த்தி மண்டபம் ஆகிய மூன்று குகைக் கோயில்களையும், ஒரே கல்லைக் கொண்டு புத்தம் புதிய முறையில் தேர் வடிவிலே செதுக்கி உருவாக்கிய தருமராசன் கோயில், பீமசேனன் கோயில், அர்ச்சுனன் கோயில், திரௌபதி கோயில், சகாதேவன் கோயில் முதலான ஐந்து கோயில்களையும், உயரமான இரு பாறைகளில் கண்ணனின் கோவர்த்தன மலைக் காட்சி, சகர சாகரர் கதைக் காட்சி ஆகியவற்றைப் புடைப்புச் சித்திரங்களாக வடித்தெடுத்ததையும் குறிப்பிடலாம். இவை, நயனாங்குரக் கோமான் மாமல்ல பல்லவரின் ஆட்சிக் காலத்திலே அவரது நேரிடைப் பார்வையில் உருவானவை. இறுதியாக அவர் மிகச் சிறந்த திட்டத்துடன் என்னைக் கொண்டு உருவாக்கத் தொடங்கிய கணேசர் கோயில்







நிறைவு பெறு முன்பே வைகுந்த பதவியை அடைந்து விட்டார். அவருக்குப் பின் பல்லவ அரியணையில் அமர்ந்த அவரது மைந்தர் இரண்டாம் மகேந்திரவர்மன் இந்த அரிய கலைப் பணிகளில் சிறிதும் நாட்டம் கொள்ளாமல் இறைவனடி சேர்ந்தார். மாமல்லர் மறைந்த பின் எனது சேதியக் கலைத் திறனைக் காட்ட வாய்ப்பு இன்றி, கை விலங்கிட்டாற்போல் வீட்டோடு முடங்கிக் கிடந்த நான், பெரும்பிடுகு பரமேசுவர வர்மன் ஆட்சி பீடத்தில் ஏறியதும், அரைகுறை உருவிலே எழும்பி நிற்கும் அந்தக் கணேசர் கோயிலை நிறைவாக்கி முடிக்க முன் வருவார் எனப் பேராவலுடன் எதிர்பார்த்தேன். ஆனால் என்னுடைய துரதிர்ஷ்டம் அவரை ஆட்சி பீடத்தை விட்டே விரட்டியடித்து விட்டது. எனவேதான் எனது அன்னை நாடான சளுக்கியம் பல்லவ நாட்டை அடிபணிய வைத்த பேரின்பச் சேதிகேட்டுப் பெருமகிழ்ச்சி கொள்வதற்குப் பதிலாக ஆழ்ந்த துயரத்தில் மூழ்கிக் கிடக்கிறேன். எந்த மன்னன், எந்த நாட்டைக் கைப்பற்றி, எப்படி ஆண்டால் எனக்கென்ன? சாம்ராஜ்யங்கள் இன்று தோன்றலாம், நாளை அழியலாம்; பேரரசர்கள் இன்று புகழோடு வான்முகட்டில் ஏறி நிற்கலாம், நாளை பழியோடு அதல பாதாளத்தில் வீழ்ந்துபடலாம். ஆனால் என்னுடைய கலைச் சிருஷ்டிகளோ காலத்தால் அழிக்க முடியாதவை. அவற்றுக்கு ஆக்கம் தர எந்த நாடு முன்வருகிறதோ அதுவே என் தாய் நாடாக இருக்கும். அவற்றை ஆக்குவிக்க எந்த மன்னன் முன்



வருகிறானோ அவனையே என் தலைவனாக ஏற்பேன். இப்போது புரிந்துகொண்டீர்களா, நான் முன்பு சொன்னதன் பொருளை?''

கசந்த நிலையில் அமர்ந்திருந்த வில்வேலியும், உத்தமசீலியும் பெரியவரின் இந்தப் பேச்சைக் கேட்டுச் சற்றே முகம் மலர்ந்தவர்களாய் நிமிர்ந்து உட்கார்ந்தனர்.

''அப்படியானால், அந்த முற்றுப்பெறாக் கணேசர்கோயிலை எங்கள் மாமன்னர் விக்கிரமாதித்தர் முழுமையாக்க முன் வந்தால், பல்லவப் பரமேசுவர வர்மனின் தோல்வியைக் கலைஞரவர்கள் ஒப்புக்கொண்டு அதற்காக மகிழ்ச்சியுறுவார் அல்லவா?'' என்று உள்ளார்ந்த குறும்புக் குரலில் சிரித்துக் கொண்டே கேட்டார் வில்வேலி.

நாணற்பூச் செண்டு போன்ற தம் வெண்தாடி விரிந்து பறக்கக் கலகல வெனச் சிரித்தார் பரவாதிமல்லர். ''அப்படி ஓர் அதிசயம் நடக்குமானால் அதை மனப்பூர்வமாக ஏற்கச் சித்தமாக இருக்கிறேன்!''

''என் பெரிய தந்தையார் ஏன், அவர் சார்பில் நானே அக்கோயிலை நிறைவாக்கி முடிப்பதற்கான எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்க முன் வருகிறேன் ஐயா!'' என்று மகிழ்ச்சியால் முகம் சிவக்கச் சொன்ன உத்தமசீலி, ஒரு விநாடி ஏதோ யோசித்து விட்டுச் சட்டென நிமிர்ந்து,



"ஆனால் ஒரு வேண்டுகோள்...." என்று தயங்கிய படியே இழுத்தாள்.

"சொல்லுங்கள், இளவரசி!"

"கணேசர் பெயரிலே அரைகுறையாக எழும்பியிருக்கும் அந்தக் கோயிலே நமது சமண சமயத்தின் முழு முதற் தெய்வமான அருகப் பெருமானின் திருப் பெயரில் உருவாக்கி முடிக்க வேண்டு மென்பதே என் வேண்டுகோள்! இதைக் கலைஞரவர்கள் ஏற்றுக் கொள்வார் அல்லவா?"

பரவாதிமல்லரின் முகம் சட்டென்று வெளுத்துச் சிறுத்தது. ஆந்திர இளவரசியையும் சளுக்கியத் தளபதியையும் மாறி மாறிப் பார்த்த அவர் புன்சிரிப்புடன் அமைதியாகச் சொன்னார்: "இளவரசியாரின் சமண சமய பக்திக்கு என் சிரம் தாழ்ந்த அஞ்சலி உரித்தாகும்! ஆனால் அந்த ஒரு காரியத்தைச் செய்ய மட்டும் நான் என்றுமே உடன்பட மாட்டேன் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்! பிறர் உரிமைகளைப் பறிப்பதிலே பெருமை காணும் வழக்கம் அரசியலோடு நிற்கட்டும்; அது சமயத் துறையிலும் பரவிச் செல்லவேண்டாம்!"

ஏதும் பேசத் தோன்றாமல் தலை கவிழ்ந்தாள் இளவரசி உத்தமசீலி.

அத்தியாயம் ஆறு

ஓடையிலே குளிர் தரு!

வில்வேலியின் மனத்தில் வெறுப்புணர்ச்சி வியர்த்துக் கொட்டியது. அதிகாரச் சூழ்நிலையிலேயே இருந்து பழக்கப்பட்ட அவருக்கு இங்கே இந்த மாபெரும் கலைஞரின் முன்னே குழைந்து பணிந்து கட்டுப்பட்டுப் பேசிக் கொண்டிருக்கக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அங்கிருந்து விரைவில் புறப்பட்டு விட வேண்டும் என்று எண்ணியவராய், "அது சரி, இளவரசி! அந்த முச்சந்தியில் என்னை ஏன் அப்படி அலைய விட்டுப் புறப்பட்டீர்கள்? அது பற்றி இந்நேரம் வரை நீங்கள் ஒன்றுமே சொல்லவில்லையே!" என்று கேட்டுப் பேச்சின் திசையை மாற்றினார்.

ஏதோ சிந்தனையில் இருந்த இளவரசி உத்தமசீலி, "வருத்தப்படாதீர்கள் ஐயா! உங்களை அலைய வைக்க வேண்டு மென்பதற்காக நான் அங்கிருந்து புறப்படவில்லை. நீங்கள் வருவதற்கு முன்பே புறப்பட்டதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. அதைச் சொன்னால் நீங்களே சற்று அதிர்ச்சி யடைவீர்கள்" என்று உள்ளடங்கிய கமறலுடன் கூறினாள்.

"என்ன நடந்தது இளவரசி?" என்று அவசரமாகக் கேட்டார் வில்வேலி.

"வழி விவரம் கேட்டு வருவதற்காகப் போனீர்கள் அல்லவா? நீங்கள் போன சற்றைக்கெல்லாம் அந்த நெடுஞ்சாலைப் பக்கமிருந்து இடையர்கள் போல் தோன்றிய நான்கு பேர் வெகு வேகமாக வந்தார்கள். தொலைவிலேயே என் சிவிகையைப் பார்த்த அவர்கள் தமக்குள் ஏதோ பேசிக் கொண்டு சட்டென்று சாலையின் இடது பக்கம் இறங்கி ஒரு புதருக்குப் பின்னால் மறைந்தார்கள். இதைச் சிவிகையினுள் இருந்தபடி கவனித்த நான் கலவரமடைந்தேன். சிவிகையாட்களை எச்சரிக்கையா யிருக்கும்படி கட்டளையிட்டேன். சற்று நேரங் கழித்துப் புதரிலிருந்து வெளிப்பட்ட அந்நால்வரும், என் சிவிகையைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு சாலையின் குறுக்காகச் சென்று ஒரு கொடிப் பாதையில் இறங்கி மேற்குத் திசை

நோக்கி விரைந்தார்கள். அதற்குள் பொழுது நன்றாக இருட்டி விட்டது. வழி கேட்கப் போன நீங்களும் வரவில்லை....'' என்று மளமளவெனச் சொல்லிக்கொண்டு வந்த உத்தமசீலி, சட்டென்று நிறுத்தினாள்.

இதுவரை அமைதியாக உட்கார்ந்திருந்த பரவாதிமல்லர் தணிந்த குரலில், ''இன்று காற்று மிகவும் சில்லென்று வீசுகிறது! அடேயப்பா, என்ன குளிர்!'' என்று முணுமுணுத்துக் கொண்டே எழுந்து போய் அந்த மயில் கண் சாளரத்தின் திரையை இழுத்து மூடினார்.

''ஏன் நிறுத்தி விட்டீர்கள் இளவரசி? சொல்லுங்கள்!'' என்று துரிதப் படுத்தினார் தளபதி.

''காடாந்தகாரமாய் இருண்டு கிடந்த அந்தப் பயங்கரச் சூழ்நிலையில் என்னையறியாமலே என் மனத்தில் ஒருவித அச்சம் சூழ்ந்தது. அதற்கு மேலும் அங்கு இருப்பது நல்லதல்ல என்று உள் மனம் உணர்த்தவே, அம்முச்சந்தியில் பிரியும் சாலைகளில் ஏதேனும் ஒன்றைப் பற்றிப் பிரயாணத்தைத் தொடரும்படி சிவிகை தூக்கிகளுக்கு உத்தரவிட்டேன். விசாலமான அந்தச் சாலையின் அமைப்பைக் கொண்டு அநேகமாக அது உறையூர்ச் சாலையாகத்தான் இருக்கும் என்று நம்பினேன். ஆனால், நேரமாக ஆக அந்த நம்பிக்கை மெலிந்தது. உங்களைப் பற்றிய கவலை மேலோங்கியது. இருக்கச் சொன்ன இடத்தில் நான் இல்லாததால், நீங்கள் என்னைத் தேடிக் கொண்டு வேறெங்கேனும் அலைந்து திரிந்து அல்லற்படுவீர்களோ என்ற சஞ்சலம் வேறு மனத்தை வருத்தியது. வந்த வழியே திரும்பிப் போய் விடுவதா, அல்லது மேலே பயணத்தைத் தொடருவதா என்றே தெரியாமல் குழம்பித் தவித்தேன். பிறகு, என்னவானாலும் சரி என்று அந்தச் சாலையிலேயே விரைந்து போகும்படி சிவிகை தூக்கிகளுக்குப் பணித்து விட்டு, இரவெல்லாம் கண்ணயராமல் விழித்துக் கிடந்தே நேரத்தைக் கழித்தேன்....

''வெள்ளி முளைத்த நேரத்தில் ஏதோ ஓர் ஊர் நெருங்கிக்கொண்டிருப்பது தெரிந்தது. மேலும் சற்றுத் தூரம் சென்றபோதுதான், எங்கள் எதிரே நம் சேதியக் கலைஞர் பரவாதிமல்லர் வந்துகொண்டிருந்தார். அவரைப் பார்த்தபோதுகூட முதலில் எனக்கு அச்சமே தோன்றியது. பிறகு ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவரிடம் அந்தச் சாலையைப் பற்றி விவரம் கேட்டேன். அவர்

சொன்ன மறுமொழி என்னைத் திடுக்கிட வைத்தது. காரணம், நான் வந்து கொண்டிருக்கும் சாலை, பெருவளநல் லூருக்குப் போவது என்றும், அந்த ஊரின் எல்லையைத்தான் இப்போது அடைந்திருப்பதாகவும் சொன்னார். அதன்பின் அவரை இன்னாரெனத் தெரிந்து கொண்டதும், அதுவரை யில் இருந்த பயம் குழப்பம் எல்லாம் போய், அவருடைய அழைப்பின்பேரில் இதோ இந்த இல்லத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறேன்.''

சாளரத்தின் அருகில் நின்றுகொண் டிருந்த பரவாதிமல்லர் தம் இருக்கைக் குத் திரும்பி வந்து அமர்ந்தார்.

இளவரசி சொன்ன விஷயங்களைக் கேட்டு வெலவெலத்துப் போன வில் வேலி, ''நான் சந்தேகப்பட்டது சரி யாகவே போயிற்று!'' என்றார் வெடிப் பும் துடிப்புமான குரலில். மீண்டும் அவர் தொடர்ந்து, ''இளவரசி! நீங்கள் அந்த முச்சந்தியில் எனக்காகக் காத் திராமல் உடனே புறப்பட்டு விட்டது மிக மிக நல்லதென்றே எனக்குப் படு கிறது. இல்லையானால் நிச்சயம் உங் களுக்கு ஏதேனும் தொல்லைகள் ஏற்பட் டிருக்கும்'' என்று கூறி, தாம் வழி கேட்கப் போனதிலிருந்து அந்த வாலிப னுடன் திரும்பி வந்தது வரையில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் விவர மாகச் சொன்னார்.

''அப்படியானால் நான் பெருவள நல்லூர்ச் சாலையில்தான் போயிருப் பேன் என்பதையும், பரவாதிமல்லர் இல்லத்தில் தங்கியிருக்கிறேன் என்பதை யும் நீங்கள் எவ்வாறு அத்தனை தீர்க்க மாகத் தெரிந்துகொண்டு வந்தீர்கள்?''

''அதுதான் எனக்கும் ஆச்சரியமாக இருக்கிறது அம்மணி! அந்த வாலிபன் பெருவளநல்லூர்ச் சாலையை உறையூர்ச் சாலை என்று எனக்கு மாற்றிக் காட்டி விட்டான். நானும் அதை நம்பி அதே சாலையில் வந்துகொண் டிருந்தபோது உங்களுடைய சிவிகை இந்த இல்லத்தின் எதிரே இருப்பதைக் கண்டேன். இங்கு வந்த பிறகுதான் இது பெருவளநல் லூர் என்பதும், இந்த இல்லம் நமது சேதியக் கலைஞருடையது என்பதும் தெரிய வந்தன.''


''நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அந்த வாலிபன் உங்களை ஏதோ சதித் திட்டத்தோடுதான் வழி மாற்றி விட் டிருக்கிறான் என்றல்லவா எண்ணத் தோன்றுகிறது?''

''ஆம், இளவரசி! அப்படித்தான் நானும் நினைக்கிறேன்.''

''பெருவளநல்லூர்ச் சாலையில் நான் போயிருக்கிறேன் என்பதை அறிந்து


ரூ.5,395 பரிசுகளாக வெற்றி பெறுங்கள் 'ஆஸ்ப்ரோ' திறமைப் போட்டி

முதற்பரிசு:




12 வருட தேசிய திட்ட சேமிப்பு பத்திரம். தற்போதைய மதிப்பு ரூ.2,000. 12 வருடங்களுக்குப் பின் ரூ.3,300.

இரண்டாவதுபரிசு:



மர்பி ரேடியோ மதிப்பு ரூ.865.00.

மூன்றாவதுபரிசு:



உஷா தையல் மிஷின் மதிப்பு ரூ.530.00.

தகுதிப்பரிசு:



50 பார்க்கர் பால்பாயிண்ட் பேனாக்கள். மதிப்பு ஒவ்வொன்றும் ரூ.14.00.

இந்த கண்ணாடி ஜாடியில் எவ்வளவு 'ஆஸ்ப்ரோ' வில்லைகள் அடங்கும் என்பதைக் கணக்கிடுங்கள்!

ஜாடியின் பரிமாணங்கள்:–
26 செ. மீ. x 52 செ. மீ.
நான்கு 'ஆஸ்ப்ரோ' வில்லைகள் கொண்ட ஒவ்வொரு பட்டையின் பரிமாணங்கள்:
13 செ. மீ. x 3·9 செ.மீ.



அருகாமையிலிருக்கும் உங்கள் ஆஸ்ப்ரோ வியாபாரியிடம் எல்லா விபரங்களும், பிரவேசக் கூபன்களையும் பெற்றுக்கொள்ளவும்.



தலைவலி, ஜுரம், ஜலதோஷம் மற்றும் ப்ளூவிற்கு 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள் - மீண்டும் நிச்சயமாக சுகம் பெறுங்கள்

ஒரு நிக்கோலஸ் Ⓝ தயாரிப்பு

தரத்திற்கும் தூய்மைக்கும் நீத்தம் பெறும் உத்தரவாதம்.

A.G.150 TML

தான் அவன் உங்களை அதே சாலையில் திருப்பி விட்டிருப்பானோ?''

''அப்படி இருக்க முடியாது. நீங்கள் உறையூர்ச் சாலையில் போயிருப்பதாக எண்ணி, உங்களை நான் பின்தொடராமல் தடுக்கவே, என்னைப் பாதை மாற்றி விட்டிருப்பான். அல்லது அவன் உங்களைப்பற்றி ஏதும் அறியாமலே, எனக்கு மட்டும் ஏதேனும் ஆபத்தை உண்டாக்க அவ்வாறு செய்திருப்பான்.''

''அந்த வாலிபன் யாராய் இருப்பான்...?''

''நான் வழி விவரம் கேட்பதற்காகப் போனபின் நீங்கள் பார்த்த அந்நான்கு பேரில் அவனும் ஒருவனாக இருக்கலாம்; அல்லது அவர்களுடன் சேர்ந்த ஐந்தாம் பேர்வழியாகவுமிருக்கலாம்!''

ஒரு கணம் தயங்கிய உத்தமசீலி, மெல்லிய குரலில், ''எனக்கென்னவோ வேறு விதமாக நினைக்கத் தோன்றுகிறது....'' என்றாள்.

''நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் இளவரசி?'' என்று துடிப்புடன் வினவினார் வில்வேலி.

பரவாதிமல்லரைக் கடைக் கண்ணால் கவனித்துக் கொண்டு, ''தலைமறைவாகத் திரியும் பல்லவ மன்னன் பரமேசுவர வர்மனாக அவன் இருப்பானோ என்று எண்ணுகிறேன்!'' என்றாள் உத்தமசீலி.

சிம்ம சொப்பனம் கண்ட களிறு போல் சிலிர்த்துப் பதறி எழுந்தார் வில்வேலி. அலைப்புறாத ஆழ்கடலென அமைதியாக வீற்றிருந்த பரவாதிமல்லரும், இந்தப் பேச்சைக் கேட்டுச் சற்றே உடல் குலுங்கி நிமிர்ந்தார்.

''இளவரசி, நாம் புறப்பட வேண்டும்! நேரத்தை வீணாக்காமல் இப்போதே புறப்பட வேண்டும்! உங்களை உறையூரில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டு, உடனடியாக அந்தச் சதிகாரர்களைக் கண்டு பிடித்து, அவர்களது திட்டத்தை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும்!'' என்று தம்மை மீறிய பதற்றத்துடன் சொன்னார் வில்வேலி.

இளவரசி உத்தமசீலி தயக்கத்துடன் எழுந்து சேதியக் கலைஞரை அன்போடு ஏறிட்டு நோக்கி, ''ஐயா, தாங்கள் செய்த பேருதவிக்கு நாங்கள் மிகவும் கடமைப் பட்டிருக்கிறோம். இப்போதைக்கு எங்களுக்கு விடை கொடுங்கள். விரைவில் நான் தங்களை வந்து சந்திப்பேன்'' என்று கரம் கூப்பினாள்.

''இளவரசியாரையும் தளபதியாரையும் இன்று சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுத்தித் தந்த இறைவனுக்கு நன்றி. சென்று வாருங்கள்!'' என்று குளிர்ந்த புன்னகையுடன் சொல்லி விடை தந்தார் பரவாதிமல்லர்.

அம்மா ..... பெரிது!



''கண்ணே! உன்னைவிட எனக்கு உலகம் பெரிதாகத் தெரியவில்லை!''

அறையை விட்டு வெளியே வந்த அம்மூவரும் அதிர்ச்சியுற்றவர்கள்போல் திகைத்து நின்றனர்.

காரணம், மரத்தடியில் கட்டிப் போடப் பட்டிருந்த வில்வேலியின் குதிரை மட்டுமே இருக்க, வாசலில் இறக்கி வைத்திருந்த சிவிகையைக் காணோம்!

★

பொழுது நன்றாகப் புலர்ந்து விட்டது. புள்ளினங்கள் இராட்சைக் குரலெழுப்பிக் காலை ஆராதனை செய்யத் தொடங்கின.

சாந்தி தேவதையின் சயனக் கிருகம் போல் அமைந்திருந்த அந்த எழிலார்ந்த இல்லத்தின் ஓர் அறையில், தனியே வீற்றிருந்தாள் இளவரசி உத்தமசீலி.

அவன் மனம் வெகுவாகக் குழம்பிக் கிடந்தது. அந்தக் குழப்பத்திலிருந்து மீள, சாளரத்துக்கு வெளியே தெரியும் வண்ணப் பசுங் காட்சிகளில் தன் பார்வையைச் செலுத்த முயன்றாள். என்ன தான் முயன்றும் திரும்பத் திரும்ப அவள் மனம் அந்த ஒரு விஷயத்திலேயே மூட்டம் போட்டு முடங்கிச் சுருண்டது.

'என்ன இது விந்தை! வீட்டுக்குள்ளிருந்து மூன்று பேர் பேசிக்கொண்டிருக்கும் போதே வாசலில் இறக்கி வைத்திருந்த சிவிகை எப்படி மாயமாய்

மறைந்திருக்கும்? சிவிகைதான் மறைந்தது என்றால் அதைச் சுமக்கும் ஆட்களையும் அல்லவா காணோம்? நேற்றிரவு நடந்த சம்பவங்களுக்கும் இந்தச் சிவிகை மறைவுக்கும் ஏதேனும் தொடர்பு இருக்குமோ? இல்லையானால் இவ்வளவு பெரிய நெஞ்சழுத்தமான சதிக் காரியத்தை, யார் செய்திருப்பார்கள்? சிவிகை காணாமற்போனதுகூடப் பெரிது இல்லை; அதனுள் வைத்திருந்த பட்டோலைச் சுருளுமல்லவா பறி போய் விட்டது! இந்த நாட்டில் இப்படியெல்லாம் நடக்கும் என்று தெரிந்திருந்தால் இன்னுங் கொஞ்சம் காலந் தாழ்ந்தே புறப்பட்டிருக்கலாமே! அவசரப்பட்டுக் கிளம்பி வந்தது எவ்வளவு பெரிய தவறாகி விட்டது!'—

இளவரசியின் மனம் பீதியால் நடுங்கித் துடித்தது.

சிவிகை காணாமற் போனதால், மேற்கொண்டு பயணத்தைத் தொடர அவளால் இயலவில்லை. பல்லவபுரத்திலிருந்தோ உறையூரிலிருந்தோ புதிதாக ஒரு சிவிகை வரும்வரை, பரவாதிமல்லரின் இல்லத்திலேயே தான் தங்கியிருப்பதாகச் சளுக்கியத் தளபதி வில்வேலியிடம் சொல்லியனுப்பிவிட்டாள் அவள். வில்வேலிக்கு இந்த யோசனை சிறிதும் பிடிக்கவில்லை. ஆனால், வேறு வழியின்றி இதற்கு ஒப்புதல் தந்து விட்டுப் போனார். இன்று மதியத்துக்கு மேல் — அல்லது, நாளைக் காலை — அவளை ஏற்றிச் செல்லப் புதிய சிவிகை வரலாம். அது வரையில் அவள் இங்கேதான் இருந்தாக வேண்டும்.

'ஆற்றுத் துறைக்கு நீராடச் சென்றிருக்கும் பரவாதிமல்லர் திரும்பி வந்து விட்டால், மனத்தின் இந்தக் குழப்பம் மறைந்து விடும். எதைப் பற்றியாவது அவருடன் பேசி நேரத்தை இனிதாகக் கழித்து விடலாம்.'


சேதியக் கலைஞரின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் உத்தமசீலி.

அந்த இல்லத்தின் வலப் பக்கம், அவள் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருக்கும் சாளரத்துக்கு நேர் எதிரே, ஆற்றங்கரைக்குச் செல்ல ஒரு சிறிய பாதை அமைக்கப் பெற்றிருந்தது. அப்பாதையின் இருமருங்கும் அழகிய மலர்ச்செடிகள் வளர்த்து விடப்பட்டிருந்தன. சலசலத்து ஓடும் ரதிவர்ணச் சிற்றாற்றின் கரைமேட்டை அந்தப் பாதை சென்று தொடுமிடத்தில், ஓங்கி உயர்ந்து வளர்ந்து நின்றது ஒரு சவுக்கை மரம். பச்சை வர்ணம் பூசப் பெற்ற பிரும்மாண்டமான வேல் ஒன்றைப் பூமியில் நட்டு வைத்திருப்பதுபோல் தோன்றிய அந்த மரத்தில், முற்றிக் காய்ந்த சவுக்கங் காய்கள் சரம்சரமாகத் தொங்கின. அம்மரத்தைத் தொலைவிலிருந்து பார்க்கும்போது, முற்றுந் துறந்த முனிவனொருவன் கழுத்து நிறைய உருத்திராக்க மணிகளையெல்லாம் அணிந்து கொண்டு ஒற்றைக் காலில் நின்று யோக நிஷ்டையில் ஆழ்ந்திருப்பது போலத் தோன்றியது.

இந்த அற்புதக் காட்சியைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்த இளவரசி உத்தமசீலி, இன்னோர் அதிசயத்தை அங்கு கண்டு விட்டவள்போல் தன் காயாம் பூக் கண்களின் இமையிதழ்களைப் படபடவெனத் தட்டிக்கொண்டே எழுந்து பரபரப்புடன் மீண்டும் நோக்கினாள்.

அங்கே, நீராடி நனைந்த உடையுடன், நெற்றியில் வெண்ணீறும் கழுத்தில் உருத்திராக்க மணி மாலையுமாகச் சுந்தர புருஷனாய் விளங்கிய ஓர் இளந்துறவி, கையில் ஒரு பூக்கூடையைப் பிடித்தவண்ணம் சேதியக் கலைஞரின் இல்லத்தை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தான்!

(தொடரும்)




உலக அதிசயங்கள்

அலெக்ஸாந்திரியாவின் கலங்கரை விளக்கம்


பண்டைய உலக அதிசயங்களுள் ஒன்ருகக் கருதப்பட்டது கி. மு. மூன்றும் நூற்றுண்டில் கட்டப்பட்ட ஒரு கலங்கரை விளக்கமாகும். இரண்டாம் தாலமி என்ற அரசனுல் கட்டப்பட்டது இது. எகிப்து நாட்டின் அலெக்ஸாந்திரியா துறைமுக வாயிலில் பாரோஸ் என்ற தீவில் கட்டப்பட்டிருந்தது இந்தக் கலங்கரை விளக்கம். வெள்ளைச் சலவைக் கல்லினுல் கட்டப்பட்ட இதன் உயரம் 460 அடிகள். சதுரமான பீடத்தின் மீது எட்டுப் பக்கங்களுடைய கோபுரமும் அதன் மீது வட்ட வடிவமான ஒரு கோபுரமும் இப்படியே மாறி மாறி உயர்ந்து, உச்சியிலே விளக்குக்குப் பதில் கட்டைகளைக் கொண்டு தீ மூட்டி ஒளி உண்டாக்கினுர்கள். இது கட்டி ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் ஏற்பட்ட பூகம்பத்தில் இந்தக் கலங்கரை விளக்கம் அழிந்து விட்டது.

பாபிலோனில் இருந்த ஊசலாடும் நந்தவனம்

கி. மு. 605-ல் வாழ்ந்த நெபுகாடரஸ்ஸார் என்ற மன்னன் தனக்கென ஓர் அரண்மனையைப் பாபிலோன் நகரில் நிர்மாணித்துக் கொண்டான். பல மாடிகளைக் கொண்ட அந்த அரண்மனையின் மாடிகளிலெல்லாம் அழகிய நந்தவனங்களை அமைத்து ஆனந்தித்தான். நான்கு ஏக்கரா விஸ்தீரணத்தில் கட்டப்பட்ட அற்புத அரண்மனை 75 அடி உயரமுள்ள வளைவுகளால் தாங்கிய உப்பரிகைகளையும் அதன் மீது பழத் தோட்டங்களையும் மலர்ச் செடிகளையும் உடையதாக விளங்கியது. மாடி மீது மாடி அங்கெல்லாம் தரையைப் போலவே தோட்டம் சூழ்ந்த கூடங்கள், உல்லாச மண்டபங்கள். விண்ணிலே கட்டிய வித்தார நந்தவனத்துக்குத் தண்ணீர் வேண்டுமல்லவா? அருகில் ஓடிய யூப்ரேட்ஸ் என்ற நதியின் நீரை மாளிகையின் உச்சிக்குக் கொண்டு சென்று தேக்கி வைத்திருந்தான் மன்னன். இந்தக் காலத்து 'ரிஸர் வாயர்' முறையைச் செய்து பார்த்து விட்டான்.



இந்த ஊசலாடும் நந்தவனமும் காலத்தின்பசிக்கு உணவாகி விட்டது.




காட்டுக்குள்ளே

ஜெம்ஸ்பாக்

காடுகளுக்கும் விலங்கினங்களுக்கும் பெயர் பெற்ற கண்டம் ஆப்பிரிக்காக் கண்டம். இங்குள்ள அடர்ந்த கானகங்களில் வாழும் மான் வகைகள் எத்தனையோ. நீங்கள் இங்கு காண்பது ஒரு வகை மான். ஓரிக்ஸ் என்ற கலைமான் இனத்தைச் சேர்ந்தது. இதன் பெயர் ஜெம்ஸ்பாக். தென் ஆப்பிரிக்காவின் வறண்ட பிராந்தியத்தில் தான் இந்த மான்கள் காணப்படுகின்றன. நிமிர்ந்து நின்ருல் இதன் உயரம் நாலடி. இதன் உடலின் பொது வர்ணம் பழுப்பு நிறமானது. முதுகின் மேலும் வயிற்றுப் பக்கத்திலும் கறை படிந்தாற் போன்று பட்டையான கோடு செல்வதைப் பார்த்தாயா? இதுதான் இந்த மானின் விசேஷத் தோற்றம். ஈட்டி போன்று அடியில் கணுக்களோடு கூடிய கொம்பின் நீளம் நான்கு அடியாகும். ஜெம்ஸ்பாக் வசிக்கும் இடமோ பொட்டல். பாலைவனம் என்றே சொல்லலாம். வெட்டுக்கிளிக்குக் கூட உணவு கிடைக்காத வறண்ட பூமி அது. அப்படிப்பட்ட பிரதேசத்தில் இந்த மான் எப்படி உயிர் வாழ்கின்றது என்பது ஆராய்ச்சியாளருக்கும் புரியாத புதிர். தண்ணீரையே காண முடியாத பாலை அது. ஆனுல் ஜெம்ஸ்பாக் எப்படியோ வாழுகின்றதே!


வேகமாக ஓடக்கூடிய பிராணியல்ல இது. ஆனுல் இது தன்னைக் காத்துக் கொள்ள உக்கிரமாகப் போராடும். தனது கொம்பினுல் ஒரு சிங்கத்தையே கொல்லும் வலிமை உடையது. ஆனுல் கொன்ற சிங்கத்தோடும் இதுவும் சேர்ந்தே இறந்து விடும். ஏன் தெரியுமா? சிங்கத்தின் உடலில் பதிந்த தனது கொம்பை இதனுல் விடுவித்துக் கொள்ள முடிவதில்லை. ஆகவே அத்துடன் அதன் அருகிலேயே இதுவும் ஆகாரமின்றி உயிர் துறக்கும் பரிதாபத்தை என்னென்பது? ஜெம்ஸ்பாக் வாழும் பகுதிகளில் சிங்கம் ஜெம்ஸ்பாக் இரண்டின் எலும்புக் கூடுகளை அருகருகே காணலாம்.

உன்னால் முடியுமா ?



(ஏ) இங்குள்ள வட்டத்துக்குள் ஒன்று முதல் பதினொன்று எண்களை அமைக்க வேண்டும். ஒரு நேர்கோட்டில் உள்ள எந்த மூன்று வளையங்களின் எண்களைக் கூட்டினாலும் கூட்டுத்தொகை மொத்தம் பதினெட்டு வர வேண்டும். யார் விரைவில் இதைச் செய்து முடிக்கிறார்களோ அவர்களே திறமைசாலி.

(பி) இங்குள்ள முக்கோணம் சதுரம் அமைப்புக்களில் ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்களை அமைக்க வேண்டும். முக்கோணத்தின் எந்தப் பக்கத்தைக் கூட்டினாலும் கூட்டுத்தொகை இருபது வர வேண்டும். சதுர உருவத்தில் எந்த வரிசையில் கூட்டினாலும் (குறுக்கு நெடுக்கும் உள்பட) கூட்டுத் தொகை 15 வர வேண்டும்.



விடைகள்:


(ஏ) நடு வட்டத்தில் 6-ம் பிறகு ஏதாவது ஒரு வளையத்தில் ஆரம்பித்துப் பிரதட்சிணமாக 1,7,8,9,10,11,5,4,3,2 இது ஒரு முறை. வேறு முறைகளும் உண்டு.

(பி) முக்கோணத்தில் உச்சியில் 5ஐ எழுதிப் பிரதட்சிணமாக 7,6,2,9,1,8,4,3. இது ஒரு முறை. (சி) இது ரொம்பப் பழைய கணக்கல்லவா? தெரியவில்லை? முதல் வரிசை 8,1,6, 2-ம் வரிசை 3,5,7, 3-ம் வரிசை 4,9,2.

உலக விளையாட்டுக்கள்

ஆப்பிரிக்கா தேசத்துக் குழந்தைகளின் விளையாட்டு ஒன்றை உங்களுக்கு முன்பு சொன்னேன் அல்லவா? இப்போது அலாஸ்கா தேசத்துக் குழந்தைகளின் விளையாட்டைப் பாருங்கள். இதை இரண்டு பேர் விளையாடலாம்.

இதற்கு வேண்டியது, டைமண்டு வடிவில் நாலங்குலம் அகலமும் ஆறங்குல உயரமும் உடைய ஒரு பிளேவுட். அதன் நடுவில் ஓர் அங்குலக் குறுக்களவில் ஒரு துவாரம் செய்ய வேண்டும். ஆர்க்டிக் பிரதேசவாசிகளான அலாஸ்காக் குழந்தைகள் பிளேவுட்டுக்குப் பதில் திமிங்கிலத்தின் எலும்பில் இப்படி உருவாக்கிக் கொள்வார்கள். பிறகு மூன்றங்குல நீளம் நான்கங்குல அகலம் இரண்டங்குல உயரமுள்ள ஒரு தேக்கங் கட்டைத் துண்டு வேண்டும். அலாஸ்காவில் வால்ரஸ் மிருகத்தின் தந்தத்தில் இத் துண்டை உருவாக்குவார்கள்.




இனி படத்தில் காண்பித்துள்ளபடி பிளேவுட்டின் இரு முனைகளிலும் கயிற்றைப் பிணைக்க வேண்டும். ஒரு கயிற்றுடன் சதுரக் கட்டையையும் மறு கயிற்றைத் தோட்டத்திலுள்ள மரக் கிளையிலும் கட்டிவிட வேண்டும். இருபது அங்குல நீளமுள்ள இரண்டு குச்சிகளைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். இந்த முனைகள் கூராக இல்லாமல் மழுமழுப்பாகவே இருக்க வேண்டும். டைமண்ட் பிளேவுட் துவாரத்தினுள் நுழையும்படியாகவும் இருக்க வேண்டும்.

நீங்கள் தயாரித்த ஊசலாடும் பிளேவுட்டும் கட்டைக்கு இரு பக்கமும் சம தூரத்தில் ஐந்தடி இடைவெளி விட்டு இரண்டு கோடு கிழிக்க வேண்டும். (சின்னக் குழந்தைகளானால் இதன் இடைவெளியைக் குறைத்துக் கொள்ளலாம்.) ஒருவரின் குச்சி மற்றவரின் மீது படாத தூரத்தில் இருக்க வேண்டும்.

இனிமேல்தான் விளையாட்டு ஆரம்பம். ஆட்டக்காரர்கள் இருவரும் தங்களிடமுள்ள குச்சியை பிளேவுட் துவாரத்தினுள் நுழைக்கப் பார்க்க வேண்டும். படிக்கும் போது சுலபமாகத் தோன்றுகிறதல்லவா? விளையாடிப் பாரேன், சுலபமா, கடினமா என்பது விளங்கும். இந்த அலாஸ்காக் குழந்தைகளின் விளையாட்டுக்குத் திமிங்கில வேட்டை என்று பெயர்.

செய்து பார்

உருண்டோடும் தகர டப்பா



உங்கள் நண்பர்களைப் பிரமிப்பூட்டும்படியான ஒரு வேடிக்கை இது. மூடியுடைய காலி டப்பா ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் அடியிலும் மூடியிலும் இரண்டு துவாரங்களைச் செய்து கொள்ளுங்கள். படத்தில் காட்டியுள்ளபடி ஒரு ரப்பர் நூலைத் துவாரங்களில்

நுழைத்துக் கட்டிக் கொள்ளுங்கள். டப்பாவின் உள் பக்கத்தில் ரப்பர் நூல் (குறுக்காக) சேருமிடத்தை ஒரு நூலால் பிணைத்து அத்துடன் கனமான ஓர் இரும்புத் துண்டைக் கட்டித் தொங்க விடுங்கள். இதைச் செய்வது கொஞ்சம் சிரமமாக இருக்கலாம். மூடியின் துவாரத்தின் வழியாகத் தானே ரப்பர் நூலை நுழைக்கச் சொன்னீர்கள். அப்படி இருக்க டப்பா மூடி இருக்கும்போது உள்ளே இரும்புத் துண்டை எப்படிக் கட்டுவது என்று கேட்கலாம். ரப்பர் சுருங்கி விரியக் கூடியதல்லவா? மூடியைத் திறந்தால் ரப்பர் இழுபட்டுத் திறந்து கொள்ளும். அதை அப்படியே யாரையாவது பிடித்துக் கொள்ளச் சொல்லி லாகவமாக உள்ளே இதைக் கட்டி முடித்துத் தொங்க விட்ட பின் மூடியை விட்டதும் ரப்பரின் சுருங்கும் தன்மையால் அது இறுக மூடிக் கொள்ளும். இனி டப்பாவைத் தரையில் வைத்து மெள்ள உருட்டி விடு. உருண்டு சென்ற டப்பா மறுபடியும் உன்னை நோக்கியே திரும்பி வரும் விந்தையைக் காண்பாய். உள்ளே தொங்கும் கனமான இரும்பினால் முறுக்கிக் கொண்ட ரப்பர் தானாகப் பிரிவதனால் ஏற்படும் இயக்கம் தான் இது. டப்பாவின் உள்ளே என்ன இருக்கிறது என்பதை அறியாத உன் நண்பர்கள் உன்னைப் பெரிய மந்திரவாதி என்று எண்ணி வியப்படைவர்.

காகிதமும் கத்திரிக்கோலும்


உங்கள் கத்திரிக்கோலுக்கு வேலை கொடுத்துப் பல நாளாகி விட்டது போலிருக்கிறதே? ஆரம்பிக்கலாமா? உறுதியான ஒரு காகிதத்தைச் சதுரமாக வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். இனி அதை முன்பு பெட்டிக்கு மடித்ததைப் போல் நான்கு மூலைகளையும் நடுமையத்தை நோக்கி மடியுங்கள் (படம் 1) பிறகு அதைத் திருப்பி மறுபடியும் அதன் மடித்த மூலைகளை நடு மையத்தை நோக்கி மடியுங்கள் (படம் 2). இரண்டாவது முறை மடித்துக் கிடைத்த சதுரத்தைத் திருப்பினால் முதல் சதுரத்தின் நான்கு மூலைகளும் நடுவில் சேர்ந்திருப்பதைக் காண்பீர்கள் (படம் 3). இந்த மூலைகளை ஒவ்வொன்றாக இழுத்து நடு மையக் கோட்டை விரல் நகத்தால், அழுத்தி மடியுங்கள். (படம் 4) இப்படியே நான்கு மூலைகளையும் மடிக்க வேண்டும் (படம் 5).

இனி AC, BD என்ற மூலைகள் ஒன்றினுள் ஒன்று நுழையும்படி படம் 6-ல் காட்டியுள்ள மற்ற இரு மூலைகளை அழுத்துவதன் மூலம் செய்ய வேண்டும். இனி அந்த இரு மூலைகளையும் விரல்களால் பிடித்து அழுத்தி விடுவதன் மூலம் இடையில் ஒன்றினுள் ஒன்று நுழைந்து கொண்டுள்ள மூலைகள் உள்ளே போவதும் வெளியே வருவதுமாக ஏதோ ஒரு ஜந்து வாயைத் திறப்பதும் மூடுவதும் போலிருக்கும். (படம் 7) இதற்குப் படம் 8-ல் காட்டியுள்ளபடி கண்கள் வரைந்து விட்டால் மிகவும் தத்ரூபமாக இருக்கும். செய்வது சுலபம். காகிதத்தை எடுத்து மடியுங்கள், பார்க்கலாம்.

காந்தத்தின் கதை

ரொம்ப ரொம்ப வருஷங்களுக்கு முன்னாலே சீன தேசத்திலே ஓர் அரசர் இருந்தார். ஒரு தடவை அவரைச் சிங்காதனத்திலிருந்து விரட்டி விட்டு ஆட்சியைத் தான் கைப்பற்ற நினைத்தான் இன்னொரு ராஜா. ஆகவே அவனுடன் போரிட வேண்டியதாயிற்று. தோற்று ஓடிய அவனை விரட்டி விட்டுத் தம் படைகளோடு திரும்பிக் கொண்டிருந்தார். நடுவில் ஒரு பெரும் பொட்டல். மூடு பனி வேறு. எந்தத் திசையாகப் போவது என்றே தெரியவில்லை. தவித்தார் அரசர். இந்த மாதிரி வேளைகளில் உதவுவதற்காகத்தானே மதிநுட்ப மந்திரிகள் இருக்கிறார்கள். உடனே ஓர் ஏற்பாடு செய்தார். அவரிடம் ஒரு மந்திரப் பொம்மை இருந்தது. அதை மன்னரின் தோளில் பொருத்தினார். கையை நீட்டி எதையோ சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தது போல் செய்யப்பட்ட பொம்மை அது. அதன் விருப்பப்படி அது சுழலும்படி ஒரு பீடத்தில் பொருத்தப்பட்டது. ஆனால் அந்தச் சிலையின் உள்ள அதிசயம் என்ன தெரியுமா? அது எப்போதும் வடக்கு நோக்கியே கையை நீட்டும். எப்படிச் சுழன்றாலும் முடிவில் அது வடக்குத் திசையையே காட்டும்.

இது ஒரு கதைதான். ஆனால் இதில் ஒரு பெரிய உண்மை ஒளிந்து கொண்டிருக்கிறது. என்ன தெரியுமா? அந்தச் சிலையில் மந்திரமுமல்ல, தந்திரமுமல்ல. அதனுள் ஒரு காந்தம் இருந்திருக்க வேண்டும். ஆகவேதான் அது வடக்கு நோக்கியே கையைக் காட்டியிருக்கிறது. இதிலிருந்து சீனர்களுக்குக் காந்தத்தின் உபயோகம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே தெரிந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது. பரந்த சீன சாம்ராஜ்யத்தில் திசையறிந்து பிரயாணம் செய்யக் காந்த ஊசிகளைப் பயன்படுத்தி யிருக்கிறார்கள் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன.





அத்தியாயம் 6

சீனத்துச் சிங்காரி

சிப்பாய்கள் செய்த ரகளையைச் செவியுற்று அனைவரையும் கைது பண்ணி அழைத்துப் போகத்தான் மோட்டார் சைக்கிள்களை அந்தச் சந்துக்குள் திருப்பினார்கள் மிலிட்டரி போலீஸார். வடிவேலுவுக்கு இது புது அனுபவமாதலால் மற்றவர்களைக் காட்டிலும் பின் தங்கி விட்டான். சிவராமனைப் போன்ற பழம் பெருச்சாளிகளோ, மோப்பம் பிடித்தே தூரத்தில் வருகிற அபாயத்தை அறிந்து கொண்டவர்களாக வளைகளுக்குள் பதுங்கினார்கள்.

வடிவேலுவையாவது எப்படியும் கைப்பற்றி விடலாம் என்ற நோக்கத்தோடுதான் மோட்டார் சைக்கிள்களை விட்டுக் குதித்து ஓடி வந்தார்கள் போலீஸார். ஆனால் அவன் அங்கே நின்றால் தானே? விநாடிப் பொழுதுகூட அவனைத் தாமதிக்க விடாமல் அந்தப் பெண் விழிப்படையச் செய்ததுடன் தனக்குப் பின்னால் விரைந்தோடி வருமாறு கையைப் பிடித்து இழுத்துச் சென்றாளே?

அவ்விருவரையும் துரத்திக் கொண்டு ஓடுவதா, அல்லது மோட்டார் சைக்கிள்களைக் கிளப்பிக் கொண்டு பின் தொடர்வதா என்று மற்ற நால்வரும் சில விநாடிகள் யோசித்தார்கள். கடைசியில் இருவர் ஓடி வர, வேறு இருவர் மோட்டார் சைக்கிளைக் கிளப்பினார்கள். வடிவேலுவின் அதிர்ஷ்டம் அது இயங்க மறுத்தது; தகராறு செய்தது!

ஒரு சந்துக்குள் திரும்பி ஓடிய அந்தப் பெண் எட்டடி எடுத்து வைத்ததும் மற்றுமொரு பொந்துக்குள் நுழைந்து விரைந்தாள். சட்டென்று ஓரிடத்தில் நின்று, "பூட்ஸைக் கழற்று! சீக்கிரம்!" என்று உத்தரவிட்டாள். ஏனென்று கேட்காமல் கீழ்ப்படிந்தான் வடிவேலு. கரங்களின் ஒரு வீச்சிலே முடிச்சுக்களை அவிழ்த்த அவன், ஏற்கனவே அவள் தன்னுடைய இரண்டு காலணிகளையும் கரங்களில் பற்றிக் கொண்டு ஓட்டமெடுக்க ஆரம்பித்து விட்டதைக் கண்டான். அவசரம் அவசரமாகக் கனமான பூட்ஸ்களில் சிறைப்பட்டிருந்த தன் பாதங்களை விடுவித்துக் கொண்டு வெறும் 'ஸாக்ஸ்'களை மட்டும் அணிந்தபடி அவளைப் பின் தொடர்ந்து துரிதமாகச் சென்றான். முன்னைக் காட்டிலும் வேகமாய்த் தன்னால் நகர முடிவதையும் அதே சமயத்தில் ஓசைப்படுத்தாமல் ஓடுவது சாத்தியமாவதையும் உணர்ந்தான். அந்த இக்கட்டான நிலைமையிலும் அவளது சமயோசித புத்தியை மனத்துக்குள்ளாகவேனும் பாராட்டாமல் அவனால் இருக்க முடியவில்லை. கால்களுக்கு விடுதலையளித்துச் சௌகரியம் செய்து கொடுக்கத் தயங்கிய ஓரிரு விநாடிகளில் ஆபத்து தன்னிடத்தில் மேலும் நெருங்கிவர இடமளித்திருந்தாலும் இறுதியில் போலீஸாரிடமிருந்து தன்னைத் தப்புவிக்க அவளுடைய அந்த யுக்திதான் உதவப் போகிறது என்பதில் வடிவேலுவுக்குச் சந்தேகமே கிடையாது.

அடுத்தடுத்து ஆள் நடமாட்டமே இல்லாத இரண்டொரு சந்துகளில் திரும்பி ஓடிய பிறகு பின்துரத்தி வரும் போலீஸாரின் பூட்ஸ் சத்தத்தைக் கேட்க முடியவில்லை. மோட்டார் சைக்கிள் எழுப்பக்கூடிய ஓசையும் காதில் விழவில்லை.

நெஞ்சு இறைக்க இறைக்க நின்ற அந்தப் பெண்ணுக்கு இறுக்கமான ஆடை இடைஞ்சல் செய்தது. முதுகுப் புறமாக வளைந்து சென்ற அவள் கரம் இரண்டு பித்தான்களை அவிழ்த்து உடையைச் சற்றுத் தளர்த்தி விட்டது.

'புத்திசாலிதான் அவள்!' என்று நினைத்து மகிழ்ந்தான் வடிவேலு. பூட்ஸ்களின் இரும்பு லாடங்கள் சாலையைத் தாக்கும் போது எழ வேண்டிய சத்தம் எழாமலிருந்ததன் மூலம் தப்பி ஓடுபவனைப் போலீஸாரிடம் காட்டிக் கொடுக்காமல் சதி செய்து விட்டது. அதோடு நேராகச் சென்று கொண்டிராமல் அவர்கள் பார்வையிலிருந்து விலகி அடுத்தடுத்து எட்டு சந்துகளுக்குள் புகுந்து பறந்ததும் அபாரமான தந்திரம்தான்! ஏமாந்தவர்களை எண்ணிச் சிரித்தான் வடிவேலு.

ஆனால் தன்னெதிரே நின்ற அந்தப் பெண்ணின் முகத்தில் சந்தோஷத்தைக் காணோம் என்பதையும் ஆத்திரத்தைத் தான் அந்த வதனம் பிரதிபலிக்கிறது என்பதையும் அழுது வடிந்த அந்தத் தெரு விளக்கின் ஒளியிலும் கவனித்தான் அவன்.

''திங்க் யூ ஹீரோ?'' — கொச்சையான ஆங்கிலம் பேசினாள் அவள்.

'கதைகளில் வரும் நாயகனைப் போல் பெண்ணொருத்திக்குத் தீங்கு நேரவிருந்த தருணத்தில் குறுக்கிட்டு அவளைக் காப்பாற்றியவனா நான்?' வடிவேலு கேட்டான்: ''ஏன்? அப்படி நான் நினைத்துக் கொண்டால் அதில் தவறென்னவாம்?''

''நீ ஒரு முட்டாள்!'' என்று திட்டினாள் அவள் பச்சையாக.

முதலில் திடுக்கிட்ட வடிவேலு, பெண்ணென்பதால் கஷ்டப்பட்டுக் கோபத்தை அடக்கிக் கொண்டு வெறுப்புடன் அவளைப் பார்த்தான். ''ஆபத்சகாயனுக்கு நல்ல பட்டமாகத்தான் சூட்டுகிறாய். நன்றி என்பது உங்கள் நாட்டில் லவலேசமும் கிடையாதோ?''

''யார் யாருக்கு நன்றி செலுத்துவது?'' என்று படபடத்தாள் அவள். ''போலீஸாரிடம் நீ மாட்டிக் கொள்ளாமல் அழைத்து வந்ததற்காக நீதான் எனக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்!''

''ரொம்ப சரி! மனப்பூர்வமாக நான் அதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் குடி வெறியிலிருந்த அந்த ஆங்கிலேயத் தடியனிடமிருந்து உன்னை நான் பாதுகாத்ததும் உண்மைதானே?''

''அதெல்லாமொன்றுமில்லை. அனாவசியமாக நீ உனக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தில் தலையிட்டாய். என்னைப் பாதுகாத்துக் கொள்ள எனக்குத் தெரியும், உன் தயவு எதற்கு?''

தாங்குதலுக்காக அவன் தோள்களுள் ஒன்றன் மீது இடது உள்ளங்கையை வைத்து அழுத்தி அவன் மீது சாய்ந்ததும் சாயாததுமாக நின்று கொண்டு, ஒன்றன் பின் ஒன்றாகத் தன் இரு கால்களையும் பின்னோக்கி உயர்த்தி வலக் கரத்தால் காலணிகளை அவள் மாட்டிக் கொண்டாள்.

''இப்போது என்ன வேண்டுமானாலும் பேசுவாய் நீ'' என்றான் வடிவேலு. ''ஆனால் அந்த நிமிஷத்தில் நான்அங்கே இல்லாமலிருந்திருந்தால் உன் கதி என்னவாகியிருக்கும்; யோசித்துப் பார்!''

''பூ!'' என்று துச்சமாகக் கூறி அலட்சியமாய்ச் 'சூள்' கொட்டினாள் அவள். அவனோடு ஒன்றியவாறு இருந்து தன் உயரத்தை மிகைப்படுத்திக் காட்டிய ஸாண்டல்களைப் பாதங்களில் பொருத்திக் கொண்ட பிறகும் அவள் அவனை விட்டுச் சற்றேனும் விலக யத்தனிக்கவில்லை. ''அவனோடு இசைந்து போகிற மாதிரியாக இழைந்து, அவன் கரத்தைப் பற்றிக் கன்னத்தில் உரசிக் கொள்வது போல எடுத்துச் சென்று....'' என்றவள், பேச்சளவோடு நில்லாமல் செயலிலும் இறங்கினாள்.

வடிவேலுவின் புறங்கை அவள் கன்னங்களின் மழமழப்பை ஸ்பரிசித்துக் கொண்டிருந்தது இப்போது. ''என் அதரங்களுடன் அவன் விரல்களை உறவாட விடுவது போல் நடித்து, இப்படிக் கடித்து விடுவேன்!'' சினத்துச் சிங்காரி வாக்கியத்தைக் கூறி முடித்ததுடன் நடிப்பையும் பூர்த்தி செய்தாள்.

வலியைப் பொறுக்க முடியாமல் வடிவேலு வீறிட்டு அலறினான்.

''உன்னைப் போல்தான் அவனும் துள்ளிக் குதித்திருப்பான், வேதனை தாங்காமல். அப்போது நான் என் கரத்தை விடுவித்துக் கொண்டு ஓட்டம் பிடித்திருப்பேன்'' என்று கூறிவிட்டு அவள் திரும்பிப் பாராமல் நடந்தாள்.

கி.ராஜேந்திரன்



''இது என்னைப் பொறுத்த வரையில் அன்றாட விவகாரம். ஒருவரா, இருவரா? எத்தனை சிப்பாய்களைச் சமாளித்திருக்கிறேன் நான் இன்று வரையில்!'' என்று போகிற போக்கில் அவள் சொல்லிக் கொண்டு சென்றதும் வடிவேலுவின் செவிகளுக்கு எட்டியது. அவன் அவளைப் பின்தொடரவில்லை. அவளும் அதிக தூரம் போய்விடவில்லை. பக்கத்திலிருந்த விளக்குக் கம்பத்தைக் கடந்ததும் ஒரு வீட்டின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே மறைந்தாள். வடிவேலு அதே வாசல் படியில் உட்கார்ந்து நிதானமாக பூட்ஸ்களை அணிந்து இறுகக் கட்டிக் கொண்டு கிளம்பினான்.

திரும்பிச் செல்ல வழி தெரியவில்லை அவனுக்கு. வாய் வார்த்தையாக இல்லாமல், வாஸ்தவத்திலேயே திண்டாடித் தெருவில் நின்று கொண்டிருந்தான் அவன். 'வரும் போது எத்தனை சந்துகளுக்குள் நுழைந்தோம்? இப்போது நான் திரும்ப வேண்டியது எந்தப் பக்கமாக?'

சுற்றிச் சுற்றிக் கிளம்பிய இடத்துக்கே வந்து சேர்ந்தான் அவன். குல்லாயைக் கழற்றி விட்டுத் தலையைச் சொறிந்து கொண்டவன், விலையுயர்ந்த சீனப் பீங்கான் கோப்பைகளைக் கீழே போட்டு உடைப்பது போன்ற நகைப்பொலி கேட்டு அண்ணாந்தான். வீதி விளக்கடியில் பரிதாபமாகத் தோற்ற மளிக்கும் வடிவேலுவை மாடியிலிருந்து ஜன்னல் வழியாகப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள் அவள்.

தன்னுடைய சங்கடத்தை வடிவேலு அவளுக்கு உணர்த்தியபோது அவள் முன்னிலும் பெரிதாக நகைத்தாள். ''அதை நீ சொல்லித்தான் அறிய வேண்டுமா? நெற்றியில் எழுதி ஒட்டியிருக்கிறதே!'' என்றாள் அந்தக் குறும்புக்காரி.

நெடுஞ்சாலையை அடைவதற்கான மார்க்கத்தை விவரமாய்க் கேட்டுக் கொண்டு, மிலிட்டரி பாணியில் ஒரு சல்யூட் அடித்தான் வடிவேலு. உல்லாசமாக அவள் பதிலுக்குச் சலாம் போட்டதை ஏற்றுக் கொண்டு புறப்பட்டான்.

மெயின் ரோடுக்கு வந்த பிறகு நகரின் எல்லைப் புறத்திலிருந்த முகாமைச் சென்றடைவது கடினமான காரியமாக இல்லை. அன்றிரவு தன் கட்டிலில் அசதி மிகுதியால் விழுந்து கால்களையும் கைகளையும் விறைப்பாக நீட்டிவிட்டுக் கொண்டவன், அந்தச் சீனக்காரி நடந்து கொண்ட விதத்தைப் பற்றிச் சிந்தித்தான். 'அவள் கூறியதிலும் தவறில்லைதான்' என்ற முடிவுக்கு வந்தது அவன் மூளை.


'அபாயம் அணுகினால் தனக்குத்தானே அரணாக அமைவதுடன் எதிர்த் தாக்குதலையும் நடத்தத் தயங்காத திறமைசாலிதான் அவள். அர்த்தமில்லாத ரகளையை ஆரம்பித்து வைத்து என் தலையில் நானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ளவிருந்தேன். மிலிட்டெரி போலிஸாரிடம் அகப்பட்டுக் கொண்டிருந்தால் என் கதி என்ன? அதோகதிதான்! வெள்ளையர்களே, 'வேண்டாம் இந்தத் தொல்லை' என்று தலை தெறிக்க ஓடிய போது இந்தியனாகிய எனக்குக் குலை நடுக்கம் உண்டாக வேண்டாமா? 'முதலில் கை ஓங்கியவன் இந்தக் கறுப்பன் தான்' என்ற உண்மையை உரைத்து என்னைச் சுட்டிக் காட்டி விடக் கூட அங்கே ஓர் ஆஸ்திரேலியன் இல்லையே!'

போலீஸாருக்குத் தங்களிடம் கோபம் ஏற்படாமலிருக்க வடிவேலு மீது பழி சுமத்தும் யோசனையைப் பரீட்சித்துப் பார்க்கக் கூட அவர்கள் தயாராக இல்லை! ஓர் ஆள் பின் தங்கவில்லை. அப்படியானால் எம். பி.க்களிடம் அவர்கள் எவ்வளவு பயப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்? நிலைமை அவ்வாறு இருக்க இந்தியன், அதிலும் வெள்ளையனைத் தாக்கத் துணிந்த ஓர் இந்தியன் வகையாகச் சிக்கிக் கொண்டால் அவனைச் சாறு பிழியாமல் விட்டு விடுவார்களா மிலிட்டெரி போலீஸார்?

'ஆனால் இனிமேல் . கவலையில்லை. இங்கே ஜன சமுத்திரமாய்த் திரண்டிருக்கும் எண்ணற்ற சிப்பாய்களுக்கிடையில் ஒரு சிறு துளியாகிய என்னை அவர்கள் கண்டு பிடிப்பது அசாத்தியம்.'

தான் அடைந்திருக்க வேண்டிய சித்திரவதையையும் இப்போது சுகமாகக் கட்டிலில் படுத்து நித்திரையை வரவழைத்துக் கொண்டிருப்பதையும் ஒப்பிட்டு எண்ணியபோது அவன் மேனி சிலிர்த்தது. அந்தச் சீனப் பெண்ணை மனமார வாழ்த்தினான் வடிவேலு. 'இத்தனை பெரிய உபகாரம் அவள் எனக்குச் செய்திருக்கும் போது அவள் பெயரைக் கூட விசாரிக்காமல் வந்து விட்டேனே? நன்றி கெட்டவன் என்று வைதேனே? அடுத்த விடுமுறைநாளில் மறுபடியும் அங்கே போனால் என்ன? அவளைச் சந்தித்துத் தன் மீது அவளுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய தப்பபிப்பிராயத்தை மாற்ற வேண்டாமா?'

ஏதேதோ நொண்டிச் சமாதானங்களைத் தான் கற்பனை செய்து கொண்டிருப்பதாய்த் தோன்றிய போது புன்னகை அரும்பியது அவன் முகத்தில். இமைகள் கனத்து மூடிக் கொள்ளு முன்னர் 'நி டிராக'னுக்கு மீண்டும் விஜயம் செய்வது என்று உறுதி பூண்டான்.




மெட்ரிக் நீட்டலளவுகளில் வாங்குங்கள்

1962, அக்டோபர் முதல் தேதியிலிருந்து மீட்டர் என்ற மெட்ரிக் நீட்டலளவு கட்டாய அமுலில் வருகிறது

அது முதல் கெஜம், அடி, அங்குலம் என்ற அளவுகளை உபயோகப்படுத்தக் கூடாது.

துணியின் அளவுகள் ஏற்கனவே மீட்டர் கணக்கில் குறிக்கப்படுகின்றன. விலையும் மீட்டர் கணக்கிலேயே தரப்படுகிறது.

ஒரு மீட்டர் ஒரு கெஜத்தைவிட 3⅜ அங்குலம் அதிக நீளம். ஒரு கெஜம் துணியின் விலை 1 ரூபாய் என்றால் 1 மீட்டர் அளவு அதே துணி 1 ரூபாயும் 9 ந. பைசாவும் ஆகும்.



மெட்ரிக் முறையே சுலபமானது ஒரே சீரானது

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது

DA 62/277



அத்தியாயம் 7

மீண்டும் ஆபத்து!

எண்ணத்தைச் செயலாக்கத் துணிந்த வடிவேலுவுக்கு முதலில் வரவேற்பு அளித்தது மதுவின் நாற்றம். நாட்டுச் சாராயத்துக்கு அங்கே இடமில்லையாதலால் தாங்க முடியாத அளவுக்கு மூக்கைத் துளைக்கவில்லை என்றாலும் முகத்தைச் சுளுக்கிக் கொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்த வடிவேலுவுக்கு அந்த வாடை பழக்கமாகச் சற்று நேரம் பிடித்தது. மேஜைகளைத் துப்புரவுசெய்ய உபயோகமாகும் ஒரு சிறிய துண்டைத் தோளில் போட்டுக் கொண்டும், கை தவறி ஏதேனும் சிந்தினாலும் ஆடையில் கறை படாதிருக்க இடையில் ஒரு வெள்ளைத் துணியைச் சுற்றிக் கொண்டும் நெட்டையான ஒரு கிழச் சீனன் வடிவேலு தேர்ந்தெடுத்து அமர்ந்திருந்த மேஜையினருகே வந்தான்.

அவனிடம் அன்னாசிப் பழ ரசம் எடுத்துக் கொண்டு வருமாறு சொன்னான் வடிவேலு.

கிழடு தட்டி ஒட்டி உலர்ந்த முகத்தில் ஏற்கெனவே விழுந்திருந்த சுருக்கங்கள் போதாதென்று சீனன் புருவங்களை உயர்த்திய போது அவன் நெற்றியில் மேலும் பல மடிப்புக்கள் விழுந்தன. 'மந்தம் தட்டிய தன் காதில்தான் சரியாக விழவில்லையா, அல்லது இந்த இந்தியன் ஞாபகப் பிசகாக ஏதாவது உளறுகிறானா' என்று யோசிப்பவனாகச் சில விநாடிகள் விழித்து விட்டு வினயமாகக் குனிந்தான் அவன். ''ஜின் — டானிக்? ஸ்காட்ச் — ஸோடா? ஒரு பாட்டில் பீர்?'' என்று மதுபான வகைகளை அடுக்கிக்கொண்டே போனான்.

''பைன் — ஆப்பிள் — ஜூஸ்!'' எரிச்சலுடன் மேஜையைத் தட்டிக் கூறிய வடிவேலு, சீனன் வாய் திறவாமல் திரும்பிப் போனதும், விழிகள் நயனங்களுக்குள்ளே சுழன்று வர ஆவலோடு அந்தச் சிறுக்காரியைத் தேடினான்; ஏமாந்தான்.

'இன்றைக்கும் அவள் இங்கே வருவாள் என்பது என்ன நிச்சயம்? பக்கத்தில்தானே எங்கேயோ இருந்தது அவள் வீடு? அங்கே போவோமா அல்லது சற்று நேரம் காத்திருந்து பார்ப்போமா?' எப்படியும் பழரசம் அருந்தி விட்டுப் புறப்படுவது என்று தீர்மானித்தவனாக வடிவேலு தன்னைச் சுற்றிலும் கண்ணோட்டம் செலுத்தினான். சிறிய அறைதான் அது. ஒரு பக்கத்தில் நீளமான மேஜை; அதன் பின்னால் வரிசை வரிசையாக மதுப் புட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஷெல்புகள்; முன்புறம், நாய்க் குடை போன்று தரையோடு பொருத்தப்பட்டு ஒற்றைக் காலில் நிற்கும் வட்ட ஸ்டூல்கள் வரிசையாக இருந்தன. கீழ்ப் பாதியில் சிவப்பு வர்ணம் பூசப்பெற்றும் மேலே வெள்ளையாகவும் விளங்கிய சுவர்களில் படங்கள் மாட்டப்பட்டிருந்தன. அவற்றில் சில சீன நாட்டின் பல்வேறு காட்சிகள். சீன நெடுஞ்சுவரின் கம்பீரத்தைக் காண்பிக்க முயன்று முழு வெற்றிபெறாத ஒரு சித்திரம்; மலைத் தொடர்களினூடே பள்ளத்தாக்குகளில் அமைதியாகப் பாய்ந்து செல்லும் யாங்ட்ஸி கியாங் நதி நீரின் எழிலை எடுத்துக் காட்டும் ஓர் ஓவியம்-போன்றவை. ஏனைய படங்கள் அமெரிக்க அழகிகளின் அலங்கோலத் தோற்றங்கள். தரையில் ஓரங்குலம் பாக்கியில்லாமல் சிவப்பு நிறக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. அதன் மீது சிறிது சிறிதான ஏழெட்டு மேஜைகளும் அவற்றைச் சுற்றிலும் நாற்காலிகளும் நெருக்கமாகப் போடப்பட்டிருந்தன. அநேகமாக எல்லா மேஜைகளையுமே சிப்பாய்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார்கள்.

'நல்ல வரும்படிதான் இதை நடத்துபவனுக்கு... சனியன் பிடித்த அந்தச்

சினன் எங்கு போய் விட்டான் பழ ரசத்தைக் கொண்டு வராமல்!" என்று முணுமுணுக்கத் தொடங் கிய வடிவேலுவின் அலுப்பும் சலிப்பும் அதிக நேரம் நீடிக்க வில்லை. கூடத்தின் பின் கோடியி லிருந்த கதவு ஒன்றைத் திறந்து கொண்டு அவள் வந்தாள்.

இன்று அவள் அணிந்திருந்த ஆடை முழங்காலளவோடு முடிய வில்லை; கணுக்காலளவு நீண்டிருந் தது. அதற்கு ஈடு செய்கிற மாதிரியாக மேல் பகுதியின் துணி வெகுவாகக் குறைந்து போயிருந்தது. மூன்பொரு நாள் அவள் உடுத்திருந்த 'கவுனை'ப் போல் தோள்களை மறைத்துத்



நீங்கள் பொலிவுடனிருக்க சார்மிஸ் உபயோகியுங்கள்!



புதுமை பெறுக...
இதம் பெறுக...
நளினமாய் இருங்கள்
நாள் முழுதும்!

குளுமையையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சார்மிஸ் டால்கம் பவுடர் நீங்கள் நாள் முழுதும் நளினமாயிருக்க உதவுகிறது. உன்னத மனோரம்மிய மணம்கொண்ட சார்மிஸ் உங்களுக்கு சுகத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்து, உங்கள் அழகை நன்கு சோபிக்கச் செய்கிறது!

சார்மிஸ்

உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பவுடர்

தொங்காமல் நெஞ்சின் நடு மையத்திலிருந்து ஆரம்பமான இதனை இரண்டு நாடாக்கள் நிலைகுலையாமல் இருக்கச் செய்தன.

வடிவேலுவின் கண்கள் அகல விரிந்தன.

அவன் ஒயிலாக நடந்தான். ஓரிடத்தில் நின்று மேஜையின் மீது கரங்களை ஊன்றி மென்னகையை உதிர்த்துக் குழுமியிருந்தவர்களுக்கு முகமன் கூறினான் நகர்ந்தான். ஒரு பிரிட்டிஷ் லெப்டினண்ட் கர்னலின் கேசத்தை அலட்சியமாக அலைத்துக் கலைத்து வெட்கத்தினால் அவனை முகம் சிவக்க வைத்தான். இன்னொரு கூட்டத்தினரிடையில் சென்று ஒண்டலாக இடுப்பை ஒடித்து அவர்களுள் ஒருவனை இடித்தவாறே உட்கார்ந்தான். வேறு ஒரு பக்கத்தில் ஒருவனை முதுகில் தட்டிக் கொடுத்தான். அருகில் இருந்தவன் கையிலிருந்த கண்ணாடியிலான மதுக் கோப்பையை வாங்கி ருசி பார்த்தான். சாயம் பூசப் பெற்றிருந்த தன் அதரங்களின் சிவப்பு முத்திரையை அதில் பதித்துத் திருப்பிக் கொடுத்ததன் மூலம் அந்த அதிர்ஷ்டக்காரன் மீது மற்றவர்கள் பொறாமையுறச் செய்தான்.

அவன் நடந்து கொள்ளும் விதம் எதுவும் பிடிக்கவில்லை என்பதோடு புரியவும் இல்லை வடிவேலுவுக்கு. ஒரு மூலையில் ஒண்டிக் கொண்டிருந்த அவனை அவன் கவனித்ததாயும் தெரியவில்லை. 'கூப்பிடுவோமா?' என்று யோசித்தான் வடிவேலு. 'எப்படிக் கூப்பிடுவது? என்ன பெயரிட்டு அழைப்பது? கை தட்டுவதும், கரம் அசைத்துச் சமிக்ஞை செய்வதும் நாகரிகமாயிருக்குமா? மரியாதைக் குறைவாய் நடந்து கொண்டதாகத் தவறான முடிவுக்கு வந்து விட்டால்? அவனாகவே என்னைக் கவனிக்கிற போது கவனிக்கட்டும். தானாக வருகிற போது வரட்டும்!'

அவனும் அவன் இருந்த பக்கம் தலை திருப்பவில்லை; பழ ரசம் எடுத்து வரச்சென்ற மடையனையும் காணவில்லை. வேறு ஒரு சீனக் குண்டன்தான் வடிவேலுவை நெருங்கினான். மேலுதட்டில் புறப்பட்டுக் கீழ்த்தாடை எலும்பு வரையில் இறங்கிய அடர்த்தியான மீசை முகவாயின் இருபுறங்களிலும் தொய்ந்தது அவனுக்கு. படுக்க வைக்கப்பட்ட சாவித்துவாரம் போல் இடுங்கிய கண்கள். வட்டமான மூக்குக் கண்ணாடி. சப்பையான மூக்கிலே பொருந்தியிருக்க முடியாது. எந்த விநாடியும் கீழே விழுந்து விடுவதாய்ப் பயமுறுத்தியது. ஐரோப்பியப் பாணியில் 'கோட்டும் பாண்ட்டும்' கழுத்தில் பட்டாம் பூச்சியின் இறகுகளைப் போன்ற வடிவம் கொண்ட சிறிய புள்ளி போட்ட 'டை'யும் அணிந்திருந்தான். அந்த 'ஸூட்'டை அவன் வாங்கத் தாராளமாகச் செலவழித்திருக்க வேண்டும் என்ற உண்மையும் அவனுடைய அதிகாரத் தோரணையும் அவன்தான் அந்த இடத்தின் முதலாளி என்பதைக் கூறாமல் விளக்கின. ''முன்பின் அறிமுகமில்லாத இந்தியர்களை, முக்கியமாகப் 'பைன் ஆப்பிள் ஜூஸ்' குடிக்க வென்றே வருகிறவர்களை நாங்கள் இங்கே அனுமதிப்பதில்லை'' என்றான் அவன் கண்டிப்பான குரலில்.

''நல்ல வேடிக்கை இது!'' என்றான் வடிவேலு. ''வெள்ளையன் மஞ்சள் நிறத்தவனை மட்டமாக மதிக்கிறான்; மஞ்சள் மேனியன் பழுப்பு நிறத்தவனைப் பரிகாசம் செய்கிறான்; பழுப்பு நிறத்தவன் கறுப்புத் தோல் படைத்தவனைக் கேவலமாகக் கருத வேண்டும் என்பது தான் உங்கள் சித்தாந்தமா?''

''எனக்கு உன்னோடு வம்பளந்து கொண்டிருக்கப் பொழுதில்லை.''

''எனக்கு நிறைய அவகாசம் இருக்கிறது....''

'நீ எழுந்து போக மாட்டாய்?''

''பைன் ஆப்பிள் ஜூஸ் கொண்டு வரமாட்டாய்?''

உணர்ச்சி மிகுதியில் சீனனின் தடிப்பான கன்னங்கள் பதறித் துடிக்கையில் அவன் மீசையும் எழும்பிக் குதிப்பதைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது வடிவேலுவுக்கு

''சிரிக்கிறாயா ?'' என்று சீறினான் சீனன்.

அடுத்து அங்கே இரண்டாவது முறையாக நிகழ்ந்திருக்க வேண்டிய அடிதடிச் சண்டை தவிர்க்கப்பட்டது அந்தச் சிங்காரியின் வருகையால். ''என்ன ரகளை இது?'' என்று கேட்டு, விடுதி அதிபரின் தோள்களைப் பிடித்து ஒதுக்கித் தள்ளிவிட்டு முன்னுக்கு வந்தாள் அவள்.

''நீயா?''

''ஆமாம், நான்தான்'' என்றான் வடிவேலு.

பக்கத்தில் ஆத்திரம் தீராமல் நின்ற தடியனிடம் சீன மொழியில் ஏதோ கூறி அனுப்பி வைத்தாள் அவள். வடிவேலுவை வெறித்து நோக்கி விட்டு அவன் அப்பால் போனதும், ''உனக்கு என்ன வேண்டும்? ஒரு 'ஸ்டெங்கா' கொண்டு வரச் சொல்லவா?'' என்று கேட்டாள் அவள், வடிவேலுவின் எதிரே அமர்ந்து.

''அந்த வார்த்தையை அடிக்கடி சொல்வான் சிவராமன். காதால் கேட்டதோடு சரி, கண்ணால் பார்த்தது கூட இல்லை.''

மோகனப் புன்னகை ஒன்றை உதிர்த்தாள் அவள். '''ஸ்டெங்கா'



''டாக்டர் சார்! என் பல்வலி திரும்பி வரும்படியாகச் செய்ய முடியுமா?''

''இதென்ன கூத்து! ஏனய்யா?''

''பல்வலி இருக்கும்வரை அதையே நினைத்துக் கொண்டிருந்ததில் பொழுது போவதே தெரியாதிருந்தது. இப்பொழுது பொழுது போகமாட்டேங்கிறது!''

என்றல் மலாய் மொழியில் பாதி என்று அர்த்தம். இங்கே தரப்படுகிற ஸ்டென்காவில் பாதி விஸ்கி, பாதி ஸோடா.''

''நான் மது அருந்தியதில்லை, இது வரையில்.''

''இது வரையில்தானே?'' என்று கூறிவிட்டு அவன் பதிலுக்குக் காத்திராமல், சித்தமாய் நின்ற 'வெய்ட்ட'ரிடம் பேசினள் அவள். பின்னர் வடிவேலுவை நோக்கி, ''சாப்பிட்டு வை. இல்லையானல் நான் எதற்கும் லாயக்கற்றவள் என்ற முடிவுக்கு வந்து விடுவான், ஷை-ஹவாங்-டை'' என்றாள்.

காந்தம் இரும்பைக் கவர்ந்திழுப்பது போல் சோல்ஜர்களின் பையிலுள்ள பணத்தை ஈர்க்க அவள் ஒரு கருவியாகப் பயன்படுகிறள் அந்தச் சீனக் குண்டனுக்கு என்பதை வடிவேலு அப்போது உணர்ந்தான். அறையை வலம் வருகையில் ஒவ்வொரு மேஜை அருகிலும் சற்றுத் தாமதித்துத் தண்ணீராக மது தாராளமாகப் பாய வழி வகுக்கவென்றே அவளை வேலைக்கு அமர்த்திக் கொண்டிருக்கிறன் ஷை-ஹவாங்-டை? இதை எளிதாக ஊகித்ததும் அவன் இதயம் சற்று வேதனைப்படத்தான் செய்தது. வருத்தத்தை வெளிக் காட்டாது கேட்டான்: ''நீ என்ன சொன்னய் அவளிடம்?''

''எவளிடம்?''

'நாசமாய்ப் போச்சு' என்று தனக்குள் கூறிக் கொண்ட வடிவேலு, ''அந்தப் பெயரெல்லாம் என் வாயில் நுழையாது'' என்றான்.

அடக்கமின்றி, தனக்கு வழக்கமாகி யிருந்தபடி வாய் விட்டு அவள் சிரித்த போது அளவுக்கு அதிகமாகவே பற்கள் பார்வைக்குப் புலனாயின. ஆயினும் அவை அரும்பு தொடுத்தாற் போல் அழகாய் அமைந்திருந்தமையால் அவளுடைய சிரிப்பு சற்று விகல்பமாகத் தோன்றினலும் விகாரமாக இல்லை. நகைப்பொலி அடங்கியதும், ''ஷை-ஹவாங்-டையைக் குறிப்பிடுகிறயா?'' என்று கேட்டாள்.

''ஆமாம். வாலைச் சுருட்டிக்கொண்டு போய் விட்டானே என்பதால் யோசித்தேன்'' என்றான் வடிவேலு.

''குடிவெறியில் என்னைக் கொன்று போடவிருந்த ஆங்கிலேயனிடமிருந்து நீதான் அன்று என்னைக் காப்பாற்றினய் என்றேன். அதனல் கொஞ்சம் தணிந்து போனன் அவன்.''

''நல்ல வேளை! இன்றைக்காவது அதை ஒப்புக் கொண்டாயே!'' என்று வடிவேலு விளையாட்டாகக் கூறியது வினையாக முடிந்தது.

''நீ என்னை என்னவென்று நினைத்தாய்?'' என்று எரிந்து விழுந்தாள் அவள். ''அரை மயக்க நிலையில் மனம் தடுமாறித் தான்தோன்றித்தனமாக நடந்து கொள்ளும் வீரர்களிடமிருந்து என்னை நானே பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருக்கிற தொல்லை போதாதா எனக்கு? உன்னைப் போன்ற அப்பாவிச் சிப்பாய்களைச் சிக்கலிலிருந்து விடுவிக்கிற பொறுப்பு வேறு என் தலையில் விழுந்து கழுத்தறுக்க வேண்டுமா? மோட்டார் சைக்கிள்கள் போடுகிற சத்தத்தையும் வேகமாகச் சந்து திரும்புகிறபோது சாலையில் டயர் அரைபட்டுத் தேய்கிற ஒலியையும் விசில் ஊதுகிற ஓசையையும் கேட்டே ராணுவப் போலீசார் வருகிறர்கள் என்று கண்டு பிடிக்கத் தெரியாத அசடர்கள் எத்தனைபேர் இருக்கிறர்கள் இந்த நகரத்தில்? பட்டாளத்தில் புதிதாகச் சேர்ந்து சிங்கப்பூர் வருகிற அவர்களைத் தப்புவிப்பது தான் எனக்கு வேலையா? ரெட் கிராஸ் ஆம்புலன்ஸ் வண்டியா ஓட்டுகிறேன் நான், ஆபத்தில் அகப்பட்டுத் துன்புறுகிறவர்களுக்கெல்லாம் அவசர உதவி அளிக்க?''



தலைவலி உங்களைத் தொல்லைப் படுத்தும்போது...
"இந்தத் தலைவலி சகிக்க முடியலையே — என்னால் ஒரு வேலையும் செய்ய முடியல்லே!"
"இந்த ஸாரிடான் சாப்பிட்டால் உடனே குணமளிக்கும்!"
பிறகு...
"தலைவலி பறந்தே போச்சு! அட ஸாரிடான் அதிசயமானது"
ஸாரிடான் வலிகளிலிருந்தும், நோவுகளிலிருந்தும், துரிதமாக, நிச்சயமாக, கெடுதல் எதுவுமின்றி நிவாரணம் அளிக்கிறது. தலைவலி, உடல் வலி, பல்வலி, ஜுரம் வரும்போலிருப்பது, சாதாரண உடல் கோளாறுகள், இவற்றிலிருந்து நிவாரணம் பெற ஸாரிடான் சாப்பிடுங்கள்.
பெரியவர்களுக்கு: 1 வில்லை.
குழந்தைகளுக்கு: ¼ லிருந்து ½ வில்லை வரை.
Saridon
ஸாரிடான்
'ரோஷ்'
ஒரே வில்லை போதும்
ஒரு வில்லை 13 ந. பைசா
துரிதமாக, நிச்சயமாக, அபாயமின்றி, வலியைப் போக்குகிறது. ஆசுவாசப்படுத்துகிறது, புத்துணர்ச்சி யூட்டுகிறது
'ரோஷ்' தயாரிப்பு ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்
JWT/VT-3576

வடிவேலு அவள் கோபத்தை நன்றாக ரசித்தான். கன்னங்கள் இரண்டும் நெல்லிக் கனிகள் அளவுக்குக் குவிய அவனது இதழ்களில் உருவான புன்முறுவலில் குறும்புத்தனம் குதி போட்டது. கண்கள் அவள் வேகத்தைக்கண்டு அஞ்சி மிரள்வது போல் நடித்தன.

"உனக்குப் பரிகாசமாக இருக்கிறதா நான் சொல்வது?" என்றான் அவன்.

"இல்லை! இல்லை!"

"அப்படியானால் சொல்லு! அனாவசியமான காரியங்களை இழுத்து விட்டுக் கொண்டு நான் எதற்காக அவதிப்பட வேண்டும்?"

"எதற்காக என்றால் நான் என்ன சொல்ல? அது உன் குணம். பிறர் துன்பத்தைக் காணச் சகியாத அன்பு இதயம் கொண்டவள் நீ! அதனால் வேண்டா வெறுப்பாகவேனும் பிறருக்கு உதவாமல் உன்னால் இருக்க முடியாது! இல்லாதபோனால் முன்பின் அறிமுகமில்லாத எனக்கு அன்று சகாயம் செய்திருப்பாயா?"

"ஹூம், எனக்கு யாரிடமும் இரக்கமோ, பரிவோ, பாசமோ எதுவுமே கிடையாது!" என்று தூக்கி எறிந்து பேசினான் அவன்.

"அந்தக் குணங்களெல்லாம் இல்லாமல் இருக்க வேண்டும் என்றுதான் நீ விரும்புகிறாய்; அது எனக்குப் புரிகிறது. உனது அன்பையும் இரக்கத்தையும் பெறுவதற்கு யாருமே தகுதியற்றவர்கள் என்று கருதுகிறாய். ஆனால் உன் இயல்பு வேறாக இருக்கிறது. அதற்கு என்ன செய்ய? அறிவும் இயல்பும் மோதிக் கொள்கிற சமயங்களில் நீ படபடக்கிறாய்!"

அவளுடைய மிடுக்குத்தன மெல்லாம் எங்கோ மறைந்து கொள்ள இமைகள் இலேசாகத் தாழ்ந்தன. "ரொம்பப் பொல்லாதவன் நீ! என் மனப் போராட்டங்கள் முதற்கொண்டு நீ எப்படிக் கண்டுபிடித்தாய்?"

"சிங்கப்பூர்ச் சாலைகளில் முகத்தைப் பார்த்தே ஒருவன் எப்பேர்ப்பட்டவன் என்று மனோ தத்துவம் பேசுகிற நடமாடும் ஜோசியர்கள் எத்தனை பேர்கள் இல்லை? அவர்களெல்லாம் என்னிடத்தில் பிச்சை வாங்க வேண்டும்!"

"ஓ!" என்று நீட்டி முழக்கினான் அவன். "கெட்டிக்காரன்தான்!"

சட்டென்று அவள் முகபாவம் மாறியது. வடிவேலுவின் தோள்களுக்கு மேலாக அவள் பார்வை சென்றபோது பீதி நிலவியது அவள் வதனத்தில். "திரும்பித் தொலைக்காதே!" என்று எச்சரித்தாள் அவள். "சற்று முன்னால் நான் என்ன சொன்னேன்? உன்னைக்

கெட்டிக்காரன் என்று பாராட்டினேன்? தப்பு! தப்பு! ராணுவப் போலீஸாரின் வலையில் விழுவதற்கென்றே இந்த இடத்துக்கு மீண்டும் வந்து சேர்ந்த உன்னைப் போன்ற ஓர் அறிவுச் சூன்யத்தை எங்கே சந்திக்க முடியும்?''

பரபரப்புடன் வடிவேலு எழுந்திருக்கப் போனான்.

''அவசரப்படாதே!'' என்று அவனை அமரச் செய்தாள் அவள். ''சந்தேகத்தைக் கிளப்பாமல் அமைதியாக இருக்க வேண்டும் நீ. அவர்கள் உன்னைப் பார்த்தாலும் அடையாளம் கண்டு கொள்ளாமல் சும்மா இருந்து விடலாம். ஆனால் பயந்தது போல் காட்டிக் கொண்டாயோ, இன்றோடு தீர்ந்தாய்!''

அவள் யோசனையைப் பின்பற்றி நிதானமாக மதுக் கோப்பையை வாயருகே எடுத்துச் செல்லத்தான் முயன்றான் வடிவேலு. கரம் நடுங்கி மேஜை மேல் திரவம் சிந்தவே 'நக்' கென்று வைத்து விட்டான்.

''அடாடா! என்ன தைரியம், ஜப்பானியனுடன் யுத்தம் செய்யப் போகிறவனுக்கு?''

''போர் முனை வேறு விஷயம். அங்கே அவனுக்காயிற்று, எனக்காயிற்று என்று சண்டைப் பிடித்துக் கொள்ளலாம்! ஜப்பானியனுக்கு இந்தியன் சளைத்தவனல்ல என்று நிரூபிக்கலாம். ஆனால் இவர்களிடம் சிக்கினால் சண்டை போடவா முடியும்? தண்டனையை அல்லவா அனுபவிக்க வேண்டும்?'' என்ற வடிவேலு முன்பொரு சமயம் வெய்யிலிலும் மழையிலும் பன்னிரண்டு மணி நேரம் 'ஸெண்ட்ரி டியூடி' பார்த்ததை நினைவுபடுத்திக் கொண்டான். அவன் தேகமே கிடுகிடுத்தது இப்போது!

''வாஸ்தவம்தான்'' என்று ஒப்புக்கொண்ட அவள், ''உன்னைச் சீக்கிரமாக இங்கிருந்து வெளியேற்ற வில்லையானால் இண்டாட்டமாகி விடும் போல் இருக்கிறதே!'' என்றும் சேர்த்துச் சொன்னாள், அவனுடைய உதறலைக் கண்டு. ''கலாட்டா நடைபெற்ற இந்த வீதியில் அன்று ஏமாற்றமடைந்த போலீஸாருடைய நடமாட்டம் அதிகமாயிருக்கும் என்பது உன் மூளைக்கு ஏன் எட்டாமல் போய்விட்டது? அன்று தப்பி ஓடியவர்களில் யாராவது கண்களில் தட்டுப்பட மாட்டார்களா என்று இந்த விடுதியைச் சல்லடை போட்டுச் சலித்துக் கொண்டிருப்பார்களே? அப்படி யென்று உனக்குத் தோன்றவேயில்லையா?''

''உனக்கு நன்றி தெரிவித்து விட்டுப் போகத்தான் வந்தேன்.''

''இன்று உன்னைத் தப்புவிக்கப் போவதற்கும் சேர்த்து இப்போதே நன்றி சொல்லி விடு! அதற்காக இன்னொரு தடவை இங்கே வந்து என் பிராணனை வாங்காதே!''

''அத்தனை சுலபமாய் என்னை விரட்டி அடித்துவிட முடியாது!'' என்றான் வடிவேலு. அவன் குரலில் கலக்கம் குறைந்து தீர்மானம் கூடேறி இருந்தது. ''உன்னிடம் விசாரிக்க வேண்டிய சங்கதிகள் நிறைய இருக்கின்றன. என்னோடு புறப்பட்டு வா இந்த இழவெடுத்த இடத்தை விட்டு வேறே எங்காவது போய் நிம்மதியாகப் பேசலாம்!''

''நான் இப்போது எப்படி வருவேன்? பதினொரு மணி வரை இங்கே இருந்தாக வேண்டுமே நான்! அந்த ஒப்பந்தத்துக்கு உடன்பட்டுத்தானே சம்பளம் வாங்குகிறேன்?''

''பத்து மணிக்கு முன்னால் நான் முகாமுக்குத் திரும்ப வேண்டுமே?''

சற்று நேரம் அவனை உன்னிப்பாகக் கவனித்த அவள், தன்னுடைய கையை நீட்டி மேஜை மீதிருந்த அவன் கரத்தைப் பற்றினாள். ''எனக்கும் ஜோதிட சாஸ்திரத்தில் நீ நிபுணன்தானா என்பதைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது'' என்றாள் புன்சிரிப்புடன். ''தலையை வலிப்பதாகப் புளுகி விட்டு இன்னும் அரை மணியில் இந்தத் தெருவின் தெற்கு முனைக்கு வந்து சேருகிறேன். அங்கே எனக்காக நீ காத்திரு. சரிதானா?''


உற்சாகமாகத் தன் தலையை ஆட்டினான் வடிவேலு.

''இரண்டு போலீஸ் கோட்டான்களும் வலது கோடியில் சுவரில் சாய்ந்தபடி நின்று இங்கே கூடியிருப்பவர்களைக் கூர்ந்து நோக்கி ஆராய்ந்து கொண்டிருக்கின்றன. நீ எழுந்து, எனக்கு இடது பக்கமாகத் திரும்பி நில்!''

இப்படிக் கூறிவிட்டு அவள் மேஜையைச் சுற்றிக் கொண்டு வந்து அவனை அணுகினாள். அவன் கையைப் பற்றியவாறு பதற்றமின்றி மெல்ல அழைத்துப் போனாள். ''இவர்களுடைய உபத்திரவம் ஒரு புறமிருக்க, அன்று நீ தாக்கினாயே, அந்த ஆஸ்திரேலியர்களும் உன் தோலை உரிக்கிற சந்தர்ப்பத்தை ஆவலோடு எதிர்நோக்கியிருப்பார்கள். உன்னைப் போல் இந்த விடுதியினுள் நுழைந்து கைதாகிற அளவுக்கு அவர்களுக்கு நெஞ்சழுத்தமோ சாமர்த்தியமோ போதாது! ஆகவே வெளியே இந்த வட்டாரத்தில் எங்கேயாவது பதுங்கியிருப்பார்கள், ஜாக்கிரதை!'' என்ற அவள், வாசல் 'ஸ்பிரிங்' கதவை உள்ளுக்காக இழுத்துத் திறந்து அவனை வெளியே தள்ளினாள்

கதவு மீண்டும் மூடிக் கொள்ளுமுன்னர், 'அரை மணி நேரம்!'' என்று நினைவூட்டினான் வடிவேலு. (தொடரும்)

கார்டினல் பாலிஷ்




இதுவே உங்கள் வீட்டிற்குப்பெருமை!

உங்கள் வீட்டின் தரை,மங்கலாகவும் பளபளப்பின்றியும் இருந்தால் வீட்டின் அழகையே குறைத்துவிடும். ஆதலால், ரெட் கார்டினல் பாலிஷ் மூலம் உங்கள் வீட்டின் தரையை செக்கிற ஒளியுடன் கூடி பிரகாசிக்கும்படி வைத்துக்கொள்ளுங்கள். சாதாரண கல் தரையானாலும், சிமிட்டித் தரையானாலும், பளபளப்பைக் கொடுப்பதில் ''கார்டினல் பாலிஷ்'' அற்புதமாக வேலை செய்யக்கூடியது. கண நேரத்தில் மங்கலான தரையை செக்கிற ஒளியுடன் பிரகாசிக்கச் செய்யும்.


உங்கள் அழகான வீட்டின் தரையை அழகாகவும் பளபளப்பாகவும் வைத்துக்கொள்ள இன்றே ''கார்டினல் பாலிஷை'' உபயோகியுங்கள்.


ரெட்
கார்டினல்
பாலிஷ்



அட்லான்டிக் (ஈஸ்ட்) லிட். (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

JWTCP 5088 CP 2





ஒரு குழந்தை தூங்கத்தாலாட்டுப் பாடுவதால் இரண்டு பேருக்குத் தூக்கமில்லாமல் போய் விடுகிறது குழந்தைக்கும், பாடுபவருக்கும்!

குடை: சட்டை யில்லாம வெறும் கட்டையா நின்னுண்டு இருக்கயே? உனக்குக் குளிரலே?




"அதோ போகிறாரே அவர் மிகப் பெரிய எழுத்தாளருங்க!"

"அப்படியா! அவர் எழுத்து எவ்வளவு பெரிசா யிருக்கும்?"



"சார்! இவரைத் தெரியுமா? வாயில் பொய்ப் பல் கட்டிண்டு நிஜம் பேசுகிறவர் இவர் ஒருவர் தான்!"

சாமா



"இது நல்ல கடிகாரமுங்க. வாங்குங்க! சாவி கொடுக்காமலே பதினைஞ்சு நாள் ஓடும்!"

"சாவி கொடுத்தால் எத்தனை நாட்கள் ஓடும்...?"

"மணி ஐயா என்ன எழுதியிருக்கிறார், ராமு?" காமாட்சி அம்மாள், கடிதத்தைப் படித்து விட்டுச் சிந்தனையுடன் அமர்ந்துவிட்ட மகனை ஆவலுடன் வினவினாள்.

"நீலாவை விமலாவுடன் கொஞ்ச நாட்கள் தன்னுடன் வந்திருக்கும்படி எழுதியிருக்கிறார். அண்ணா இறந்து விட்டதனால் மன்னி உறவு விட்டுப் போகாதாம். விமலா எங்களுக்கும் வம்ச விளக்குத்தான் என்கிறார்." ராமு வசனத்தை ஒப்பித்தான்.

"சரிதான், கரிசனம் கெட்டுப் போகிறது. எட்டு வருஷங்களுக்குப் பின் இன்றுதான் ஆசையாகக் கூப்பிட நினைவு வந்ததாமா, குழந்தையை! நீலாவின் உதவி அவர் மனைவிக்கு வேண்டுமோ என்னமோ? நாசுக்காக எழுதுகிறார்...." என்று காமாட்சி அம்மாள் முகத்தைக் கடுத்தாள்.

"அப்படி ஏனம்மா நினைக்க வேண்டும்? அவருக்கும் கல்யாணத்துக்குப் பெண் இருக்கிறது. விமலாவுக்கும் சேர்த்து வரன் பார்க்கலாம் என்று ஏன் அவர் எண்ணக் கூடாது? எனக்குக் கூடக் கொஞ்ச நாட்கள் நீலா, மைத்துனர் வீட்டில், உறவு விடாமல், போய்த் தங்குவது நல்லது என்றே தோன்றுகிறது. அன்று நீலா விதவையானாலும் இளம் பெண்; விமலா அறியாத குழந்தை. அதனால் நம்மிடம் அனுப்பினார். அதற்காக உறவு விட்டு விடுமா?" ராமுவின் குரல் உறுதியாக ஒலித்தது.

"என்னது?" தாயார்க்காரி அதிர்ந்து விட்டாள். "ஏண்டா, உனக்கு என்ன கூடப் பிறந்தவள் பாரமாகி விட்டாளா?"

"என்னம்மா, என்ன வாக்கு வாதம்?...." இதற்குள் நீலாவே உள்ளேயிருந்து வந்துவிடவே ராமு சற்றுத் தயங்கினான்.

"என்னவா? உன் மைத்துனர் மணி உன்னை அரை மனத்துடன் 'வா' என்று அழைக்கும் முன் உன் தம்பி உன்னை மூட்டை கட்டி அனுப்புகிறேன் என்கிறான்! ஆள் எப்படி மாறி விட்டான் பார்த்தாயாமா? ம்...நீயும் இருக்கிறபடி இருந்தால் இப்படி 'வா...போ' என்று ஏலம் போடும் ஒரு நிலை வருமா?" என்று தாயார் கண்ணைக் கசக்கினாள்.

"அழகுதான். நான் மைசூர் போக வேண்டுமாமா? ஏண்டாப்பா, என் பெண்ணைத்தான் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன் என்றாய்? இப்போது என்னையே விரட்டுகிறாயா? எல்லாம் அவள் பேசுகிற பேச்சா? அம்மா! அவள் அல்லவா பேச வைக்கிறாள்!" நீலாவின் குரலில் உஷ்ணம் தெறித்தது. "வாய்த்தது தரித்திர மானாலும் சாமர்த்தியக்காரிதான்!"

"அம்மா....அக்கா....!" —ஏதோ சொல்ல வந்த ராமு சட்டென்று அடக்கிக் கொண்டான். "வீணாக மருமகளைக் குறை சொல்வதே வழக்கமாகி விட்டது உங்களுக்கு. அவள் பசையில்லாத இடத்துப் பெண்ணாக இருக்கலாம். ஆனால் பசையுள்ளவள் வந்திருந்தால் அவள் என்னையே உங்களிடமிருந்து பிரித்துத் தன்னுடன் ஒட்ட வைத்திருப்பாள் என்பது தெரியவில்லை, உங்களுக்கு! ம்....மனத்தில் பேதம் என்று தோன்றி விட்டால் பின் எதுவுமே தவறாகத்தான் தெரியும். ஆனால் ஒரே முடிவாகச் சொல்கிறேன். இந்த வீட்டின் பொறுப்பான தலைவன் என்ற முறையில் உங்கள் நன்மையில் எனக்கும் அக்கறையுண்டு. நீலா அக்கா, நாளை மறுநாள் புறப்படத் தயாராயிரு. நானே இதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டுதான் இருந்தேன். அவராக எழுதி விட்டார்...."



பேதம்





ஸ்ரீப்ரியா

"ராமு! அவசரப்படாதே. எட்டு வருஷங்களாக ஏதோ அவ்வப்போது மரியாதைக்கு ஒரு வரி எழுதினவர் இப்போது ஏன் உறவு

கொண்டாட வேண்டும்? எப்படியோ அவளைப் பாலியத்தில் கட்டிக் காத்தது போல், அந்தக் குழந்தையையும் கொஞ்ச நாட்கள் காப்பாற்றி ஒருவனிடம் நாமே ஒப்படைத்து விடுவோம். தெரியாத இடத்துக்கு அனுப்பி விட்டால் அவளுக்கும் கஷ்டம், நமக்கும் கவலை....'' காமாட்சி அம்மாள் கவலையுடன் கூறினாள்.


''அம்மா! நீ பேசுவது விசித்திரம்தான்...'' ராமு சிரித்தான். ''மணி அய்யர் நீலாவுக்கு அன்னியமா? செத்தால் ஒருவருக்கொருவர் 'தீண்டல்' காக்க உரிமையுள்ள உறவு அம்மா. நான் அவளுக்குச் சகோதரன் என்றால் அவர் அவள் கணவருக்குச் சகோதரன். என்னைப் போல் விமலாவிடம் அவருக்கும் இரத்த பாசம் இருக்காதா அம்மா? புக்ககத்தினர் என்றால் அன்னியம் என்றும், மருமகள் என்றால் தங்களை வெறுப்பவள் என்றும் பேதம் ஏன் பாராட்ட வேண்டும் அம்மா? சரி, சரி, நான் அவருக்குத் தந்தி கொடுத்து விடுகிறேன். பின்னால் நீங்கள் உணர்வீர்கள்....'' என்று கூறி, பதிலுக்குக் காத்திராமல் சென்று விட்டான் ராமு.

காமாட்சி அம்மாளும், நீலாவும் பிரமித்து நின்றனர். அவர்கள் ஆத்திரமெல்லாம் இப்போது மருமகள் கருணா மீது பாய்ந்தது. இருப்பினும் 'போ' என்று சொன்ன ரோஷத்துக்காக நீலா புறப்படுவது என்று தீர்மானித்து விட்டாள். தாயும் கண்ணீருடன் அதை ஆமோதித்தாள்.

'ஜல் ஜல்' என்று மாட்டு வண்டி வாசலிலிருந்து நீலாவையும், விமலாவையும் ஏற்றிக் கொண்டு ஸ்டேஷனுக்குப் புறப்பட்டது.

''நீலா, ஜாக்கிரதை. எனக்கென்று ஒரே பிள்ளையாக இப்படி ஒரு முகடு வந்து பிறந்து விட்டது. என் பொறி அவனுடன் தான் கழிந்தாக வேண்டும். என்ன செய்வது? வளர்ந்த பெண்ணுடன் முன்பின் அதிகப் பழக்கமிராத மனிதர்களிடம் செல்கிறாய். ஜாக்கிரதை...'' தெருக்கோடி வரை வந்து வழியனுப்பினாள் தாயார்க்காரி. பெண்களைப் பெற்றாலே என்றும் தீராக் கவலைதானா தாய்மார்களுக்கு!

ரயில் புறப்பட மணி அடித்தது. 'அக்கா! போய் இருந்து பார். சௌகரியப்படா விட்டால் ஒரு கார்டு போடு. ஓடி வந்து அழைத்துக்கொண்டு வந்து விடுகிறேன். ஒரு நிர்ப்பந்தத்துக்காக உன்னை அனுப்புகிறேன்.....'' நெஞ்சம் துடிக்கக் கூறிய தம்பியை வியப்புடன் நோக்கினாள் நீலா.



''ஹும். தான் ஆடா விட்டாலும் சதை ஆடுகிறது, ராமு. ஆனால் கஷ்டம் எதுவானாலும் சமாளித்துக்கொள்வேன். அவர்களும் 'போ' என்று சொல்லு முன் இந்தப் பெண்ணுக்கு மட்டும் ஒரு வழி பிறந்துவிட வேண்டும்....'' நிஷ்டூரமாகப் பேசிய சகோதரியைப் பரிதாபமாகப் பார்த்தான் ராமு. கடவுளே, மனைவி என்று ஒருத்தி வந்து விட்டால் பெற்ற மகனை வேற்றானாகத் தென்படுவது ஏன்?

வருடங்கள் இரண்டு ஓடி விட்டன. விமலாவுக்குப் பெங்களூரிலேயே ஒரு வரன் குதிர்ந்தது. அவள் அழகுக்கும், அறிவுக்கும், அடக்கத்துக்கும் ஏற்ற அதிகாரிதான், அவளுக்குத் தாலி கட்டியவன். மணி ஐயர் மகளுக்கும் அதே முகூர்த்தத்திலேயே கல்யாணம் நடந்தது. ராமு கருணாவுடன் முறைப்படி தன் சக்திக்கு ஏற்ற வரிசைகளுடன் திருமணத்துக்குச் சென்றான். மணி ஐயரும், அவர் குடும்பத்தினரும் எத்தனையோ ஆசார உபசாரங்கள் செய்தும் நீலா முகம் கொடுத்துக்

கூடப் பேசாதது ராமுவுக்கு வருத்தமாகத் தான் இருந்தது. தன் சகோதரனையே வெறுப்பது எதனால்? அவன் அன்புக்குப் பங்குபோட ஒரு பெண்ணை அவன் தானே தேடிக்கொண்டதுதான் காரணமா? காதலுக்கு மதிப்பு அவ்வளவுதானா?

அது மட்டுமா?.... "நீங்கள் விரட்டினாலும் நான் அழிந்து விடவில்லை. என் பெண்ணுக்கு இதோ உயர்ந்த இடத்தில் மணமாகி விட்டது. இனி எங்காவது, ஒரு கையை எதிர்பார்க்காமல், சமையல் செய்து போட்டாவது என் வயிற்றைக் கழுவிக் கொள்வேன்" என்று கருணாவுக்கு வெற்றிலை பாக்குடன் இந்தச் சுடு சொல்லையும் சேர்த்துத்தான் அளித்தாள் நீலா. ராமுவின் ஆக்ஞைப்படி கருணா வாய் திறக்கவில்லை!

"அம்மா அபாயம். புறப்படு...."—இந்தத் தந்தி கண்டு பறந்துவந்து விட்டாள் நீலா. பலவீனமான நிலையில் படுக்கையில் தாயைக் காணும் போது அவளுக்கு வேதனையாக இருந்தது. கருணா ஓடி ஓடி எத்தனை செய்தாலும் தான் செய்வது போல் ஆகுமா என்று அவள் நினைக்காமல் இல்லை. ஆனால் ராமு என்ன சொல்வானோ! புறப்பட்டுப் போ என்று சொல்லி விடுவானோ? அந்த வார்த்தை அவன் வாயிலிருந்து வருமுன் கிளம்ப வேண்டும்!

ஆனால் இத்தனை சீக்கிரம் இந்தக் கேள்வியை அவள் ராமுவிடம் எதிர்பார்க்கவில்லை தான். அவள் வந்த மறுவாரம், காமாட்சி அம்மாள் நிலை சற்றுத் தேறியதுமே ஒரு நாள் ராமு அவள் அருகில் வந்து நின்றான்.

"நீலா அக்கா, நீ மறுபடி எப்போது புறப்பட வேண்டும்?"

"நீ சொல்வதற்கு முன்னால்..." நீலா அழுகையை அடக்கினாள்.

"நீ போகத்தான் வேண்டுமா என்று கேட்கிறேன்!" என்றான் ராமு.

"என்ன....என்ன?" காமாட்சி, நீலா இருவரும் திடுக்கிட்டனர்.

"நீலா, உன் ஓரகத்தியோ காலமாகி விட்டாள். அங்கும் மருமகள் ராஜ்யம் நடக்கிறது. நீ அங்கிருப்பது அவசியமா? அதைவிட இங்கிருப்பது இப்போது நல்லதல்லவா?...." ராமு வழக்கம் போல் சலனமின்றிப் பேசினான்.

நீலாவின் முகத்தில் ஒரு கணம் மின்னலொளி பரவியது. நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"ஏன், இன்று அம்மா நடமாட்டமின்றிக் கிடக்கிறாள், கருணாவுக்கும் தள்ளவில்லை என்று வலை வீசுகிறாயாக்கும்!" அடேயப்பா! 'நாத்தி' என்றால் நாவு நுனியில் நெருப்புதானிருக்குமோ!

"நான்தான் அப்போதே சொன்னேனே, அக்கா இப்படித்தான் கேட்பார் என்று... வீணாக என் தலையை உருட்டி வாயில் போட்டுக் கொள்வதில் உங்களுக்கு என்ன திருப்தி?" என்று குறுக்கிட்ட கருணாவுக்குக் குரல் கம்மியது, துக்கத்தினால்.

"கருணா, நீ பேசாதே. கட்டிய மனைவியாக என்னுடன் ஒத்துழைக்கும் உனக்கே என் போக்கு புரியாத போது, மனத்திலே இருள் படிந்து விட்டவர்களுக்கு ஒளியைக் கண்டால் கூசத்தான் செய்யும்..." ராமு ஆவேசத்துடன் நீலாவினருகே அமர்ந்து கொண்டான். "அக்கா! அன்று உன்னைப் போக சொன்னது சுயநலத்துக்கு அல்ல. கொடிக்குக் காய் கனக்காது. உனக்கு நான் கடமைப் பட்டவன்; என் கஞ்சியில் உனக்கும் பங்கு உண்டு. ஆனால் உன் குடும்ப க்ஷேமத்துக்காக அனுப்பினேன்; இன்று உன் அமைதிக்காக இங்கு இருக்கச் சொல்கிறேன்."

நீலா தலைகுனிந்தாள் "உண்மையாக என் மீது அக்கறை இருந்தால் என் பெண்ணை மணக்க மறுப்பாயா முதலில்? எங்கிருந்தோ ஒருத்தியை...."

"அக்கா! அங்குதான் நீ தவறி விட்டாய்; பேதம் பிறந்தது! நீ என்னைத் தூக்கி வளர்த்தது போல் ஐந்து வயதுக் குழந்தையாகத் தந்தையை இழந்து வந்த விமலாவை நான் வளர்த்திருக்கிறேன். என் குழந்தையாக அல்லது ஒரு சகோதரியாக என்றுமவது வைத்துக் கொள். அவளை வேறு விதமாக எப்படி நினைப்பது நான்? அதனால் தான் என் கண்கள் மனைவி என்ற உறவுக்கு வேறு உறவைத் தேடியது. அக்கா, உன் தம்பி ஒரு வெறும் குமாஸ்தா என்பதை மறந்து விடாதே."

"ஆமாம். இதெல்லாம் வீண் பேச்சு. அதற்காக என்னை விரட்டுவானேன்?" காக்கை கழுத்திலே கட்டிவிட்ட கடிதத்தைக் கண்டு விட்டு நீலா பிகுவைக் குறைக்காமல் பேசினாலும், குரலில் குழைவிருந்தது.

"நான் விரட்டவில்லை. உனக்கு நல்ல காலத்துக்கு வழி காட்டினேன். அக்கா, நான் ஒரு குமாஸ்தா. நான் விமலாவுக்கு வரன் தேடினால் ஒரு வாத்தியாரோ, குமாஸ்தாவோ தான் வாய்த்திருப்பார். பிள்ளையைப் பெற்றவர்களும் என் அந்தஸ்தைக் கொண்டுதான் பெண்ணை மதிப்பார்கள். அவளிடமுள்ள வேறு எந்தக் கலை அம்சமும் அவர்கள் கண்களில் படாது; ஆனால் உன் மைத்துனரோ பெரிய கம்பெனியின் டைரக்டர். அவர் ஜாதகத்தை எடுத்துச் சென்றாலே பிள்ளையைப் பெற்றவர்கள் மலைத்து, மகிழ்ந்து போவார்கள். தெரிந்ததா? இப்போது அவள் ஓர் அதிகாரியின் மனைவி. அந்த அந்தஸ்தை ஏற்படுத்தியது உன் மைத்துனரின் உறவு. அந்த உறவு உறுதி பெற்றது, நீ உன் பெண்ணுடன் அங்கு இரண்டு வருஷங்கள் முகாம் போட்டதால்! உன் முகாமை அண்ணன் நினைவை அவர் மனத்திலே இறுத்தித் தான் ஆற்ற வேண்டிய கடமையை அவருக்கு நினைவூட்டிக் கொண்டே யிருந்திருக்கும். ஒட்டிக் கொண்டால்தான் உறவு வளரும்; விட்டுப் போனால் ஒட்டாது. அக்கா! புரிந்ததா? இப்போது சொல், என் செயல் தவறா?"

"தம்பி...!" நீலாவின் அன்புக் கரங்கள் அவனை ஏற்றன. "இதை நீ அப்போதே எடுத்துச் சொல்லி யிருந்தால் இந்தக் கசப்பே இருந்திராதே."

"கையாலாகாத நான் வாயால் எதைச் சொன்னால் தான் ஒப்புக் கொள்வீர்கள்? இப்போது காரியம் இனிது முடிந்தது. உங்களுக்கும் மனம் இளகிற்று!"

"ராமு!" தாயின் குரல் பலவீனமாக ஒலித்தது. மருமகள், மகள், மகன் மூவர் கரங்களையும் தன் நடுங்கிய கரங்களால் பற்றிய தாயின் மனத்தில் அமைதி பிறந்தது, பேதம் மறந்து, அன்பு சுரந்தது.



ஹெடன்ஸா



மூலநோய்

துரிதமாயும்

தீங்கின்றியும்

குணமடைய

உறுதியளிக்கிறது.

ஹெடன்ஸாவில்

உணர்வழிக்கும் மருந்து


கிடையாது. கறையுண்டாக்காது.

DZ 1285 A. TM.



பாசம்

காந்தன்



குழந்தையில்லாக் குறையால் தவித்த ஒரு பிரபு மறுமணம் செய்துகொள்ள மனைவியின் சம்மதம் பெற்று அவளை வெளியேற்றி விடுகிறார். போகிற வழியில் ஓர் அநாதைக் குழந்தை அவளுக்குக் கிடைக்கிறது. ஏற்கனவே கர்ப்பமாயிருந்த அவளுக்குக் குழந்தை பிறக்கிறது. வளர்ப்பு மகன் பண்புள்ளவன்; சொந்த மகன் சூழ்நிலை காரணமாகத் திருடனாகி விடுகிறான். வளர்ப்பு மகன் சர்க்கார் காட்டு இலாகா அதிகாரியாகிறான்.

வளர்ப்பு மகன் ரகுவாக வரும் கல்யாண் குமார் அதிர்ஷ்டசாலி. காட்டிலாகாவுக்குள் கால் வைத்ததுமே காதல் மலர்ந்து விடுகிறது. நடிப்பு...? மூச்...!

எம். ஜி. ராமச்சந்திரனுக்கு நடிக்க நல்ல சந்தர்ப்பங்கள் வாய்க்கின்றன. தாயைக் கண்டு அவர் தவித்த தவிப்பு, சரோஜா தேவியைச் சந்தித்த போதெல்லாம் தான் நல்லவனில்லை யென்ற உணர்ச்சிப் போராட்டத்தில் அவர் விம்மியது ஆகிய கட்டங்களில் உண்மையாகப் புரட்சி செய்திருக்கிறார்.

வெகு நாட்களுக்குப் பிறகு டி. ஆர். ராஜகுமாரியைத் திரையில் பார்க்க முடிந்தது. பிரபுவின் மனைவியாக வந்து அல்லலுற்று, அழுது, ஆற்றாமையில் ஏங்கிய அவர் நடிப்பில் ஓர் அமைதியும், அழகும் இருக்கின்றன.

பிரபுவாக வந்து அட்டகாசம் பண்ண எம். ஆர். ராதா தகுந்தவர்தான்.

படத்தின் வசந்த காலம் சரோஜாதேவி ''ஜல் ஜல்லென்னும் சலங்கையொலி'' என்னும் சுவையான பாட்டோடு மாட்டு வண்டியை ஓட்டி வரும்போதுதான் தொடங்குகிறது. ஒரு நடன நங்கை திருடனிடம் மனம் பறிகொடுத்து நினைத்தபோதெல்லாம் அவனைத் தேடிக் கொண்டு ஓடி வருவதும் சினிமா பார்க்கிறோம் என்பதை நினைவூட்டி விடுகிறதே! தங்கையிடம் கொண்ட பரிவினால் புலியாக மாறி உறுமிப் பிறகு பசுவைப் போல் பணிந்து நல்ல நடிப்புக்கு நடுநாயகமாக விளங்குகிறார் அசோகன்.

பாத்திரங்களின் நடிப்பினால் கதையின் சோக ரஸத்தை ரஸிக்க முடிந்தாலும், கதையை மட்டும் எடுத்துக் கொண்டால் வேண்டும் என்றே ஏற்பாடு செய்தமாதிரி யில்லையா? தாயைக் கொன்றுவிட்ட கதாநாயகன் இறந்து விடுகிறான். கதாநாயகியும் இறந்து விடுகிறாள். ஆனால் பாசம்....!



'அந்தநாள்', 'இது நிஜமா?' போன்ற சோதனைப் படங்களை எடுத்து வெற்றி கண்ட நடிகர் – டைரக்டர் பாலசந்தரின் படம் என்றாலே அதில் ஏதாவது புதுமையை ரசிகர்கள் எதிர்பார்ப்பார்கள். நீண்ட நாட்களுக்குப் பிறகு பாலசந்தரின் படம் வெளியாகிறது என்று ஆவலோடு ரசிகர்கள் காத்திருந்தார்கள். 'படத்தின் பெயரும், அதை விளம்பரப் படுத்திய முறையும் புது மாதிரியாக இருக்கின்றனவே, படத்திலும் ஏதோ புதுமை இருக்கத்தான் வேண்டும்' என்று துடிப்போடிருந்தார்கள். ஆனால்......?

ரசிகர்கள் மறந்து போன சில பழைய நடிகர்களையும், திரையுலகுக்குச் சில புதிய முகங்களையும் இந்தப் படத்தின் மூலம் பாலசந்தர் அறிமுகப் படுத்தியிருக்கிறார். அதைப் புதுமை என்று சொல்லலாமா?

ஏற்றுமதி இறக்குமதி பிஸினஸ் நடத்தும் பெரிய புள்ளியாக நடிக்கும் குமாரின் உண்மை நிலவரம் – 'வெறும் வெத்துவேட்டு'. அவன் காரியாலயமோ இரண்டே அறைகளையுடையது. முதல் அறையில் குமாஸ்தாக்கள். அடுத்த அறையில் குமார் கோஷ்டி. இவர்கள் மோசடி நாடகம் நடத்துவதைப் பற்றிப் பேசுகிறார்கள், தங்கள் அறையில் இருந்தபடி, அறைக் கதவைக் கூடச் சாத்தாமல். ராஜாராம் என்ற பணக்காரரை ஏமாற்றிப் பணம் பறிக்கச் சதி வகுக்கிறார்கள், கொஞ்சமும் ஒளிவு மறைவு இன்றி. பிக்பாக்கெட் அடிக்கும் பக்கிரிசாமி கூட அக்கம் பக்கம் பார்த்து அடக்க ஒடுக்கமாகச் செய்வானே! ஆனால் குமாரோ?...

காதலித்தவளைக் கட்டையால் அடித்துக் கொல்லக் கூட்டிச் செல்லும் குமார் அதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்தது விந்தையிலும் விந்தை.

கூப்பிடு தூரத்தில் பல குடிசைகள். ஏரியை அடுத்து பஸ் செல்லும் ராஜ பாட்டை. எதையும் திட்டமிட்டுக் கன கச்சிதமாக முடிக்கும் குமார் இந்த இடத்தில் ஒரு கொலையைச் செய்கிறான். அது மட்டுமல்ல. இறந்த உடலோடு ஒரு கயிற்றை சேர்த்து கட்டி அந்தக் கயிற்றின் மறு முனையில் ஒரு கல்லைக் கட்டித் தூக்கி எறிகிறான். உடல் மிதக்காதிருப்பதற்காக. அவன் நிற்பது முழங்கால் அளவு நீரில். கடைசியில் பலர் அந்த உடலைத் தேடுவதும் இடுப்பளவு ஜலத்தில் கட்டிய பின் உள்ள கயிற்றின் நீளமோ நான்கைந்தடி. உடலை மிதக்க விடாமல் செய்ய அந்தக் கல் உதவாது. ஒரே இடத்தில் மிதந்து நிற்கத் தான் உதவும்.

இத்தகைய காட்சிகளைப் புரட்சி என்று கருதலாமா?

மர்மக் கதை, துப்பறியும் கதைகள் நம் நாட்டுச் சரக்கல்ல. அவைகளை மேனாட்டாரைப் போல் படம் பிடிப்பதற்கு மிகுந்த திறமை வேண்டும். ஒரு சிறிய ஒலி, ஒரு பார்வை, இதுவே கூட இத்தகைய படங்களுக்கு ஜீவனாகத் திகழும். இவைகளை அறியாதவரல்ல டைரக்டர் பாலசந்தர். ஆனால் அவரது முத்திரையை இந்தப் படத்தில் காண முடியாததோடு அவரது நடிப்பிலும் கூடவல்லவா ஏமாற்றம்!


ஜமுனாவாக நடிக்கும் வசந்திக்கு நல்ல எதிர் காலமிருக்கிறது. முன்னுக்கு வருவதற்கான முகவெட்டு உடல் கட்டோடு நடிப்புத் திறனும் கூட இருக்கிறது.

படத்தின் நடுவில் ஒரு கட்டத்தில் படத்தை உருவாக்கப் பங்கு கொண்ட கலைஞர்களின் பெயர்களைக் காட்டுவதைப் புதுமை என்று சொல்லலாமா?

குழந்தை மீனுவும் வேணுவும்தான் கதையின் ஜீவன். பேபி பத்மினியின் குதலைமொழிப் பேச்சைக் கேட்டு மகிழலாம் இந்தப் படத்தில்.

ஒரு சிறுவன் - ஒருநாள் இரவு தற்செயலாக ஒரு கட்டிடத்தின் ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்க நேர்ந்தது. ஒருவன் ஒருத்தியைக் கொலை செய்வதைக் காண்கிறான். அதைப் பற்றித் தன் தாயாரிடமும் தகப்பனாரிடமும் சொல்கிறான். அவர்களும் நம்பவில்லை. போலீஸ் ஸ்டேஷனுக்கே போய்ச் சொல்கிறான். அவர்களும் பையனைத் தமாஷ் செய்து அனுப்பி விடுகிறார்கள். கொலைகாரன் பார்வை பையன் மீது விழுகிறது. தன்னைக் குற்றவாளியாக்கக் கூடிய அந்த ஒரே சாட்சியான பையனைக் கொல்ல முற்படுகிறான். ஒரு பாழடைந்த வீட்டில் பையனைத் துரத்திச் செல்கிறான். பையன் தப்பி ஓடுகிறான். ஓர் இக்கட்டான கட்டத்தில் – இப்படி ஒரு பிரபலமான ஆங்கிலப் படம் பல வருஷங்களுக்கு முன் பார்த்தது. படம் பார்ப்பவரை மூச்சு விடக்கூட மறக்கச் செய்யும் அளவுக்கு அதன் படப்பிடிப்பும் டைரக்ஷனும் இருந்தன. கொலையைப் பார்த்த பையனை நடித்த குழந்தைக்கு ஆஸ்கார் பரிசு கிடைத்ததாகக் கூட ஞாபகம். அவளா இவனைப் பார்த்ததும் 'அதுவா இது?' என்று நீங்களும் கேட்பீர்கள். நல்ல மேனாட்டுப் படங்களைத் தமிழில் எடுப்பதைக் குறையாகச் சொல்லவில்லை. அதைத் திறமையாகச் செய்யக் கூடிய பாலசந்தரை இந்த முறை அது ஏமாற்றி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

— கௌசிகன்



மரத்தைச் சேலையாக மாற்றுகிறோம்!

மாயாஜாலமோ என மலைக்கவும் வேண்டாம். சாதாரண விஞ்ஞான விந்தைகளில் ஒன்று தானே என்று அசிரத்தையாக இருக்கவும் வேண்டாம். விஞ்ஞானிகளின் வேலைத் திறனை அறிந்துகொள்வது நல்லது. வெறும் கட்டை, கரி, கல் ... இவற்றிலிருந்து கயிறு திரிக்கும் ஆற்றலுள்ளவர்கள் சாதாரணக் கயிறா? அதுதானில்லை. பட்டைப்போன்ற மெல்லிய நூலிழைகளாக மாற்றிவிடுவார்கள். இந்த நூலிழைகளிலிருந்துதான் பிபின் ஸில்க் மில்ஸிலுள்ள நாங்கள் துணிகள் நெய்கிறோம். கண்கவர் வனப்பும், நம்பவே முடியாத உறுதியும் வாய்ந்த, பட்டுக்கீடான செயற்கைப் பட்டுப் பொருள்கள்!

பிபின் ஸில்க் மில்ஸ் கம். ப்ரை. லிட்., 12, தாதர் ரோட், பம்பாய்—14.

ஒரு ரோஹித் க்ரூப் ஸ்தாபனம்.

இடமில்லை! இடமில்லை!!

எங்கு கிடைத்தாலும் கிடைக்கலாம். ஆனால் நான் அனுபவப்பட்ட வரையில் தொழிற் பள்ளிகளில் இடம் கிடைப்பது கடினம்தான். சென்ற ஆண்டு என்னுடைய அக்காள் மகன் ராஜுவுக்கு கிண்டியிலுள்ள 'இண்டஸ்டிரியல் டிரெயினிங் இன்ஸ்டிடியூட்' என வழங்கும் தொழிற் பள்ளியில் சேரச் சில பெரிய தலைகள் சிபாரிசு செய்தும் பயன் படாமல் போய் விட்டது. பத்து பன்னிரண்டு வருடங்களுக்கு முன் அம்மாதிரி பள்ளிகளுக்கு மாணவர்கள் கிடைக்காமல் சிறைக் கைதிகளுக்குத் தொழிற் பயிற்சி அளித்து வந்தார்களாம். ஆனால் இப்போதோ எஸ்.எஸ்.எல்.சி முடித்தவர்களும் குமாஸ்தா வேலை கூடக் கிடைக்காத காரணத்தால் — அல்லது தொழிலின் பெருமையை உணர்வதால் — தொழிற் பள்ளிகளில் சேர விரும்புகின்றனர். காலம் இவ்வாறு மாறியிருக்கிறது.

ராஜுவுக்கு 'பிட்டர்' போன்ற தொழில் துறைகளில் சிறிது ஊக்கமிருந்ததால், 'சேர்ந்தால் அந்தப் பள்ளிகளில்தான் சேர்வேன்' என்று பிடிவாதமாக ஒற்றைக் காலில் நின்று கொண்டிருந்தான். அவனது பெற்றோரும், ''அடுத்த முறைக்கும் முயற்சி பண்ணி அவனை எப்படியாவது சேர்த்து விட்டுடப்பா'' என்றார்கள். ''ஏதோ என்னால் முடிந்ததைச் செய்கிறேன். ஆனால் அதற்காக நான் எவருடைய சிபாரிசையும் நாடப் போவதில்லை'' என்று சொல்லி விட்டேன். போன தடவை சிபாரிசுக்காக நான் பட்ட பாடு எனக்கல்லவா தெரியும்? என் சிநேகிதர்கள் மூலம் அந்தச் சிபாரிசுகளைப் பிடித்து, அவர்களுக்காக ஒவ்வொரு நாளும் அவர்களது வீட்டிலும் ஆபீஸிலும் மணிக்கணக்காகக் காத்திருந்து என் வேலையையும் நேரத்தையும் வீணாக்கியும் பிரயோசனப்படாமல் போய் விட்டதே.

அடுத்த அட்மிஷன் காலமும் வந்தது. பத்திரிகைகளில் விவரம் அறிந்த அதே நாளிலேயே மனு எழுதி அனுப்பி விட்டான் ராஜு. சிறிது நாட்களுக்குள் அவனுக்கும் இண்டர்வியூவுக்கான அழைப்புக் கடிதம் வந்தது. ''தைரியமாகப் பதில் சொல், எந்தக் கேள்விக்கும் பதில் தெரிந்த மாதிரி உன் மனதில் பட்டதைப் புளுகி வை'' என்று புத்திமதி கூறி அனுப்பினேன்.

அந்தத் தொழிற் பள்ளியில் 'இண்டர்வியூ' செய்யும் அதிகாரிகள் கேட்கும் கேள்விகள் யாவும் மிகவும் விநோதமானவை. அவர்கள் விருப்பம் போல் எதையாவது கேட்டு வைப்பார்கள். ''சென்னை மந்திரிகளின் பெயர்களைத் தனித்தனியாகச் சொல்லு'' என்பார்கள். அதாவது கடைசி மந்திரியிலிருந்து முதல் மந்திரிவரை பெயர்களைச் சொல்ல வேண்டும். ஒரு சிலரை ''ஒரு பாட்டுப்பாடு'' என்பார்கள். மற்றும் சிலரை அவர்களது மத நூல்களிலிருந்து சில பகுதிகளைச் சொல்லும்படி கேட்பார்கள். இப்படியாக அவர்கள் கேட்கும் கேள்விகள் பலவிதம். 'இண்டர்வியூ'வுக்கு ராஜுவுடன் சென்ற நான் ஒரு மரத்தினடியில் உட்கார்ந்து கொண்டேன். சுமார் 11-30 மணிக்கு 'இண்டர்வியூ' அறையில் நுழைந்தான் ராஜு. ''என்ன கேள்வி எழும், அவன் என்ன பதில் சொல்லப் போகிறான்?'' என்பதையே மிக உன்னிப்பாகக் கவனித்தேன். ஆனால் எதையும் அவ்வளவு தெளிவாகக் கேட்க முடியவில்லை.

சிறிது நேரத்துக்குள் அவனும் வெளியே வந்தான். அவனது வரவையே எதிர்பார்த்திருந்த நான் அவன் வந்ததும், ''அவர்கள் என்ன கேள்வி கேட்டார்கள்? நீ என்ன பதில் சொன்னாய்?'' என்றேன். அவன் சொல்ல ஆரம்பித்தான். ''உள்ளே நுழைந்ததுமே, 'உன் வீட்டின் அருகே என்ன சினிமா தியேட்டர் இருக்கிறது?' என்று கேட்டார் ஓர் அதிகாரி. 'சரஸ்வதி, லக்ஷ்மி என்ற இரு தியேட்டர்கள்' என்றேன். 'பரவாயில்லையே! ஒரு படம் தவறாமல் பார்க்கலாமே' என்றார் சிறியவர். 'நான் அடிக்கடி படம் பார்ப்பது கிடையாது சார்; எப்போதாவது ஒரு தடவை பார்ப்பேன்' என்றேன். பிறகு ஒருவருக்குப் பின் ஒருவராகச் சில சினிமா நடிகர்களின் பெயர்களைச் சொல்லி 'இவர்களைத் தெரியுமா?' என்று கேட்டார்கள். நான் மூன்று நடிக, நடிகையரைக் குறிப்பிட்டுவிட்டு 'இவர்களைத் தவிர்த்து, எவரையும் தெரியாது' என்று ஒரு போடு போட்டு விட்டேன். இவ்வளவும் கேட்டுவிட்டுக் கடைசியில் ''தெரியும்' என்பதற்கு எதிர்ப்பதம் என்ன?'' என்ற கேள்வியையும் கேட்டனர். 'தெரியாது' என்று பதில் சொன்னேன் நான். 'என்னய்யா கேட்பதற்கெல்லாம் தெரியாது என்கிறாய்? இதற்குக் கூடவா பதில் சொல்லத் தெரியாது?' என்றார் சிறியவர். 'தெரியும் என்பதற்கு எதிர்ப் பதம் தெரியாது என்பதுதானே' என்றேன். பிறகு இருவரும் ஏதோ குசுகுசுவென்று பேசி விட்டு, 'சரி நீ போகலாம்' என்று அனுப்பி விட்டார்கள்.'' இவ்வளவையும் ஒரே மூச்சில் சொல்லி விட்டான் ராஜு. அதுவரை 'ஆ'வென்று வாயைப் பிளந்து கொண்டு கேட்டு வந்த நான், அவன் சொல்லி முடித்த பிறகு தான் வாயை மூடினேன். எனது ஆச்சரியத்துக்குக் காரணம், ஒன்று, கல்வி பயில வந்தவனிடம்



முதல் பரிசு தவிர பிரசுரமான கட்டுரைகள் ஒவ்வொன்றுக்கும் பதினைந்து ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. —ஆசிரியர்

சினிமாவைப் பற்றிக் கேட்டார்களே என்பது. மற்றொன்று, சினிமாப் படங்களை ஒன்று தவறாமல் பார்த்து, நடிகர்களின் பெயர்களை ஒன்று விடாமல் மனப்பாடம் செய்து வைத்திருக்கும் ராஜு ஏன் இப்படிப் பதில்சொல்லியிருக்கிறான் என்பதுதான்.

பரவாயில்லை. அவன் சமயோசிதமாய்த்தான் பதில் சொல்லியிருக்கிறான். அவன் சொன்ன பதிலிலிருந்து, "பையனுக்கு சினிமா நாட்டம் அவ்வளவாய் இல்லாதிருப்பதால் படிப்பில் அக்கறை இருக்கும்" என்று நினைத்து செலக்ஷன் கொடுத்தாலும் கொடுக்கலாம் என்று எண்ணினேன்.

"சரி, நீ ஏன் அந்த மூன்று நடிக, நடிகையரைப் பற்றி மட்டும் தெரியும் என்று சொன்னாய்?" என்றேன் நான். "என்ன மாமா, இந்தக் காலத்தில் பிரபல சினிமா நட்சத்திரங்களையே தெரியாது என்று சொன்னால் யார்தான் நம்புவார்கள்? அப்படித் தெரியாது என்று சொல்லுபவனை 'உலக அறிவில்லாதவன்' என்றுதான் நினைப்பார்கள். மேலும் சினிமாவைப் பற்றிக் கேட்பதற்கு சரியான பதில் சொன்னாலும் தவறாக நினைப்பார்களோ என்ற காரணத்தினால் 'தெரியாது' என்று பதில் சொல்கிறேன் என்பதும் அவர்களுக்கு வெளிப்படையாகத் தெரிந்துவிடுமல்லவா?" என்றான் ராஜு.

சில நாட்களுக்குப் பிறகு நான் எண்ணியது போல் அவனுக்கு செலக்ஷன் கார்டு வந்தது. இண்டர்வியூ அதிகாரிகள் முழுக்க முழுக்க அவன் விஷயத்தில் ஏமாந்திருக்கிறார்கள் என்பதைப் பூரணமாய் அறிந்து கொண்டேன்.

சென்னை-1 சி. எம். நாஸ்

நான் ஒரு பிரைவேட் பாலிடெக்னிக்கில் உதவி விரிவுரையாளராக (அஸிஸ்டெண்ட் லெக்சரர்) பணியாற்றுபவன். எனது தந்தை ரயில்வேயிலிருந்து ரிடையராகி விட்டபடியாலும் வீட்டில் நான் மூத்தவனுதலாலும், எனது தம்பியைப் படிக்க வைக்கும் பொறுப்பை தகப்பனார் என் பொறுப்பில் விட்டு விட்டார். எனது தம்பியும் ஒருவாறாகத் தன்னுடைய எஸ். எஸ். எல். சி. படிப்பை முடித்தான். அவன் வகுப்பில் சாதாரணப் பையன்; ஆதலால் 600-க்கு 269 மார்க்குகள் எடுத்துப் பரீட்சை தேறி விட்டான்.

அவனை நான் வேலை செய்யும் பாலிடெக்னிக்கிலேயே சேர்த்து விடலாமென்று முயற்சி செய்தேன். ஒரு நடுத்தரக் குடும்பத்தினருக்கு இதைவிட வேறுவழி ஏது? ஆகவே ஒருவழியாக எனது பாலிடெக்னிக்கிலேயே சீட்டுக்கு அப்ளை செய்தேன். எந்த எண்ணத்துடன் என்றால், கட்டாயம் நான் பாலிடெக்னிக்கிலேயே வேலை செய்வதால் எனது தம்பிக்குச் சலுகை தருவார்கள் என்றுதான். ஆனால்பின்பு தான் நான் உண்மையை உணரலானேன். எனது பிரின்ஸிபாலைச் சந்தித்து விஷயத்தைக் கூறினேன். 'ஆஹா! அதற்கென்ன கவலைக் கிடைக்கும்!' என்று கூறினார். பின்பு அவர், "நீ எதற்கும் நமக்கு இருக்கும் சில 'டிரஸ்டி'களைப் போய்ப் பார்ப்பது நல்லது" என்று கூறினார்.

இந்தப் பாலிடெக்னிக்குக்கு ஒன்பது டிரஸ்டிகள். நானும் பிரம்மப் பிரயத்தனப்பட்டு டிரஸ்டிகள் விலாசத்தை எனது டைரியில் குறித்துக் கொண்டு, நவக்கிரகப் பிரதக்ஷிணம் செய்ய முற்பட்டேன்!


ஒரு டிரஸ்டி மயிலாப்பூர், வேறு ஒருவர் தண்டையார்பேட்டை, இவ்வாறாகஎட்டுத் திசைகளிலும் சிதறியிருந்தனர். இவர்களை யெல்லாம் சந்திக்கத் தினமும் ஞாயிறன்று எட்டுத் திக்கும் சுற்றியதில் கண்ட பலன்? வீண் அலைச்சல்; பணச் செலவு; கண்களில் கோடைக்கட்டி ஏற்பட்டு டாக்டருக்கும் பணம் அழுதது!

ஒரு டிரஸ்டியைச் சந்தித்ததில் தமக்கு யாதொரு அதிகாரமும் இல்லை என்றார். மற்றவர் வெறும் பொழுது போக்குக்காகக் குழந்தைகள் டைரியில் குறித்துக் கொண்டார். மற்றும் சிலர் அனுதாபமாகப் பார்த்தனர். வேறு சிலர் வீட்டில் இருந்து கொண்டே இல்லாதவர் போலவும் பாவ வேடம் தரித்தனர். ஒருவாறு இடம் தேடும் படலத்தை முடித்தேன்.

என் தம்பிக்கு 'இண்டர்வ்யூ' வந்தது. அவனைக் கேட்டதற்குச் சரியாகத் தான் பதில் அளித்ததாகக் கூறினான். ஆனால் 'இண்டர்வ்யூ' முடிந்த பின் வந்த லிஸ்ட் தான் என்னைத் தலை கிறுகிறுக்க வைத்தது. ஏனெனில் என் தம்பியின் பெயர் அதில் காணப்படவில்லை. இரண்டாவது லிஸ்டில் வரலாம் என்ற எண்ணத்தில் பொறுத்திருந்தேன். ஏமாற்றம்தான் என்னை மேலும் எதிர்கொண்டது.

பின்பு, என் தம்பிக்கு ஏன் செலக்ஷன் ஆகவில்லை என்று கேட்டதற்குப் பிறகுதான் பின் கண்ட தகவலைப் பிரின்ஸிபால் வெளியிட்டார். என் தம்பி மார்க்கு குறைவாக வாங்கியிருக்கிறானாம். 'இண்டர்வ்யூ'வில் சரியாகப் பதில் சொல்லவில்லையாம். இதை நான் யார் குற்றமாக ஏற்பது? என் தம்பிக்காகச் சிபாரிசு செய்கிறேன் என்று என்னை ஏமாற்றியவர்கள் குற்றம் என்பதா? சிபாரிசுகள் தேடியது குற்றம் எனினும், என் தம்பியைவிட மிகக் குறைவாக மார்க்கு வாங்கியவர்கள் இதே இன்ஸ்டிட்யூட்டில் சேர்க்கப்பட்டிருக்கிறார்களே, அதற்கு யார் பதில் சொல்வது? இவ்வாறாகப் பாலிடெக்னிக்கில் வேலை செய்யும் ஆசிரியரின் சொந்தத் தம்பிக்கே இந்த நிலை யென்றால், மற்றச் சாதாரண நடுத்தர மாணவர்கள் நிலைமை என்ன?

நா. பாலசுப்பிரமணியம்
சென்னை—23.





வீடும் உறவும்

வையவன்

நிசப்தமாக வேறின்றி...

திடீரென்று உற்சாகம் கொண்டு காற்றே யில்லாத அகால வேளையில் அந்த அரசமரத்துக் கல் மேடையில் உயிர் ததும்பும் இரண்டு விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்தாற் போல் ஜீவ ஒளி நிறைந்த பௌர்ணமி நிலவின் அமிர்த கிரணங்களை அனுபவித்துக் கொண்டு அமர்ந்திருந்த அந்த இரு நண்பர்கள் முகத்திலும் கவரி வீசுவது போல் காற்று வீசியது. தெருக் கோடியில் நாய் ஒன்று ஊளை இட்டுப் புலம்பியது. காற்றின் சுகத்தில் சிலிர்த்துச் சப்திப்பது போல், அந்தப் பிரம்மாண்டமான அரச மரம் சலசலவென்றுச் சிறு சிலுத்தது. மார்பின் மீது கைகளைக் கட்டியவாறு ராஜரிஷி ஒருவர் உச்சிக் குன்றின் மீது நின்று வானைப் பார்ப்பது போல, நெடுங்கல் மலையின் அந்த ஒற்றைக் கல் சந்திர ஒளியால் சோபை கொண்டு நீலப் பின்னணியில் நிமிர்ந்து கிடந்தது.

''அந்த மலையைப் பார்க்கும் போதெல்லாம் சுந்தரேசா, என் தாத்தாவின் நினைவு வந்து நான் உணர்ச்சி வசப்பட்டுப் போகிறேன்!'' என்று தழுதழுத்த குரலில் கூறினான் பஞ்சாட்சரம். மரத்தின் மீது சாய்ந்தவாறு கண்களை மூடிக் கொண்டிருந்த சுந்தரேசன், பஞ்சாட்சரத்தின் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு அவனை விழித்துப் பார்த்தான். பஞ்சாட்சரத்தின் முகம் பூரித்திருந்தது. அதற்குப் பதில் சொல்லா விட்டாலும் பஞ்சாட்சரம் மேலே பேசிக் கொண்டு போவான் என்பது சுந்தரேசனுக்கு நன்கு தெரியும்.

''சாயங்கால வேளைகளில் தாத்தாவின் பருமனான விரல்களைப் பிடித்தவாறு அவரது இடுப்பளவு உயரம் கூட இல்லாத நான் பொடி நடை போட்டு அந்த மலையடிவாரம் வரை நடந்து சென்ற நாட்கள் நினைவுக்கு வருகின்றன. சளசள வென்று நான் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் அளித்தவாறு அவர் பொறுமையோடு பேசுவார். அந்தப் பேச்சையும், நெடுங்கல் மலையின் அதோ அந்த ஒற்றைக் கல்லையும் ஒன்றாகக் கவனித்துக் கொண்டே நான் நடந்திருக்கிறேன்.''

பஞ்சாட்சரம் திடீரென்று நிறுத்தினான்.

''சுந்தரேசா! நீயும் நானும் இது போல் உட்கார்ந்து பேசி எத்தனையோ நாட்களாகின்றன. இன்று முழுக்க முழுக்கத் தாத்தாவின் நினைவு வந்து நெஞ்சை மேகச் சூழ் போல் கனக்கிறது. நீ வீட்டில் சொல்லி விட்டு வந்திருக்கிறாயா? உன்னோடு நான் நிறையப் பேச வேண்டும். பேசிப் பேசியே விடியப் போகும் இந்த நீண்ட இரவைக் கழிக்கப் போகிறேன்''

''நீ பேசு பஞ்சு. வீட்டில் நீ வந்திருப்பது தெரியும். அநேகமாக நான் வரமாட்டேன் என்று தீர்மானித்து விட்டிருப்பார்கள்'' என்றான் சுந்தரேசன். அந்தப் பதில் வந்ததும் பஞ்சாட்சரம் தொடர் அறுந்த சங்கிலியைப் போல் தாத்தாவின் புனித ஞாபகம் சிந்தியிருப்பதைக் கோவையாக்க மௌனமானான்.

பக்கத்தில் எங்கோ கோட்டான் நுழைந்து தூரத்தி யடித்ததால், 'காழ் காழ்' என்று இளங் குழந்தைகள் அழுவது போல் ஒரு காகக் கூட்டம் கூச்சலிட்டவாறு புகலிடமின்றி அலையலாயிற்று. மகா மௌனம் குடியிருந்த அந்தக் கம்பீர இரவில் அந்த ஒலிகளும் ஆற்று மணலில் சர்த்துப் போகும் மழைத் துளிகள் போல் மறைந்தன. கம்மிய குரலில் பஞ்சாட்சரத்தின் இதயத்தின் அடிவாரத்திலிருந்து எழுந்து வரும் சத்தியமான வார்த்தைகள் வெளிவரத் தொடங்கின.

''வாழ்க்கைமிகவும் அழகானது சுந்தரேசா! பாசமும் அன்பும் இருக்கின்ற வரை என்ன வறுமை வந்தாலும், எந்த இழிநிலை நேர்ந்தாலும் அதன் சௌந்தரியம் கெடுவதே இல்லை; எந்த அனாதையும், எந்த ரோகியும் அதைச் சிறிதாவது அனுபவியாது இறப்பதே யில்லை; என் நினைவுகள் விழிக்காத நாளிலேயே நான் தாயை இழந்து விட்டேன். அப்பாவுக்கு அது வாலிப வயது. உலக இன்பங்களை அனுபவிக்க வேண்டிய பருவம். அவர் இரண்டாம் திருமணம் செய்து கொண்டு என்னைத் தமது தந்தையிடமே விட்டு விட்டு, வேறெங்கோ வெளியூருக்குத் தமது இல்லறத்துக்கு எந்த இன்னலும் சம்பவிக்காத வெகு தூரத்துக்குப் போய் விட்டார்.

எனக்கு வயது வந்த பின்னும்; அவர் முகம் கோணாமல் என்னை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்று தெரிந்துகொண்டேன். தாத்தாவுக்குத் திடகாத்திரமான உடம்பு. அவரும் மனைவியைத் தமது இளமையின் பிற்பகுதியில் இழந்தவர். ஏனோ அவர் மறுபடியும் திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை. சுந்தரேசன்! ஒரு தலைமுறைக்குள் குணங்களும், தன்மையும் எவ்வளவு மாறுபடுகின்றன, பார்த்தாயா?'' என்று நிறுத்தினான் பஞ்சாட்சரம்.

''பஞ்சு, நீ உன் தந்தையைப் பற்றி வருத்தப்படுவது நியாயமல்ல. நீ அந்த நிலையில் என்ன செய்திருப்பாய்?''

"சுந்தரேசா! நான் அவரை நோகவில்லை. நம் இளையதாரத்துக் குழந்தைகளோடும், அந்தக் குடும்பத்தின் சுகதுக்கங்களோடும் அவர் பூரணமாய் லயித்து, தமக்கு இன்னொரு பிள்ளை இருக்கிறான் என்று அடியோடு அவர் மறந்து போன நாட்களில் எல்லாம் கூட நான் அவரை நொந்து கொண்டதில்லை. நம் வாழ்நாளில் என்னென்ன நன்மை தீமைகளை அறிந்து அனுபவித்திருந்தாரோ அதை யெல்லாம் கொண்டு என்னை ஆளாக்கியிருந்தார் என் தாத்தா. நான் பள்ளிகளில் நல்லவன் என்றும் கெட்டிக்காரன் என்றும் புகழப்பட்டதற்கு எந்த அம்சங்கள் காரணமோ, அவையெல்லாம் அவர் வளர்த்தவை.

"ஆம், சுந்தரேசா! அந்த வயதான காலத்தில் தம்மைப் பராமரிக்க ஓர் ஆள் தேவைப்பட வேண்டிய நேரத்தில் என்னை வளர்த்ததோடு மட்டுமல்லாமல், என் சுபாவங்களையெல்லாம் அவர்தான் வெகு கவனத்தோடு வளர்த்தார். தந்தை, தாய், சகோதரர்கள், சகோதரிகள், உறவு, சுற்றம் எல்லாம் அவர்தான். என் உலகமே தாத்தாவின் உலகம் தான். தமது அகன்ற மார்பில் பால் மணம் மாறாத பச்சிளம் குழந்தையாக நான் இருந்த நாட்களில் என்னைத் தூக்கிக் கொண்டு அவர் மேஸ்திரி வேலைக்குப் போவார்."



பஞ்சாட்சரத்தின் உணர்ச்சி வெள்ளம் மகுடிக்குக் கட்டுப்பட்டிருந்த சுந்தரேசன், "மேஸ்திரி வேலைக்கா? அவ் வயதான காலத்திலா?" என்று மெள்ளக் கேட்டான்.

"ஆமாம், அப்பா! அப்பாவிடமிருந்து அவருக்கு ஒரு பைசா வருவதில்லை. ஒரே வயிறு என்றால் இந்த வேலைக்கு அவர் மறுபடியும் போய் இருக்க மாட்டார். இந்தக் கிராமத்தில் பாதி வீடுகள் அவர் கட்டியவை தான். அவர் உழைக்கவென்றே பிறந்தவர் சுந்தரேசா! அதிகாலையில் என்னை மார்பின்மீது போட்டுக்கொண்டு அவர் வேலைக்குப் போவார். கட்டப்படுகிற வீட்டுக்கு எதிரிலேயோ, அருகிலேயோ ஒரு வீட்டில் பெண்களிடத்தில் என்னை விட்டு விட்டு வேலை செய்வார். சுப்பராய மேஸ்திரியின் பேரன் என்று எல்லோரும் என்னைத் தூக்கி வைத்துக் கொஞ்சுவார்கள். எனக்குப் பசியெடுக்கும் போது எந்தெந்தத் தாயோ எனக்குப் பாலூட்டியிருக்கிறாள். வேலை நடந்து கொண்டேயிருக்கும்போது, ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை வந்து என்னைப் பார்த்து விட்டுப் போவார். கஞ்சன் ஒருவன், தான் கஷ்டப்பட்டுச் சேர்த்து வைத்த பணத்தைப் பெட்டியைத் திறந்து திறந்து பார்த்துக் கொள்ளுவானுமே அது போலத்தான்!"

பஞ்சாட்சரம் வானில் கரிய புகையால் கையெழுத்திட்டவாறு இரைந்து சென்ற ரயிலைக் கண்டு பேசுவதை நிறுத்தினான். பெரிய யாத்திரிகளைப் போல் தூரத்தில் தெரிந்த ரயில் கேட்டைக் கடந்து, வரிசையான கற்றாழைப் புதர்களைத் தாண்டி, அது தொலைவில் மறைந்தது. கார்டு பெட்டியின் சிவப்பு வெளிச்சம் மங்கலாயிற்று.

"அவர் அடிக்கடி என்னைப் பார்க்க வருவதை வைத்து, 'என்னங்க மேஸ்திரி, உங்க பேரப் பிள்ளையைப் பருந்து தூக்கிக்கிட்டு போயிடுமா, என்ன? நிமிஷத்துக்கு ஒரு தரம் வந்து பார்க்கிறீங்களே' என்பார்களாம்.

'அதுக்கில்லேம்மா, இவனை விட்டு அந்த நிமிஷம் என்னாலே வேலை செய்ய முடியல்லே. நீங்களெல்லாம் இருக்கும் போது அவனுக்கு என்ன?' என்று கூறிச் சமாளிப்பாராம் தாத்தா. அவருக்குக் கிராமத்திலே நல்ல செல்வாக்கு இருந்தது.

'பஞ்சாட்சரம்! இந்த உடம்பு உன் தாத்தாவினால் மட்டும் வளர்ந்தது என்று நினைக்கடாதே. நீ குழந்தையாயிருக்கிறப்ப இந்த ஊரே உன்னை வளர்த்தது. நீ பெரியவனாகி எங்கே போய், எவ்வளவு உயர்ந்த ஸ்திதியில் இருந்தாலும் இந்த ஊர் மகராசிகளை நீ மறந்துவிடாதே' என்று எனக்கு அவர் அடிக்கடி சொல்வார். நான் சற்று வளர்ந்து பெரியவனானதும் புத்தி தெரியாத பருவத்தில் இவருக்குக் கொடுத்த தொந்தரவுகளை நினைத்தால் வெட்கமாக இருக்கிறது.

எந்த நேரத்திலும் அவர் என்னைக் கோபித்துக் கொண்டதே யில்லை. நான் மகா பிடிவாதக்காரனாக — அந்த நாளில் — இருந்தேன். வேலையெல்லாம் முடிந்து சாப்பிட்டானதும், வீட்டுத் திண்ணையில் இது போன்ற நிலா ஒளியில் உட்கார்ந்து என்னை முதுகு தேய்க்கச் சொல்லுவார். அவருடைய பெரிய முதுகை இன்னும் என் கைகள் உணர்கின்றன. அப்போது மெதுவாக, 'தம்பி, பஞ்சாட்சரம்! இவ்வளவு பிடிவாதக்காரனாக நீ இருக்கக் கூடாது. நான் என்ன சொல்கிறேனோ அதன் பிரகாரம் நீ நடக்கணும்' என்று மனசில் பதிகிற மாதிரி மெல்லிய குரலில் கூறுவார். நான் 'ஊம்' கொட்டிக் கொண்டே தேய்ப்பதை விட்டு விட்டுத் தூங்கி விடுவேன்.

சாயங்கால நேரத்தில் அவரோடு இருப்பது எனக்கு மிகவும் பிடிக்கும். ஊரோரத்தில் இருக்கும் அந்தப் பெரிய மாகாளி கோவிலுக்கு என்னை அழைத்துச் செல்வார். சிறிது நேரம் அந்தக் கோவில் வேப்ப மரத்தடியில் உட்

கார்ந்து கதை சொல்லுவார். பிறகு கையைப் பிடித்து அழைத்துக் கொண்டே மலையடிவாரம் வரையில் அழைத்துச் செல்வார். என் சந்தேகங்கள், கேள்விகள், அட்டைத்தனங்கள் எல்லாவற்றுக்கும் பொறுமையோடும் சிரித்தபடியும் பதில்கள் வரும்.

முதல் தடவையாக அவர் எனக்கு நீச்சல் கற்றுக் கொடுத்ததும், சைக்கிள் கற்றுக் கொடுத்ததும் பனிச்சென்று ஈரம் அழியாமல் நினைவிருக்கின்றன. கிணற்றில் அவர் குதித்தார். 'குதி பஞ்சாட்சரம்' என்றார். பேசாமல் குதித்தேன். இரண்டு நாட்கள் சைக்கிளில் ஏற்றி விட்டுத் தள்ளினார். மூன்றும் நாள் பேசாமல் விட்டு விட்டார். விழுந்து அடிபட்டு நானே சைக்கிள் கற்றுக் கொண்டேன்.

சின்னப் பையனாக நான் பட்டம் பறக்க விடவேண்டுமென்று ஆசைப்பட்ட போது, அந்த நெடுங் கல் மலை உச்சிக்கு அழைத்துச் சென்று, அந்த வயதான கிழவர், வைராரால் மிகவும் மதித்துப் போற்றப்படும் கப்பராய மேஸ்திரி பட்டம் செய்து எடுத்துக் கொண்டு வந்து எனக்குப் பட்டம் விட்டுக் காட்டினார். மாஞ்சா போடுவது, சூத்திரம் வைப்பது, வால் கட்டுவது என்று என் சம வயது நண்பன் ஒருவன் செய்து காட்டுவது போல் விளக்கிக் காட்டினார்.

எனக்கு அவர் சொன்ன கடைசிப் புத்தி மதி இதுதான். உனக்கு நினைவிருக்கிறதா, நீயும் நானும் எஸ். எஸ். எல். ஸி. எழுதிவிட்டு அப்போது ரிஸல்ட் பார்க்க ஆங்கனுக்குச் சைக்கிள் எடுத்துக் கொண்டு போயிருந்தோம்'' என்று அவனுக்கு நினைவூட்டினான் பஞ்சாட்சரம்.

''ஆம், நினைவிருக்கிறது'' என்று கந்தரேசன் மெதுவாகப் பதில் கூறினான்.

''அப்போது சிவானந்தக் கவுண்டர் வீடு கட்டிக் கொண்டிருந்தார். வழக்கம் போல் தாத்தாதான் மேஸ்திரி. அந்த வேலையில் ஈடுபட்டிருந்த போது, என்னிடம் 'தம்பீ, இந்த வீட்டிலேதான் என் சாமர்த்தியத்தை வெல்லாம் காட்டிக் கட்டப் போகிறேன். என் பிறப்பிலேயே இது மாதிரி வீட்டை இனிமேல் கட்ட முடியாத அளவு தான் இதைக் கட்டி முடிக்கப் போறேன். சிவானந்தக் கவுண்டர் நல்ல மனுஷன். எவ்வளவு பணம் செலவானாலும் உன் இஷ்டப் பிரகாரம் நல்லபடியா கட்டு கப்பராயான்னு என்னை நம்பி விட்டிட்டிருக்காரு' என்று சொன்னார். அந்த வீடு கட்டி முடிந்ததும் அதைப் பார்க்க வேண்டுமென்று நானும் மிகுந்த ஆவலோடு இருந்தேன். நம்ம கிராமத்திலேயே அதுதான் இரட்டை மாடி வீடு, கட்டடம் முடிந்து பூச்சு வேலை மட்டும் பாக்கியிருந்தது. நாம் ரிஸல்ட் பார்த்து விட்டுச் சைக்கிளிலிருந்து இறங்கியதும், நீ பாஸானதைச் சொல்ல உன் வீட்டுக்கு ஓடினாய். நானும் தாத்தாவிடம் சொல்ல அவர் வேலை செய்து கொண்டிருந்த இடத்துக்கு ஓடினேன். போன இடத்தில் ஒரே கூட்டம் கூடியிருந்தது.

'மேஸ்திரி பேரன் வர்றான். வழி விடுப்பா, வழி விடு' என்று யாரோ கூறினார்கள். அந்தக் குரலே எனக்குத் திக்கென்றது. நடக்



கக்கூடாத ஏதோ ஓர் அசம்பாவிதத்தின் வரவேற்புப் போல் எனக்கு அது பட்டது. கூட்டத்தைக் கடந்து நான் உள்ளே நுழைந்தேன்.

தாத்தா மண்டையிலிருந்து ரத்தம் வழிய நடு வாசலில் விழுந்து கிடந்தார். திடீரென்று எனக்குக் கண் இருண்டு, நெஞ்சு இருண்டு, உலகமே இருண்டது. என் வாழ்க்கையின் ஒளி கண் எதிரில் அணைந்தது. நான் மயக்க மடைந்து விட்டேன். மீண்டும் நான் விழித்த போது, தாத்தாவை எங்கள் வீட்டில் கொண்டு வந்து கிடத்தி யிருந்தார்கள்.

'இது எப்படி நடந்தது?' என்று கேட்கக் கூட எனக்குப் பிரக்ஞையில்லை. அப்பா வந்தார். அவர்தான் கேட்டார்.

இது வரை நான் பார்த்திராத சித்தியும், அவள் குழந்தைகளும் வந்தனர்.

புது வீட்டின் இரண்டாவது மாடியிலிருந்து குனிந்து ஒரு வெடிப்பைச் சரி பார்த்துக் கொண்டிருந்த தாத்தா கவிழ்ந்து வாசலில் விழுந்து விட்டாராம். நான் மயங்கி விழுந்த போது அவர் உயிர் போய் விட்டது. சிவானந்தக் கவுண்டரிடம் என்னை அப்பாவிடம் ஒப்படைத்து விடும்படி கூறியிருக்கிறார். கந்தரேசா! எனக்கு அறிவையும் உணர்வையும் ஊட்டிய அவருக்கு என்னைத் தோள் மேலும், மார் மேலும் போட்டுக்கொண்டு, வயதான காலத்தில் சோறூட்டி என்னைக் குளிப்பாட்டி, தலைவாரிப் பள்ளிக்கு அனுப்பி, புத்தி சொல்லி, தந்தைக்கும் தாய்க்கும் மேலாய்ப் பாதுகாத்த அந்தக் தெய்வத்துக்கு என்னால் ஒரு பயனுமில்லை. கந்தரேசா! உன்னிடம் சுருக்கமாகச் சொன்ன அந்தப் பெரு வாழ்வின் கதை ஒரு நொடியில் முடிந்து விட்டது.

ஜனித்தவர்கள் எல்லாம் மரிக்கிறார்கள் கந்தரேசா! ஆனால் தாத்தா அந்த இரட்டை மாடி வீட்டில் கிராமத்தின் பாதி வீடுகளில் இன்னும் வாழ்கிறார் என்றே நான் நினைக்கிறேன். அப்பாவின் இஷ்டப்படி நான் சென்னையில் எந்த உயர்ந்த உத்தியோகத்துக்கும் போகாமல், கந்தப்பச் செட்டித் தெருவில் ஒரு கமிஷன் மண்டியில் கணக்கெழுதப் போய்ச் சேர்ந்தேன். அப்பா தன் கடமை முடிந்துவிட்டதாக எண்ணி மீண்டும் என் சித்தியோடும், பிள்ளைகளோடும் ஊருக்குப் போய்விட்டார். தாத்தா கற்றுக் கொண்டிருந்த பொறுமையும் சாதுரியமும் என்னை அந்த மண்டி வேலையில் பொருந்தச் செய்தன. ஒரு தடவை மண்டி வேலையாகத் திருப்பத்

ஊருக்கு வந்தேன். வரும் போது நம் ஊருக்கு வந்து உன்னைப் பார்த்து விட்டுச் சென்றேனே. நினைவிருக்கிறதா?" என்று கேட்டான் பஞ்சாட்சரம்.

"நான்கு வருஷங்களுக்கு முந்தித் தானே பஞ்சாட்சரம்?" என்றான் சுந்தரேசன்.

"ஆம். அப்போதுதான். ஊருக்கு வந்து எல்லோரையும் பார்த்துப் பேசி விட்டு வீதி வழியாக வந்தேன். இரவு நேரம். சிவானந்தக் கவுண்டரின் புது வீடு தெரிந்தது. கம்பீரமாகப் பழங்காலத்து அரண்மனை போல, நாகரிகத் தோடும், குறைசொல்ல முடியாத அந்தப் பிரும்மாண்டமான வீட்டின் முன் நான் திகைத்து நின்றேன். அது என் தாத்தா கட்டிய வீடு. நெஞ்சில் பலத்த ஏக்கம் பிடிக்க, கண்கள் தழுதழுக்க எவ்வளவு நேரம் நின்றேனோ, எனக்கே தெரியாது.

'யாரது?' என்று உள்ளேயிருந்து யாரோ கேட்டார்கள்.

உணர்ச்சி வசப்பட்டிருந்த நான் பதில் சொல்லவில்லை. கேட்டவர் சிவானந்தக் கவுண்டர்தான். வெளியே வந்து என்னைப் பார்த்து, 'அட, கப்பராய மேஸ்திரி பேரனா? ஏம்பா, வெளியிலேயே நின்னுட்டே? உள்ளே வா!' என்று கூப்பிட்டார்.

எனக்கு இதயத்தைப் பிழிந்தது. என் தாத்தா இறந்த வீட்டில், அவர் கட்டிய மாபெரும் வீட்டில், உரிமையற்ற அன்னியனாய் நுழைய என்னால் முடியவில்லை. சிவானந்தக் கவுண்டர் வலுக்கட்டாயப் படுத்தி என்னை உள்ளே அழைத்துச் சென்றார். எடுத்து வைத்த ஒவ்வொரு காலடியிலும் சாரத்திலும், அட்டத்திலும், தாழ்வாரத்திலும், அறைகளிலும், என் தாத்தாவின் கை பட்டிருந்தது. அவர் வியர்வை விழ்ந்திருக்கது என்று நினைக்க நினைக்க நெஞ்சு தாத்தாவையே நேரில் பார்ப்பது போன்ற வேதனையையும் மகிழ்ச்சியையும் தந்தது. சிறிது நேரம் வீட்டுக்காரரோடு பேசிக் கொண்டிருந்து விட்டு வெளியே வந்தேன். அந்த வீடு என் தாத்தா 'வாழும்' வீடு. அவர் எப்படிப்பட்ட கட்டிட விற்பன்னராக இருந்தார் என்பதற்கும், அவர் எங்கே இறந்தார் என்பதற்கும் அற்புதமான சாஸனம் போல் விளங்கிய கடைசி ஞாபகம்.

பேச்சுவாக்கில் ஊர்க்கணக்கரிடம் சிவானந்தக் கவுண்டர் எவ்வளவு பணம் செலவழித்து அந்த வீட்டைக் கட்டினார் என்று விசாரித்தேன். எழுபத்தைந்தாயிரம் என்று சொன்னார். தொகை எவ்வளவு பெரியதாக இருந்ததோ, அதை விடப் பெரியதாக இருந்தது என் ஆசை.

நான் சென்னைக்குத் திரும்பினேன். என்னை மண்டி வியாபாரத்தில் நுழைத்ததற்காக— அப்பாவுக்கு மனத்துக்குள் நன்றி செலுத்தினேன். பெரும்பாலும் தினந்தோறும் தாத்தா என் கனவில் வருவார் சுந்தரேசா! ஒவ்வொரு நாளும் என் ஆசை அதனால் பலம் பெற்றது. கமிஷன் மண்டியில் என் திறமையையும், சாதுரியத்தையும் கண்டு என்னைத் தன் கூட்டாளியாகச் சேர்த்துக் கொள்ள விரும்பி என்னிடம் வந்தார் ஓர் ஆந்திர வியாபாரி. தற்செயலாகவே, வாழ்க்கையில் நாம் நம்ப முடியாதவை எல்லாம் நடக்கின்றன, சுந்தரேசா! அவர் என்னை நாடி வந்ததை நான் தாத்தாவின் ஆசிர்வாதம் என்று கருதியே தயங்காமல் அதற்கு ஒப்புக் கொண்டேன். புளியிலும் வெல்லத்திலும் அப்போது புது மண்டி வைத்த ஜோரில் எதிர்பாராதவிதமாக, ரேஸில் அடிப்பது போல் கொழுத்த லாபம் வந்தது. உன்னிடம் நான் எல்லாவற்றையும் மனம் திறந்து பேசுகிறேன் சுந்தரேசா! ஆந்திர வியாபாரி என்னை மிகவும் நம்பினார். அந்த லாபப் பங்கை மீண்டும் முதலீடாக வைத்து ஐம்பதுக்கைம்பது கூட்டாளி ஆனேன். நான்கு வருஷங்களாக என் உள்ளத்தில் தாத்தாவின் விளக்கு சுடர் விட்டுப் பிரகாசித்தது. என் சங்கல்பத்தை உறுதியாக்கிற்று. சிவானந்தக் கவுண்டர் தம் ஆறு பெண்களுக்கும் வரிசையாக ஏகப்பட்ட சீர்வரிசை செய்து கடனாளியாய் விட்டிருந்தார். இந்த விஷயத்தை ஊர்க்கணக்கர் எனக்குத் தபால் எழுதித் தெரிவித்தார். நான் உடனே சிவானந்தக் கவுண்டருக்குக் கடிதம் எழுதி வீட்டை எனக்கு விற்று விடுமாறு கோரினேன். முரட்டுத்தனமான, ஆத்திரம் நிறைந்த பதில் வந்தது."

இவ்வளவு நேரமாகச் சுதந்திரமாகவும், உணர்ச்சி வசப்பட்டுப் பேசி வந்த பஞ்சாட்சரம், குரல் மாறி, திட்டவட்டமாகத் தீர்மானித்த விஷயத்தைப் பேசும் கண்டிப்புடன் பேசலானான்.

"பலர் மூலமாக முயன்று பார்த்துத்தான் நான் அந்தக் கடிதத்தை எழுதினேன். என் தாத்தா அந்த வீட்டில் தான் செத்துப் போனார் என்றும் அவருடைய ஞாபகார்த்தமாக நான் அந்த வீட்டை வாங்க விரும்புவதாகவும் தகவல் சொல்லி அனுப்பினேன். 'அவங்க பாட்டன் கட்டிய வீடுன்னு பேரனுக்கு உட்டுடணுமா, வேறே எந்த இளிச்சவாயன் கிட்டேயாவது போயச் சொல்லு' என்று அவர் பதில் கூறி விட்டாராம். நான்கு வருஷங்களாக எதற்கு நான் பாடுபட்டேனோ, வெறும் மண்ணாசை இல்லாமல், அந்த மண்ணின் மேல் வாழ்ந்த ஞாபகங்களுக்கு ஆசைப்பட்டேனோ அதை அவ்வளவு சுலபத்தில் விட்டு விட எவ்வாறு ஒரு மனிதன் துணிவான்? நான் கடன்காரர்களைக் கலந்து அவரை நெருக்கச் செய்தேன். வழக்குப் போட உதவினேன். இதையெல்லாம் நான் தெரிவிக்கும் போது நீ என்னை ஒருவேளை மதிக்காமல் போகலாம் சுந்தரேசா! நான் அவருக்கு— மனைவி, குழந்தைகள் எல்லோரையும் இழந்து விட்டிருந்த அவருக்கு இனமாக ஒரு வீட்டை வாங்கித் தருவதாகவும் கூறினேன். அதற்கும் மனிதன் இணங்கா விட்டால் என்ன செய்வது? கோர்ட் தீர்ப்புக்கு அமீனா அந்த வீட்டை ஜப்தி செய்திருக்கிறார். நாளைக்கு ஏலம். இது உனக்குத் தெரியுமல்லவா?" என்றான் பஞ்சாட்சரம்.

"ஓ, தலையாரி தமுக்குப் போட்டு விட்டுப் போனான்" என்றான் சுந்தரேசன்.

"நாளைக்குத்தான் என் கனவும் என் தாத்தாவின் கனவும் பூரணமாகப் போகின்றன. அவருடைய அப்பா பெரியசாமி மேஸ்திரியைப் போல் நானும் ஒரு வீடு வாங்கப் போகிறேன். அதுவும் அவரே கட்டிய வீடு" என்று திருத்தினான் பஞ்சாட்சரம்.


அதன். நன்மை தீமைகளைப் பற்றியும், நியாயத்தைப் பற்றியும் ஒன்றும் அபிப்பிராயம் தெரிவியாது, சுந்தரேசன் மௌனமாக உட்கார்ந்திருந்தான். நிலவு நடு வானத்தி


நவீன முறையில்
மலச்சிக்கலைக்
குணப்படுத்துங்கள்
வாயில் துர்நாற்றம், பசியின்மை, சக்தியின்மை, கலக்கங்கள், கொப்புளங்கள், பருக்கள் போன்ற விரும்பத்தகாத அறிகுறிகளுடன் தோன்றும் மலச்சிக்கல், ஜீரணக் கோளாறுகளிலிருந்து நிவாரணமளிக்கிறது வாக்குலாக்ஸ். ஜீரணக் கோளாறினால் ரத்த அசுத்தி, பித்தம், ஈரல் உபாதை, மூட்டுவலிகள், சிறு நீரக உபாதைகள், தவிர மேலும் பல தொந்தரவுகள் ஏற்படலாம். தவறாமல் வாக்குலாக்ஸ் சாப்பிட்டால் ரத்தம் சுத்தமாவதுடன், இந்த வியாதிகளின் அறிகுறிகளும் அகலுகின்றன. நவீன முறையில் மலச்சிக்கலைக் குணப்படுத்துங்கள். இனிக்கும் மலமிளக்கி பேதி மாத்திரையான வாக்குலாக்ஸ் மூலம் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் ஆரோக்கியமுடன் வைத்திருங்கள். நல்ல ஆரோக்கியத்தைத் தருவது வாக்குலாக்ஸ். தவறாமல் வாக்குலாக்ஸ் சாப்பிட்டு, வாழ்வை அனுபவிப்பதே புத்திசாலித்தனம்.
"மிட்டாய்போல் சுவைத்துச் சாப்பிடுங்கள்"
இன்றே வாங்குங்கள்
VACULAX
RELIEVES CONSTIPATION
VACULAX
RELIEVES CONSTIPATION
VACULAX
RELIEVES CONSTIPATION
நீலமும், மஞ்சளும் கொண்ட சீலிடப்பட்ட பட்டையைப் பார்த்து வாங்குங்கள்.
வாக்குலாக்ஸ்
ட்ரேட் மார்க்
இனிக்கும் மலமிளக்கி-பேதி மருந்து
ஒரு நிக்கொலஸ் தயாரிப்பு. தரத்திற்கும் தூய்மைக்கும் நீங்கள் பெறும் உத்தரவாதம்.
TAM



பிஎன்பி பிரயாணி செக்குகள்

* பிரயாணத்தின்போது பயமில்லாமல் தொகை எடுத்துச்செல்லும் முறை.
* ஏமது 425 ஆபீஸ்களிலோ இந்தியா முழுவதிலுமுள்ள ஏராளமான ஏஜன்ஸிகளிலோ எங்கும் எளிதில் ரொக்கமாக்கலாம்.
* பாங்கின் எல்லா முக்கியமான கிளைகளிலும் இந்த செக்குகள் கிடைக்கும்.
* செக்குகள் ரூ. 100, ரூ. 50, ரூ. 25 ஆகிய சௌகரியமான மதிப்புகளில் கிடைக்கும்.



மூட்டுவலி, இல்வாதம், சுளுக்குகள் மற்றும் கடும் வேலையினால் ஏற்படும் நோவுகளுக்குவாயி னும் ஸ்லோன்ஸ் லினிமென்ட் உபயோகியுங்கள். உடனடி நிவாரணமளிப்பது ஸ்லோன்ஸ்

வார்னர்-லாம்பர்ட்
பார்மஸூடிகல் கம்பெனி
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏவில் இணைக்கப்பெற்றது.)

TAM.

லிருந்து இறே சரிந்து விட்டிருந்தது. மெல்லிய குளிர் காற்று மேற்குப் புறத்திலிருந்து வீச ஆரம்பித்திருந்தது.

"ரொம்ப நேரமாகி விட்டது சுந்தரம், போகலாம்" என்று எழுந்தான் பஞ்சாட்சரம். தோளிலிருந்த மப்ளரை எடுத்துத் தலைக்குக் கட்டியவாறே சுந்தரேசன் எழுந்தான்.

"நாளைக்குக் காலையில் எத்தனைக்கு நீ வர வேண்டும், சுந்தரேசா. உன்னைக் கூப்பிட்டுக் கொண்டுதான் நான் போகப் போகிறேன்" என்றான் பஞ்சாட்சரம்.

"செய், பஞ்சு. நான் காலையில் எழுந்து குளித்து விட்டுத் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறேன்" என்று கூறிக் கொண்டே தெற்கே பிரிந்த செங்குந்தர் தெரு மூலைக்கு வந்து நின்றான் சுந்தரேசன்.

"சரி, வரட்டுமா?" என்று விடைபெற்றுக் கொண்டு பஞ்சாட்சரம் தன் வீட்டை நோக்கி நடக்கலானான். போகிற வழியில்தான் சிவானந்தக் கவுண்டர் வீடு இருந்தது. வீட்டைப் பூட்டி 'சீல்' வைத்தும் அதை விட்டுப் போகாமல் திண்ணையின் மீதே அவர் படுத்துக் கொண்டிருந்தார். என்றைக்கு சீல் வைத்தார்களோ, அன்றிலிருந்தே அவ்வாறு தான் அவர் இருப்பதாகக் கேள்விப் பட்டான். அதையும் தடுக்கப் போவது நியாயமல்ல என்று கருதிப் பஞ்சாட்சரம் விட்டு விட்டான். அவர் கண்ணெதிரில் அந்தப் பக்கம் போக அவனுக்குப் பிடிக்கவில்லை. அகாலம், தூங்கி விட்டிருப்பார் என்ற நம்பிக்கையில் தான் அந்தப் பக்கமாகச் சென்றான்.

அந்த விசாலமான திண்ணையில் பேச்சுக் குரல் கேட்டது. வந்தது வந்து விட்டோம் என்று தலை குனிந்தவாறு செல்லத் தொடங்கினான். வீட்டைத் தாண்டும் போது பேச்சு நின்றது. இரண்டடி எடுத்து வைத்திருப்பான்.

"யாரு, பஞ்சாட்சர முதலியார்வாளா? ஐயா, கொஞ்சம் வர்றீங்களா?" என்று சிவானந்தக் கவுண்டரின் கம்பீரமான குரல் அவனை அழைத்தது. அந்த அழைப்பில் பஞ்சாட்சரம் எதிர்பார்த்தது போல், பகைமையோ, வெறுப்போ இல்லை. அவனுக்குத் தர்மசங்கடமாகப் போய் விட்டது. தட்டிக் கழித்துக் கொண்டு போக, அவன் சுபாவம் இடந்தரவில்லை. திரும்பிப் பார்த்தான். யாரோ ஒரு வயதான பெரியவர், கவுண்டரோடு உட்கார்ந்து கொண்டிருந்தார்.

"வாங்க ஐயா, ஏன் தயக்கப்படறீங்க? நாங்க என்ன பண்ணிடுவோம்?" என்று அந்தப் பெரியவரும் அழைத்தார்.

"நமஸ்காரம்" என்று கைகூப்பி வணங்கியவாறே வீட்டுப் படிகளின் மீது ஏறினான் பஞ்சாட்சரம்.

திண்ணையின் மேல் பெரிய கம்பளி விரிப்பு விரித்திருந்தது. பக்கத்தில் உட்கார்ந்திருந்த பெரியவர், திண்ணை மேல் சாத்தியிருந்த தடியை ஓரமாக ஒதுக்கியவாறு பஞ்சாட்சரத்துக்கு இடம் விட்டு நகர்ந்து உட்கார்ந்தார்.

"சௌக்கியந்தானுங்களா?" சுரமற்ற குரலில் குத்தலான மரியாதைப் பன்மையைப் பிரயோகித்தவாறு கேட்டார் சிவானந்தக் கவுண்டர்.

"இருக்கிறேன்" என்று எதிர்த் திண்ணையைப் பார்த்தவாறு பதில் சொன்னான் பஞ்சாட்சரம்.

"ஐயா, இருவைப் பிரகாரம் என்னிக்கும் கோர்ட் வாசலேறி அறியாத சிவானந்தம் நாயா அலைஞ்சி, சொத்தையும் சொந்தத்தையும் தோத்தாப்பிலே, நாளைக்கு வீட்டையும் தோக்கப் போறேன். கப்பராய மென்றினி போறீங்க?"

அழைப்பிலும் ஆரம்பத்திலும் இருந்த பக்குவம் குலைந்து, நெஞ்சில் புகைந்த குமுறலைக் கொட்டத் தொடங்கினார் சிவானந்தக் கவுண்டர்.

"நான் உங்களிடம் நேரேயே சொன்னேன். தபால் எழுதினேன். நாலு பேரை வைச்சு விசாரிக்கப் பார்த்தேன். ஐயா, இது எங்க தாத்தா கட்டின வீடு. அவரையே பலி வாங்கிக் கொண்ட வீடு. உங்களைக் கோர்ட்டுக்கு இழுக்கணும்னு நான் ஆசைப்படவில்லே. உங்க ஒருத்தருக்கு மட்டும் இவ்வளவு பெரிய வீடு தேவை யிருக்காது. அதற்குப் பதிலாக வேறே ஒரு சின்ன வீடு வாங்கித் தர்றதா உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். ஐயா, நான் சொத்தாசை பிடிச்சு அலையலே. எனக்கு வீடு வேணும்னு. இதைவிட அருமையான பங்களாவை நான் தொழில் நடத்தற மதுரையிலே கட்டிக்க முடியும். எந்த இன்ஜினியரும், எந்த டிராப்ட்ஸ்மேனும் பிளான் போட்டுத் தராமல் அவர் கட்டிய வீடு இது. உங்களை ஒரு தாத்தா மார்மேலும் தோள் மேலும் போட்டு வளர்த்து, ஒங்க சொத்திலே காலணா அனுபவிக்காமே, இப்படி ஒரு வீட்டிலே இறந்துட்டிருந்தா நீங்க என்னய்யா செய்வீங்க? இது எங்க பரம்பரையில் ஒசத்தியான செல்வம்" என்று கண்ணீர் மல்கக் கூறினான் பஞ்சாட்சரம்.

சிவானந்தக் கவுண்டர் அதற்கும் உடனே பதில் சொல்லவில்லை. அவன் பேச்சின் நியாயத்தைச் சீரிப்பது போல் சற்று மௌனமாய் இருந்தார். பின்பு விரக்தியான குரலில், "தம்பி! இந்த வீடு உங்க தாத்தா இறந்த வீடு, உண்மைதான் ஒத்துக்கறேன். ஆனால் எட்டு வருஷ காலமாக ஒண்ணுக்கப்புறம் ஒண்ணு என்னோட வாழ்ந்திருந்த என் பெண் குழந்தைகளை, வீதியடைக்கப் பந்தல் போட்டுக் கல்யாணம் செஞ்சு குடுத்திருக்கேன். கடைசிப் பெண்ணுக்குப் பண்ணித் தர்றதுக்குள்ளே, நாற்பது வருஷ காலமா என்னோட வாழ்ந்திருந்த உத்தமி இந்த வீட்டிலே கண்ணை மூடினாள்" என்று தோளில் போட்டிருந்த மேல் துண்டை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

"தம்பி, ஒரு காலத்திலே — ஏன் உனக்குத் தெரிஞ்சும் நான் ஒஹோன்னு வாழ்ந்தவன். மானத்தோட வாழ்ந்தவன். இது உனக்குச் சின்ன வயசு. என்னைப் போல் அறுவது வயசு இருந்து பார்த்தியானால் பழைய பெருமைன்னாலும் பணக்காரன் மானம்னாலும் என்னான்னு தெரியும். ஆறு வருஷங்களுக்குள்ளாறே ஒவ்வொருத்தரையா நான் வெளியே அனுப்பிச்சிட்டேன். தம்பி, பஞ்சாட்சரம் நீ கல்யாணமாகிக் குழந்தை குட்டி பெத்தவனில்லே. நான் ஆறு பெத்து ஆறையும் என் கண்ணுக்குச் சமமா மதிச்சு நடந்திருக்கேன். ஒவ்வொரு வருஷமா ஒவ்வொண்ணைப் பிரிஞ்சுக் கடைசியா என் பொழைப்புக்கே கொலுவிலே வச்ச அம்மன் மாதிரி இருந்த என் பெண்டாட்டியையும் பறி கொடுத்தேன். ரெண்டு வருஷமா இந்தப் பெரிய வீடும்,

கொல்லைப்புறத்திலே என் பெரிய பெண்ணும் சம்சாரமும் நட்ட புங்கமரம்தான் மிச்சமாயிருந்தது. அந்த மரம்தான் என் ரெண்டு வருஷத்துப் பாலைவன வாழ்க்கைக்கு நிழலா இருந்துச்சி. நெனைக்கப் பாக்கவும் சந்தோஷப் படவும் நான் அனாதையாயில்லே.

"மானத்தோட வாழ்ந்த என்னை நீ கோர்ட்டுக்கு இழுத்தே! ஜப்தி பண்ணி ஏலம் வச்சு, தெருத் திண்ணைக்குத் துரத்தினே. இது உன் தாத்தா கட்டின வீடாய் இருக்கலாம். எனக்காகக் கட்டினாரு. சுப்பராய மேஸ்திரின்னு பொறத்தியான் சொத்துக்கு ஆசைப்படாத புண்ணியவான்னு பேரு. அவரு தோளிலே வளர்ந்து, என் சம்சாரத்துப் பாலைக் குடிக்கப் பெரிய மனுஷனான நீ இன்னைக்கு இப்படி செய்யறியே, நீ என்ன வாழ்ந்துடுவே?" என்று ரத்தக் கொதிப்புக்கு ஆளானவர் போல விடுவிடுவென்று பேசிக்கொண்டே போனார் சிவானந்தக் கவுண்டர்.

"ஐயா, கொஞ்சம் பொறுங்க, ஒங்க மனைவி பாலைக் குடிச்சு வளர்ந்தேனா?" என்று கேட்டான் பஞ்சாட்சரம்.

"ஆமாப்பா, அது உன் சின்ன வயசுலே. அதை நீ மறந்துட்டிருப்பே. அவளுக்கு ஆண் குழந்தைங்கன்னு ரொம்ப ஆசை. அதுவும் சுப்பராய மேஸ்திரி பேரன், தாயில்லாக் குழந்தை பேரிலே பேரன்பு. நீ என்னை இந்த வீட்டை விட்டுத் தொரத்தினாலும், குண்டுக் கட்டாத் தூக்கிட்டுப் போயி ஏரியிலே போட்டாலும், இந்த வூட்டிலே தான் என் உயிர் போவும். இது சத்தியம் தம்பி!"

"ஐயா! ஒவ்வொருத்தனுக்கும் ஒவ்வொண்ணுத்தும் பேரிலே ஆசையும் பாசமும் இருக்கு. இந்த வீட்டின்பேரிலே ஒனக்கு எவ்வளவு பாத்தியதை இருக்குன்னு நீ நெனைக்கறியோ, அதுக்கு மேலே பத்துப் பங்காக, இதன் சொந்தக்காரன்கிற மொறையிலேயும், இதுலே வாழ்ந்து வர்ற மொறையிலேயும் எனக்குப் பாத்தியதை இருக்கு. நீ நாளைக்கு அம்மனை வச்சு ஏலம் போடலாம். வீட்டை ஏலம் போடலாம். மானத்தை ஏலம் போடலாம். ஆனால் என் உயிர்..." என்று இன்னும் ஏதோ பேச வந்தவர் பலமாக இருமியவாறே மார்பைப் பிடித்துக் கொண்டு நின்றுவிட்டார்.

"தம்பி, நீங்க எழுந்து வூட்டுக்குப்போங்க. நீங்க இருக்கிற வரைக்கும் அவர் இப்படித் தான் குமுறுவாரு. அவருக்கு ரத்த அழுக்கம். இப்படிப் பேசினா உயிருக்கே ஆபத்து" என்று அவன் மனத்தில் சுருக்கென்று தைப்பது போல் அவனை எச்சரித்து எழுப்பினார் கூட இருந்த ராமானுஜம்.

எழுந்திருக்க மனமில்லாமலும், மூச்சுத் திணறியவாறு மார்பைப் பிடித்துக் கொண்டிருக்கும் சிவானந்தத்தை ஆசுவாசப்படுத்த முடியாமலும், நெஞ்சில் தேங்கியிருந்த எண்ணங்களைச் சொல்ல முடியாமலும், தயங்கியவாறே படிக்கட்டிலிருந்து இறங்கி நடந்தான் பஞ்சாட்சரம்.

காலையில் முதல் வேலையாகச் சுந்தரேசனைப் பார்க்க அவன் வீட்டுக்குச் சென்றான் பஞ்சாட்சரம். சுந்தரேசன் அவனுக்காகத் தயாராய்க் குளித்து விட்டுக் காத்திருந்தான். ஏலம் பத்து மணிக்கு என்று விளம்பரப்படுத்தப்பட்டிருந்ததால், பொதுவாகப் போகலாமென்று அவனிடம் உட்கார்ந்து, இரவு அவனை விட்டு வந்த பின் சிவானந்தத்தைப் பார்த்துப் பேசிய சங்கதியைச் சொன்னான்.

"சுந்தரம்! என் முடிவை நான் மாத்திக் கிறதா தீர்மானம் பண்ணியிருக்கிறேன். அந்த வீட்டுக்கார அம்மா என் இளமைப் பிராயத்திலே எனக்குப் பாலூட்டிய எத்தனையோ தாய்மார்களிலே ஒருத்தி. அந்த மரியாதைக்காக மட்டுமில்லே. அன்னைத மனிதரா வீடு ஒன்னுதான் தன் வாழ்க்கையின் ஞாபகம்னு நெனைக்க அதே திண்ணை மேலே குளிரென்றும் மழையென்றும் பார்க்காமே, 'பிளட் பிரஷ'ரோட உட்கார்ந்திருக்காரே அவருக்காகவும் தான். அவர் ஒரு வார்த்தை சொன்னார் சுந்தரேசன். இந்த வீட்டை என் தாத்தா கட்டினார்; எனக்காகவோ தனக்காகவோ இல்லாமே சிவானந்தக் கவுண்டருக்காகக் கட்டினார் என்று. மெய் தான் சுந்தரேசா! தாத்தா பிறத்தியார் சொத்துக்கு ஆசைப்பட்டவரல்ல. அவர் பேரிலே நான் வச்ச பாசம் என்னை இப்படித் தப்பா திருப்பிடிச்சு. வா போயி, பத்திரத்தை வாங்கிச் சிவானந்தக் கவுண்டர் கையிலேயே ஒப்படைச்சுட்டு வரலாம்" என்றான்.

சுந்தரேசனின் முகம் மலர்ந்தது. அவன் மகிழ்ச்சியோடு, "நீ இந்த முடிவுக்கு வர வேண்டும் என்று ரொம்ப இஷ்டப் பட்டேன், பஞ்சாட்சரம். நல்லது. எழுந்திரு" என்று அவனுடன் புறப்பட்டான்.


பத்து மணிக்கு ஏலத்தில் விற்கவிருந்த சிவானந்தக் கவுண்டரின் பெரிய வீட்டுத் திண்ணையில் கூட்டம் கூடியிருந்தது. சிவானந்தக் கவுண்டர் கம்பளி விரிப்பின் மீது படுத்திருந்தார். பற்கள் தெரிய ஒரு சிரிப்பு — அதை இளிப்பு என்றால் பொருந்தும், அந்த முகத்தில் தெரிந்தது. யாரும் ஏலம் கேட்க வரவில்லை. செத்த பிணத்தைச் சுற்றியழுது ஆசாரக் கடனைக் கழிக்க வந்திருந்தார்கள். ஆம்! சிவானந்தக் கவுண்டர் அவருடைய மானம் ஏலம் போகு முன்பு, தம் வீட்டின் திண்ணையிலேயே மாண்டு போனார்.

பஞ்சாட்சரத்துக்கு அந்தச் சிரிப்பைப் பார்க்கப் பயமாக இருந்தது. நெஞ்சைக் குடையும் ஏளனம் அதில் தெரிந்தது. "சுந்தரேசா! அந்தச் சிரிப்பைப் பார்த்தாயா?" என்று நடுங்கிய குரலில் சிவானந்தக் கவுண்டரின் முகத்தில் ஸ்தம்பித்திருந்த சிரிப்பைக் காட்டினான்.

அந்தச் சிரிப்பு, பிறத்தியார் சொத்துக்கு ஆசைப்படாத சுப்பராய மேஸ்திரி பேரனைப் பார்த்துச் சிரித்த சிரிப்பா? இல்லை, சாவைப் பார்த்துச் சிரித்த சிரிப்பா? அந்தச் சிரிப்பு, தன் தாத்தாவை வென்ற சிவானந்தம் சிரித்த சிரிப்பென்றே எண்ணினான் பஞ்சாட்சரம். எதிர்ப்பட்ட சூரிய ஒளியில் அந்தப் பிரம்மாண்ட வீட்டு முகப்பின் நிழல் வீதியில் விழுந்தது. சுப்பராய மேஸ்திரி தலை குனிந்து நிற்பது போல் அவன் நெஞ்சில் ஒரு காட்சி ஓடியது.

நீண்ட நாட்கள் வரை அந்த வீட்டின் பெரிய பூட்டுத் தொங்கிக் கொண்டிருந்தது. ஒருநாள் மாகாளி கோயில் தர்மகர்த்தா பூசாரி தொடர வீட்டைத் திறந்தபோது தான் பஞ்சாட்சரம் அதைக் கோயிலுக்கு எழுதி வைத்து விட்டான் என்ற விஷயம் பரவியது. அந்த வீட்டைச் சுப்பராய மேஸ்திரி தனக்காகவோ, தன் பேரனுக்காகவோ, சிவானந்தத்துக்காகவோ கட்டவில்லை.





இளவரசி குந்தவை

பண்டைத் தமிழகத்தின் கலை மிகு வரலாற்றுக் கதைகள் சில இந்நூலில் அடங்கியிருக்கின்றன. புலவர் அரிசில்கிழாரைப் பற்றிய கதை மிகவும் நன்றாயிருக்கிறது. சேர மன்னனின் தமிழ்ப் பற்றும் வண்மையும், அக்கதையின் மூலம் நன்கு வெளிப்படுகின்றன.

நூலின் முதல் கதையான ''இளவரசி குந்தவை'' நாடக இயலில் உருவாகி நல்லதொரு முடிவுடன் அமைந்திருக்கிறது.

இந்த நூலில் அடங்கியிருக்கும் எட்டுச் சிறு கதைகளும் தமிழ் மண்ணின் மணத்தையே அடிநாதமாகக் கொண்டிருப்பது பாராட்டுக்குரியது. சோழப் பேரரசின் பெருமை, அம்மன்னர்களின் கலை உணர்வு, உயர்ந்த மனப்பண்பு ஆகியவற்றைச் சில கதைகள் சுவாரசியமாக விளக்குகின்றன. பௌத்த மதம் பரவிய கதையை ஒவ்வொருவரும் படித்துப் பார்க்க வேண்டும். இச்சிறு நூலில் அச்சுப் பிழைகள் மலிந்திருப்பது மெச்சும்படியாயில்லை.

ஆசிரியர்: வே. ரங்கராஜன்; பிரசுரம்: இமயப் பதிப்பகம், நாகப்பட்டினம்; விலை: ரூ. 2 00.

நல்ல மனைவி

மாடு முட்டிக் குற்றுயிராகி விட்ட ஒரு தந்தைக்கு இரு புதல்வர்கள். சாவதற்கு முன் மூத்தவனை அழைத்துத் தம்பியை நன்றாகப் படிக்க வைத்து ஆளாக்குவதாகச் சத்தியம் செய் என்று கை அடித்து வாங்கிக் கொள்கிறார். அடுத்த கணம் தலையைச் சாய்க்கிறார். நீங்கள் பார்த்த ஏதாவதொரு திரைப்படம் நினைவுக்கு வருகிறதா?

தம்பியின் படிப்பை உத்தேசித்துப் படிப்பு வாசனையற்ற விவசாயத் தமையன் தன் சக்திக்கும் அப்பாற்பட்டுக் கடன் வாங்குகிறான். கேட்டதையெல்லாம் தம்பிக்குக் கொடுத்து கடனாளியாகி ஒரு நாள் திருடனாகவே கூட மாறுகிறான். இக்காட்சியையும் ஏதாவது திரைப்படத்தில் கண்டதில்லையோ?

கல்லூரிப் படிப்புக்காகப் பட்டணம் செல்பவன், ரயிலில் ஓர் அழகியைச் சந்திப்பதும், அதன் உடன் நிகழ்ச்சியாக அவன் தங்கும் ஹோட்டலில் அவள் தங்குவதும், அவன் சேரும் கல்லூரி, ஹாஸ்டல் இவைகளில் அவளும் சேருவதும், காதலித்துக் கடைசியில் கல்யாணமே செய்து கொள்வதும் — இக்காட்சிகளையெல்லாம் நீங்கள் கட்டாயம் ஏதாவது திரைப்படத்தில் கண்டிருப்பீர்கள்.

அது மட்டுமா? இந்த நிகழ்ச்சிகளுக்கிடையில், தமையனுக்கு ஒரு குழந்தை பிறப்பதும், அந்தக் அக்கிரிக் குழந்தையினால் தான், குடும்பம் கடன்பட்டுக் குட்டிச் சுவராகியது என்று தீர்மானித்து அதைத் துரவில் எறிவதும், அந்தக் குழந்தையைக் காப்பாற்ற முன் கூட்டியே ஒருவன் துரவுக்குள் தூண்டில் போட்டு மீன் பிடிப்பதும் திரைப்படக் காட்சிக்கு ஏற்றதாகத் தோன்றவில்லையா?

அண்ணன் சிறை செல்வதும், அண்ணி ஒரு வீட்டில் வேலை பார்ப்பதும், அந்த வீட்டுக் கல்யாணத்துக்குத் தம்பி போக அண்ணி, 'தம்பி' என்று அழைக்கப் போய்க் கன்னத்தில் ஓர் அறை வாங்கிக் கொள்வதும் மாமனாரின் பேருதவியினால், தம்பி ஜெயிலராவதும், அதே சிறையில் அண்ணன் கல் உடைப்பதும், ஜெயிலரின் மனைவி சாவியை எடுத்துப்போய்ச் சிறைக் கதவைத் திறப்பதும், அண்ணன் தப்பியோடுவதும், அப்புறம் அண்ணனும் அண்ணியும், தம்பியும், தம்பி மனைவியும் சேருவதும், இப்படியாகத் தானே கதை சுபமாக முடிவதும் எந்தத் திரைப் படத்தில் என்றுதானே கேட்கிறீர்கள்?

தோசைத் திருப்பமாக வெளி வந்து கொண்டிருக்கும் எந்தத் தமிழ்ப் படத்தில் அல்லது தமிழ்ப் படங்களில் இந்தக் காட்சிகள் வருகின்றன என்று மூளையை உடைத்துக் கொள்வதைக் காட்டிலும், கவி கா. மு. ஷெரீப் எழுதியுள்ள 'நல்ல மனைவி' என்ற இந்த நூலைப் படித்தால், பல படங்களை ஒருங்கே கண்ட உணர்வு ஏற்படும். நான்கே ரூபாயில் பல படங்களைப் பார்க்கும் இன்ப உணர்வு ஏற்பட்டால் அது கொள்ளை மலிவுதானே?

வெளியீடு: இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை – 4. விலை: ரூ. 4–0–0.


உருவகக் கதைகள்

மனிதப் பிறவியைப் பாத்திரமாகக் கொண்ட கதைகள்தான் இயல்பாக எழுதப்படுகின்றன. ஆனால், அஃறிணையான மரம், செடி, கொடி, மொட்டு, மலர், மண் ஆகியவைகளைப் பாத்திரங்களாகக் கொண்ட கதைகள் வந்தால் சுவாரசியமாக இருக்குமா என்ற சந்தேகம் யாருக்கும் எழலாம்.

இந்த நூலில் உள்ள உருவகக் கதைகள் அந்த ஐயத்தை அறவே போக்கி விடும். ''துறவு'', ''பலர் காண வரும் பவனி'', ''அரசனும் ஆண்டியும்'', ''ரசிகன்'', ''பகற் கனவு'' என்ற கதைகள் சிந்தனைக்கு விருந்தாக இருக்கின்றன. இக்கதைகளைப் படைத்த ஆசிரியரின் முயற்சி பாராட்டுக்குரியது.

எழுதியவர்: க. இரத்தினம்; விற்பனை உரிமை: தமிழகம், 59, பிராட்வே, சென்னை 1 விலை: ரூ. 1.50

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.



உங்கள் இரவை பிரகாசமாகச் செய்யுங்கள்...
உங்கள் பகல் வேளையையும் பிரகாசமாக்குங்கள்..
Osram உபயோகித்து இருளை அகற்றுங்கள்...
Osram
அதிசய விளக்கை பொருத்துங்கள்
அது பிரகாசமான ஒளியை தருகிறது.
இப்பொழுது 80, 125 வாட்டுகளில் நிறம் சரிப்படுத்தின மெர்குறி வேப்பர் விளக்குகளும், அவசியமான. ஆனால் இப்பொழுது ஏராளமாக கொடுக்க முடியாத OSRAM ப்ளோரஸென்ட் டியூபுகளும், இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது.
ஒரு G.E.C. தயாரிப்பு
தி ஜெனரல் எலெக்ட்ரிக் கம்பனி ஆப் இந்தியா பிரைவேட் லிட்.,

REGISTERED M 4392
Registered ... in Ceylon